Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -16 | வெள்ளி - 37 | 04 -10 - நவம்பர் - 2005





# நூல் நயம்

| | |
|---|---|
| நூல் | : பஞ்சாட்சரம் பாநாடகங்கள் |
| ஆசிரியர் | : பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் |
| விலை | : 100ரூபா |

"நாடறிந்த கவிஞரென்ற நிலையிலிருந்து உலகறிந்த கவிஞர் என்ற நிலைக்கு இன்று உயர்ந்து நிற்கிறார் பண்டிதர் பஞ்சாட்சரம். விடுதலை வேட்கை கொண்ட இக்கவிஞரின் கவிதைகள், விடுதலைக் கீதங்கள், கட்டுரைகள் என்பன சர்வதேசத் தமிழ் ஊடகங்களில் அடிக்கடி மீள் வெளியீடு செய்யப்பட்டு வருவதே இதற்குக் காரணமாகும். அவரது நூல்கள் வெளிநாடுகளிலும் விரைவில் வெளியிடப்பட உள்ளதாக அறிகிறேன். இன்று இங்கு வெளியிடப்படும் அவரது பஞ்சாட்சரம் பாநாடகங்கள் நூல் அவரது ஐம்பதாவது நூல் ஆயினும் இன்னும் வெளியீடு காண்பதற்கு அவரது பல நூல்கள் காத்திருப்பதும் நான் அறிந்த செய்தி. எவ்வாறாயினும் அவரது நூல்கள் 100 இலும் அதிகமாக வெளிவந்து சமூக மேம்பாட்டுக்கும் விடுதலைக்கும் உரமேற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்".

அண்மையில் இணுவில் மக்கள் நூலகமான அறிவாலய மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் ச.வே.பவின் 50 ஆவது நூலான "பஞ்சாட்சரம் பாநாடகங்கள்" வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி க.தேவராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




அறிவாலயத் தலைவர் இ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆசியுரையினைப் புலவர் பார்வதிநாத சிவமும், வாழ்த்துரையைச் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனும், வெளியீட்டுரையைப் பேராசிரியர் சபா ஜெயராசாவும் நூல் ஆய்வுரை களைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்தினர்.

# படித்ததில் பிடித்தது

## காலம் பயப்படுத்துகிறது

யாரோ காலமானார் என்ற செய்தி
என் எதிரில்
நட்சத்திரமாய் தொங்குகிறது.
காலம் என முதலில்
உணர்ந்தவன்
கபாலச் சூடு பொரியும்
ஆண்மை
நிறைந்தவனாய் இருந்திருப்பான்

சில சமயம் தோன்றுகிறது
காலம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதுபோல

ஆனால் பற்ற முடியாமல்
நழுவிப் போகிறது

எங்கையோ காத்திருக்கிறது
காதலுடன் மௌனம் சாதிக்கிறது

காலம் காலமாக
கடல் ஒலிக்கிறது

வெற்று வெளியில் மேகம் சஞ்சரிக்கிறது
கனத்த
காலப் பிரக்ஞையை எனக்குள்
விதைத்துவிட்டார்கள்.

எவ்வளவோ காலம் கடந்தும்
அறிந்துகொள்ள என்னவென்று
அது முளைக்கவே இல்லை

ஆனால் விலகா கிரஹணமாய்
என் எதிரில்
தொங்கிக் கொண்டேதான் இருக்கிறது

யாரோ காலமான செய்தி
நானும் ஒரு காலத்தில்
காலமாகிவிடுவேனோ என்பதில்
முளைத்துவிடுகிற பயம்
சொட்டு சொட்டாய் உதிர
காத்திருக்கிறது-காலம் வராமல்.

தமிழில்:- இ.ரஜித்
ஆங்கிலத்தில்:- யே வூ பெய்ஜிங்



# மருத்துவம்

## அல்சர் தொடர்பாக புதிய கண்டுபிடிப்பு

இந்த வருடம் மருத்துவத்திற்கான நோபல்பரிசு அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளான ராவின் வோரன் மற்றும் பாரிமார்ஷல் என்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வயிறு மற்றும் குடலில் ஏற்படும் ஆறாதபுண்களுக்கு (அல்சர்) காரணம் ஒரு வகை பக்றீரியா என்பதை இவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எலிக்கோபாக்ரர் பைலூரி எனப்படும் இந்தப் பக்றீரியா உலகின் ஐம்பது சதவீத மனிதர்களின் வயிற்றில் காணப்படுவதாகவும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இந்தப் பக்றீரியா கிட்டத்தட்ட எல்லோர் வயிற்றிலும் காணப் படுவதாகவும் இவ் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

வயிறு மற்றும் குடல் புண் என்பவை உடலில் ஏற்படும் ஒருவகை நோய் என்று இதுவரை இருந்து வந்த கருத்தை இவர்களது கண்டு பிடிப்பு நிராகரித்துள்ளது. இவை பக்றீரியாவால் ஏற்படும் ஒருவகை தொற்று நோய் என்று நிரூபித்துள்ள இவர்கள் இந்த குறிப்பிட்ட பக்றீரியாவை உடலிலிருந்து அகற்றுவதன் மூலம் இதை முழுமையாகக் குணப்படுத்த முடியும் என்றும் செய்து காட்டியிருக்கின்றார்கள்.

வயிறு மற்றும் குடல் புண்களால் பாதிக்கப்பட்டுள்ள வளரும் நாடுகளைச் சேர்ந்த கோடிக்கணக்கானவர்களுக்கு இவர்களது புதிய கண்டுபிடிப்பு நல்ல நம்பிக்கையை கொடுத்திருக்கிறது.

இந்த முக்கியத்துவம் பற்றி சென்னையைச் சேர்ந்த ஒருவைத்திய பேராசிரியர் கூறும் போது இந்தப் புதிய கண்டுபிடிப்பினால் மேற்படி நுண்கிருமிகளால் குடல் மற்றும் வயிறு என்பவற்றில் புற்று நோய்கள் ஏற்படுகிறது என்பதனை கண்டுபிடித்துள்ளனர். இதுவரை காலமும் வயிறு மற்றும் குடல் புண்களுக்கு ஒருவகை அமிலம் தான் காரணம் என்று கூறப்பட்டு வந்தது. இதனால் இதுவரை காலமும் அவ்வமிலத்தன்மையை கட்டுப் படுத்துவதற்கே மருந்துக்கள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இனி அக்கிருமிகளை அழிப்பதற்காகவும் சேர்த்து மருந்துகள் வழங்கலாம். இதனால் உலகில் பெரும்பாலான இந்த நோயினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதோடு வயிறு மற்றும் குடல் புற்று நோயைத் தடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# பலதும் பத்தும்

## எயிட்ஸ் கிருமிகள் பலவீனமடைகின்றன

எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் HIV கிருமி நாட்கள் செல்லச் செல்ல ஓரளவு பலவீனம் அடைந்து வருவதாக சமீபத்தய ஆய்வுகள் கூறுகின்றன.

சில ஆராய்ச்சியாளர்கள் எயிட்ஸ் நோய் முதலில் ஏற்பட ஆண்டான 1980களிலுள்ள HIV கிருமிகளையையும் 2003 எயிட்ஸ் தொற்றுள்ளவர்களின் HIV கிருமிகளையும் ஆய்வுக்குட்படுத்தினார்கள். இதில் 2003ஆம் ஆண்டு HIV கிருமிகள் பல்கிப்பெருகும் வாய்ப்புகள் குறைந்திருப்பதாகவும் மருந்துக்கு கட்டுப்படும் தன்மை சற்று அதிகரித்திருப்பதாகவும் இவர்கள் கண்டறிந்துள்ளனர்.

அதேவேளை இவ்வாய்வு வெறும் பன்னிரண்டு மாதிரிகளை மட்டும் கொண்டு செய்யப்பட்டுள்ளதால் இதை இறுதியான முடிவாக ஏற்றுக் கொள்ள் முடியாது எனக் கூறும்வேறு சில விஞ்ஞானிகள் HIV கிருமி மருந்துக்கு கட்டுப்பட மறுக்கும் அளவு கூடியிருக்கிறது என வேறு சில ஆய்வுகளின் முடிவுகளையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

பொதுவாக நோய்க் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரவும் போது அதன் வீரியம் குறையும் சாத்தியம் இருப்பதை கடந்த காலத்தில் பெரியம்மை, காசநோய் போன்ற நோய்க்கிருமிகளில் கண்டதை சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள் HIV கிருமிக்கும் அதே நிலை ஏற்படக் கூடும் என்றும் இன்னும் சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகளில் HIV கிருமிகளின் உயிர் கொல்லித் தன்மை படிப்படியாக மறைந்து விடலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ஆனால் இதை மறுக்கும் விஞ்ஞானிகளோ HIV கிருமி விடயத்தில் இப்படி அவசரப்பட்டு முடிவு எதனையும் எடுக்க முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றார்கள்.

HIV தொற்று இறப்பில் முடியும் என்ற யதார்த்தத்தை சுட்டிக் காட்டும் இவர்கள் எயிட்ஸ்க்கு எதிரான நடவடிக்கைகளில் எவ்வித தொய்வும் ஏற்படக் கூடாது என்றும் கூறுகின்றனர்.

## நிராயுத பாணி

இந்த தேசத்தில்
நீதி மன்றக் கட்டடங்கள்
குனிந்துவிட்டன.
நிதி சேர்க்கும் கட்டங்களோ
நிமிர்ந்து நிற்கின்றன...

நெஞ்சை நிமிர்த்தியும்
தலையைத் தாழ்த்தியும்
நீ
நிற்பது மாதிரி!

இந்த நந்தவனத்தில்
பூக்களின் பேர்களைச்
சொல்லிச் சொல்லி
புலம்பிக்கொண்டிருப்பதே
வண்டுகளின்
பொழுதுபோக்காகிவிட்டது.

உன்னுடைய நினைவுகள்
இரவின் கால்களை
ஒடித்துவிட்டன!
கண்களோ
கலண்டர் தாள்களை
கட்டிப்போட்டன!

சந்திரனின்
தலையைக்கண்டதும்
அல்லியின் இதழ்களே
அவிழ்ந்துகொள்கின்றன

நான்
முன்னால் வந்து
நின்ற பிறகும்
உன்
முகத்திரை ஏனோ
மூடியே உள்ளது?

நிராயுத பாணியாகத்தான்
நிற்கிறேன்.

இன்றுபோய் நாளைவா!
என்று
சொல்லிவிடாதே!

இன்றுவா! நாளையும்வா!
என்றுசொல்!

மு.மேத்தா

# எல்லாத் தேர்தல்களிலும் நடந்தது என்ன..?



இலங்கையின் ஐந்தாவது சனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நடவடிக்கைகள் மிகத் தீவிர முயற்சிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் அறிந்து கொள்கின்றோம். எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் சுப நாளில் சுபநேரத்தில் பௌத்த மத பீடாதிபதிகளின் ஆசீர்வாதத்துடன் சனாதிபதியாகப் பதவி ஏற்பதற்குரிய சந்தர்ப்பத்தை சிங்களப் பெரும்பான்மைவாக்காளர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அல்லது மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கக் காத்திருக்கின்றனர். முன்பு ஜே.ஆர் செய்தது போல புதிய சனாதிபதி கண்டி தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றவும் கூடும்.

இந்தச் சனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள்-குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதி தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குப் பலத்தைப் பிரயோகிக்க வேண்டியது அவசியமானது என்ற கருத்து சில ஊடகங்களில் ஊடுருவி வெளிவருவதை அவதானிக்க முடிகிறது.

1956 -ஆனி- ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலகட்டத்துக்குப் பின்னரான காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழர் தரப்புக்கு முக்கியமாகத் தமிழரசுக் கட்சிக்கும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் மக்கள் தமது பெரும்பான்மையானவாக்குகளை வழங்கி நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்குப் பலம் சேர்த்து தமது தரப்பு நியாயத்தை சர்வதேசம் விளங்கும் வகையில் வெளிப்படுத்தி வந்தனர் என்பதை இச் சந்தர்ப்பத்தில் விளங்குதல் அவசியமானதாகும்.

தமிழ் மக்கள் தமது வாக்குப் பலத்தை வெளிப்படுத்தி வந்த போதிலும் ஆளும் சிங்கள மேலாண்மை வாதக்கட்சிகள் இவற்றை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பதே கடந்த கால வரலாறு. தத்தமது ஆட்சிக்கு முண்டு கொடுப்பதற்காக தமிழ்க் கட்சிகளின் தயவை நாடிப் பெற்ற போதிலும் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அவர்கள் எள்ளளவும் மனத் தூய்மையுடன் செயற்படவில்லை. இவற்றைப் புரிவதற்கு கடந்த காலத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் தயவை நாடிநின்றது. அவ்வேளையில்தான் டட்லி சேனநாயக்காவுக்கும் தந்தை செல்வநாயகத்துக்கும் இடையே மாவட்டசபை தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 17 பேர் கொண்ட அந்த அமைச்சரவையில் தமிழரசுக் கட்சி சார்பில் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார். அதில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இராஜாங்க அமைச்சரானார். தமிழர் பிரச்சினைக்கு மாவட்டசபை தீர்வாகத் தரலாம் என்ற இணக்கம் காணப்பட்டதுடன் திருக்கோணேஸ்வரம் புனித பிரதேசமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படவும் இல்லை. திருக்கோணேஸ்வரம் புனித பிரதேசம் ஆக்கப்படவுமில்லை. முரண்பாடு முற்றியது. அமைச்சர் திருச்செல்வம் அமைச்சர் பதவியை இராஜினாமாச செய்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கூடுதல்பெரும்பான்மை வாக்குப் பலத்தை தமிழ் பேசும் வாக்காளர்கள் தமிழரசுக் கட்சிக்கு வழங்கி தமது வாக்குப் பலத்தைக் காட்டியிருந்தனர். திருகோணமலை மாவட்டத்தில் எம்.எச்.முகம்மதலி என்பவர் கூட தமிழரசுக் கட்சி சார்பில் எம்.பியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் வாக்களித்து அரசியலில் பங்கெடுத்தனர். நடந்தது என்ன? தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குகள் செல்லாக்காசாக்கப் பட்டன.

1970- ஆம் ஆண்டுத் தேர்தல் வந்தது. மிகுந்த ஆரவாரத்துடன் இடது சாரிக் கட்சிகளையும் கூட்டுச் சேர்த்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பதவிக்குவந்தார். சமதர்மத்தை வலியுறுத்தி வந்த லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த இரட்டைப் பட்டதாரி N.M பெரேரா நிதி அமைச்சரானார். கொல்வின் ஆர்.டி.சில்வா அரசமைப்பு அமைச்சரானார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீற்றர் கெனமன் வீடமைப்பு அமைச்சரானார்.

இப் பொதுத்தேர்தலிலும் தமிழ் வாக்காளர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி களையே கூடிய எண்ணிக்கையில் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பினர். அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றம் நவரங்ககலா மண்டபத்தில் கூடி புதிய அரசியல் யாப்பை 1972 இல் தயாரித்த போது தமிழ்ப் பிரதிநிதிகள் அதனைப் பகிஷ்கரித்தனர். அதாவது வடக்கு-கிழக்கு பகுதி தமிழ்ப் பேசும் வாக்காளர்கள் அதனைப் பகிஷ்கரித்தனர் எனலாம். இக்கால கட்டத்தில் தான் நாடாளுமன்றம் தேசிய அரசுப் பேரவை என்று நாமகரணம் சூட்டி அழைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் வாக்களித்து அரசியலில் பங்கெடுத்தனர். நடந்தது என்ன? தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் செல்லாக்காசாக்கப் பட்டன.

1977 இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான ஏழு வருட ஆட்சியை முறியடித்து ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்து 17 வருடங்களாக இக் கட்சி ஆட்சியை தொடர்ந்து நடாத்தியது.

நாடாளுமன்றத்தில் 5/6 பங்கு பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்த காரணத்தினால் அரசமைப்பின் சிறு திருத்தத்தின் மூலம் சனாதிபதித் தேர்தல் நடைபெறாமலேயே முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதியாக பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் முன்னிலையில் 4.2.1978 அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சனாதிபதிப்பதவியை ஏற்றுக் கொண்டார்.

பதவியை ஏற்றதுமே அவர் செய்த முதல் பணி சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு தண்டனை வழங்கி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முது கெலும்பை தட்டிப் பதம் பார்த்ததுதான் 1970 இல் பதவிக்குவந்து சிறிமாவோ தனது பதவிக்காலத்தை ஆறு வருடத்திலிருந்த ஏழுவருடமாக நீடித்தது. குறித்த பிரதான குற்றச் சாட்டை உள்ளடக்கிய விசாரணை யை மேற்கொள்வதற்கு சனாதிபதி ஆணைக் குழுவை நியமித்தார். அதன் விசாரணை அறிக்கையின் சிபாரிசுக்கு அமைய நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி 16.10.1980இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு 7 வருடங்களுக்கு குடியியல் உரிமையை ரத்துச் செய்தார். அதன் படி சிறிமாவின் அரசியல் ஈடுபாடு தடுக்கப்பட்டது.

இந்த ஆட்சிக் காலத்தில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 19 நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டதன் காரணமாக எதிர்க்கட்சி அந்தஸ்தை அது பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

1978 இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு மாற்றத்தின்படி பௌத்தம் அரச மதமானதும் விகிதாசாரக் தேர்தல்முறை அங்கீகரிக்கப்பட்டதும் இந்த ஆட்சிக்காலத்திலேயே தான். எதிர்க் கட்சிவரிசையிலிருந்த தமிழர் தரப்பு இம்மாற்றத்துக்கு தமது எதிர்ப்பை தெரிவித்தது. ஒப்புதல் வழங்கவில்லை. ஆனாலும் அது உதாசீனம் செய்யப்பட்டது.

சனாதிபதித் தேர்தல் நடக்காமலேயே சனாதிபதி பதவிக்குவந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனது பதவிக் காலத்தை தேர்தல் நடத்தாமல் தொடந்து நீடிப்பதற்காக 22.12.1982 இல் ஒரு சர்வஜனவாக்கெடுப்பை நடத்தி- விளக்குக்கு அல்லது குடத்துக்கு புள்ளடிகேட்டு- பெரும்பான்மை வாக்குகளின் படி 3.8.1993இலிருந்து மேலும் ஆறு வருடங்களுக்கு தனது பதவியை நீடித்துக்கொண்டார்.

தமது ஆட்சி அதிகாரத்தை நீடிக்கத் தேவையான உத்திகளைக் கையாளும் சிங்களத் தலைமைகள் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் நேர்மையான அணுகுமுறையைப் பேணினாரா? இந்திய அரசின் ஒத்துழைப்புடன் திம்பு பேச்சு வார்த்தையை நடாத்தினார். இரு வருடங்களாக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி வந்தார். சொல்லாமல் பேசாமல் சர்வகட்சி மாநாடு கலைக்கப் பட்டதாக அறிவித்துக்கொண்டார் ஜே.ஆர். தமிழ் வாக்காளப் பெருமக்களின் வாக்குப்பலம் ஆட்சியாளரால் மதிக்கப்பட்டதா?

தமிழ் மக்கள் வாக்களித்து அரசியலில் பங்கெடுத்தனர். நடந்தது என்ன? தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குகள் செல்லாக்கசாக்கப்பட்டன.

ஜே.ஆரின் பதவிக்காலம் முடிய பிரேமதாச பதவியைப் பிடித்தார். 1988 டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் சுமார் 26 இலட்சம் வாக்குகளைப் பெற்று பிரேமதாச சனாதிபதியானார். இந்த வாக்குகளில் வடக்குக் கிழக்கைத் தவிர்த்துப் பார்த்தாலும் கூட பல ஆயிரக்கணக்கான தமிழ் வாக்குகள் அவருக்குக் கிடைக்கவே செய்தன. இதன் பின்னர்.

1989- பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 28 இலட்சத்து 38 ஆயிரத்து ஐந்து வாக்குகள் பெற்றதன் ஊடாக 125ஆசனங்கள் பெற்று ஐ.தே.க ஆட்சியைக் பிடித்தது. டி.பி. விஜயதுங்க பிரதமரானார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு இலட்சத்து 88ஆயிரத்து 594 வாக்குகள் பெற்று ஒன்பது ஆசனங்களையும் போனஸ் ஆசனத்தையும் தட்டிக் கொண்டது.

இச் சந்தர்ப்பத்தில் இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கில் ஆக்கிரமிப்புப் படையாக நிலைகொண்டிருந்த சூழலும், விடுதலைப் புலிகளின் ஆயுத நடவடிக்கைகள் வேகம் பெற்றிருந்த சூழலும் தமிழ் மக்களின் தேர்தல் ஆர்வத்தை குறைத்து வைத்திருந்தது.

பிரேமதாச விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு முன்வந்தார். நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்த வாக்குப்பலத்தைவிட ஆயுதப்பலத்தைப் பெற்றிருந்த விடுதலைப் புலிகளின் தலைமையையே பேச்சு வார்த்தைக்கு அவர் நாடவேண்டியதாயிற்று.

ஒரு அரசுத்தலைவர் என்ற வகையில் 1990- பங்குனியில்- இந்திய இராணுவத்தை வெளியேறச் செய்த பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேசினார்.கொழும்புக்கு அழைத்து கொழும்பு கலதாரி ஹோட்டலில் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தை முறிந்து போகவே இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். தமிழ்ப் பகுதி மீது பொருளாதாரத்தடையை விதித்தார். இச் செயலானது தமிழ் மக்கள் வாழ்வதற்கான ஒரு குறித்த நிலப் பகுதி இங்கு இருக்கிறது என்பதும்

ஆறுமுகம்

அப்பகுதி. அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப்புலிகளின் செல்வாக்குக்கும் ஆளுகைக்கும் உட்பட்டிருக்கிறது என்பதும் அரசுத் அதலைவரால் ஏற்றுக்கொள்ளப் படுவதைப் புலப்படுத்துகிறது. 1993- மே மாதம் முதலாம் திகதி கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பிரேமதாச மரணத்தைத்தழுவினார். தமிழர் பிரச்சினைத் தீர்வு எதனையும் பெறவில்லை.

தமிழ் மக்கள் வாக்களித்து அரசியலில் பங்கெடுத்தனர். நடந்தது என்ன? தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் செல்லாக்காசாக்கப்படடன. இதன் காரணமாய் தமிழ் மக்களின் வாக்குப்பலம் இயல்பாகவே தனது தேவையைக் குறைத்துக் கொண்டது.

1994-இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவிக்கு வந்தார். சமாதான் விரும்பியாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், ஐ.தே.கவின் 17 வருட ஆட்சியில் பலருக்கு விரக்தி ஏற்பட்டதாலும், புதிய வாக்காளர்கள் தோற்றம் பெற்ற காரணத்தினாலும் சந்திரிகாதலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது.

வடக்குக் கிழக்கின் பெருநிலப் பகுதி விடுதலைப் புலிகளின் சுய கட்டுப்பாட்டில் உள்ளடங்கி இருந்ததால் 1994 தேர்தல் ஆரவாரம் இங்கு தென்படவில்லை. தமிழர் தரப்பு தமது அரசியல் நிலைப்பாட்டை வாக்குகள் மூலம் தெரிய வைக்க வேண்டிய பிரதான தேவை இருப்பதாக அவர்கள் கருதவில்லை. ஏனெனில் வாக்குப்பலம் உதாசீனப்படுத்தப்பட்டதால் இந்த வழியில் தமது சிரத்தையைச்செலுத்த தயாராயிருக்கவில்லை.

சமாதானத் தேவதையாகக் காட்டிக்கொண்ட சந்திரிகாவினால் சமாதான வாழ்வு தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை. மாறாக யாழ்ப்பாண குடாநாட்டின் மீதான அகோரமான படையெடுப்பும் அதனைத் தொடர்ந்ததான அவல நிலைகளையே தமிழ்மக்கள் அனுபவித்துக்கொண்டனர். சமாதான சகவாழ்வை ஏற்படுதத்டும் என்று அதிக பெரும்பாலான வாக்காளர்களால் வழங்கப்பட்ட வாக்குகள் என்று சொல்லப்பட்டவை ஆளும்தலைமையினால் செல்லாக்காசாக்கப்பட்டன. 38, லட்சத்து 87ஆயிரத்து 823 வாக்குகள் சமாதானத்துக்காக வழங்கப்பட்டவை என்று கருதப்பட்ட வாக்குகள் பயனிழக்கச் செய்யப்பட்டன.

சந்திரிகா சில பிரதிநிதிகள் மூலம் விடுதலைப் புலிகளுடன் பேசினார். பூநகரி வழியில் உள்ள இராணுவ அரண்கள் பின்னகர்த்தப்பட வேண்டும் என்பதில் அதிகார பலம் இல்லாத அதிகாரப் பிரதிநிதிகளால் தகுந்த பதில்வழங்க முடியவில்லை. பேச்சுவார்த்தை இறுக்கமடைந்து முறிவடைந்தது. பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 28 பொருட்கள் மக்களுக்கு வந்து சேர்வதற்கு முன்பே மீண்டும் தடைவிதிக்கப்பட்டது. மக்களின் வாக்குப்பலம் உதாசீனப்படுத்தப் பட்டது.

யாழ்பாணக் குடாநாட்டிலிருந்து ஐந்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு வந்து முகாம் விடுதிகளிலும். பள்ளிக் கூடங்களிலும் காடடர்ந்த பகுதிகளிலும், கடற்கரையோரப் பிரதேசங்களிலும் குடியிருக்கவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி ஆளுமரசு. ஜெயசிக்குறு, சத்ஜெய, சூரியக்கதிர் முதலான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ்மக்களுக்கு துன்பத்தை விளைவித்தனர். ஊரிழந்து உறவிழந்து, உடமையிழந்து இவ்வாறு அல்லலுற்று தமிழ் மக்கள் இருக்கையிலேயே சந்திரிகா அம்மையார் மற்றொரு தேர்தலை நடத்தினார்.

தனது பதவிக்காலத்துக்கு ஒரு வருடம்முன்னதாக 21.12. 1999 இல் சனாதிபதித்தேர்தலை நடத்தினார். இதில் பொதுசன ஐக்கிய முன்னணி 43லச்சத்து 212ஆயிரத்து 157 வாக்குகளைப்பெற்றது. தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவர், தமிழர் பிரச்சினைகள்தீர்க்கப்பட வேண்டுமென்று உரைத்தவர். தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே உகந்ததென்று இப்போது சொல்பவரான சந்திரிகா தனக்குக் கிடைத்த வாக்குகளின் பெறுமானத்தை மதிக்கவில்லையே.

இதன் பின்னர் 10.10.200 இல் மற்றொரு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இச் சந்தர்ப்பத்திலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது வாக்குப் பலத்தை ஒரே அணியில் திரட்டிக் காட்டவேண்டுமென்று ஊக்கம் கொள்ளவில்லை. மேலும் சந்திரிகா அம்மையாருக்குப்பின்னால் நின்ற கட்சிகள் பல தில்லுமுல்லுகள் செய்வதற்கும் வாய்ப்புகளும் இருந்தன.

இத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 39இலட்சத்து 901 வாக்குகளைப் பெற்று ஆளும் அதிகராம் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மொத்தமாக ஒரு

(22ஆம் பக்கம் பார்க்க)

# நறுக்கென...

## சந்திரிகாவா..? மார்க் அன்ரனியா..?



சனாதிபதி சந்திரிகா இப்போதெல்லாம் தன்னையொரு மார்க் அன்ரனியாகவே கருதிவிட்டார் போலுள்ளது.

ஏனெனில் இப்போதெல்லாம் தான் ஆட்சியில் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த எந்தெந்த விடயங்களையெல்லாம் விமர்சித்தாரோ, கண்டித்தாரோ அவற்றையெல்லாம் நன்மைகளாக பட்டியலிடத் தொடங்கிவிட்டார்.

அதாவது ரணிலை எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கவேண்டுமென்பதற்காக பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் அவரது கூட்டணிகளும் விமர்சித்து வருகின்றனவோ அவற்றையெல்லாம் ரணில் மக்களுக்குச் செய்த நன்மைகளாகக் காட்டும்படி ரணிலுக்கு ஆதரவாக நேரடியாக பிரச்சாரம் செய்யாது யுத்த நிறுத்தத்தை புகழ்ந்து பேசுவதும், புரிந்துணர்வு உடன்படிக்கையின் நன்மை பற்றி பேசுவதும் என அட்டகாசமாய் அம்மணி நடிக்கிறார்.

போகிற போக்கில் அம்மணி வரலாற்றில் இடம்பிடித்த மார்க் அன்ரனியையே தூக்கிஅடித்துவிடுவார் போலுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் ரணில் விக்கிரமசிங்க யூலியற் சீசரின் நிலையில் வைத்து சந்திரிகாவால் பார்க்கப்படுவதுதான். சந்திரிகா பார்க்கிறாரோ என்னவோ சிங்கள மக்கள் இந்த சனாதிபதித் தேர்தலில் ரணிலை அப்படித்தான் பார்க்கவேண்டும் என அவர் விரும்புகின்றார்.

சோலியன் குடும்பி சும்மா ஆடுமா என்பது போல பண்டாரநாயக்காக்களின் முதுசமாக இதுவரை பேணிப்பாதுகாத்து வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி கைநழுவிப் போகிறதே என்ற தாளமுடியாத சோகத்தால் அம்மணி எத்தனை வேடம் போடுகிறார்.

அம்மணி ஆடிய அட்டம் என்ன இப்போது அவர் படும் பாடு என்ன? நினைக்கவே பாவமாக இருக்கிறது.

ஆயினும் என்ன செய்வது ஓடிவரும் வெள்ளத்தில் அள்ளி எடுப்பது இலாபம் என்ற கணக்கில் ரணிலும் செயற்பட்டு வருகிறார். சந்திரிகாவை சந்திக்கிறார். தான் என்ன செய்யப்போகிறேன் என்பதை அம்மணிக்குப் பட்டியலிடுகிறார்.

சிறிலங்காவின் அரசியல் கட்சியே இப்போது மாறிவிட்டது. ஆனால் மக்களுக்குத்தான் ஏதேனும் விமோசனம் வருகிறதா என்றால் ஒன்றுமேயில்லை.

ஆட்சியைப் பிடிக்கவும், பதவியைக் கைப்பற்றவும் இத்தனை திட்டங்களை போட்டு செயற்படும் இந்த அரசியல் தலைவர்கள் மக்கள் நலனுக்காக கொஞ்சமேனும் சிந்திப்பார்களேயானால் இலங்கை சிங்கப்பூரென்ன சிங்காரப்பூரியாகவே மாறும். ஆனால் இவர்கள் மாறவேண்டுமே?

## எப்படித் தாங்க முடியும்..?



சும்மா இருந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் பண்டாரநாயக்க குடும்பத்தை விட்டுவைப்பதில்லையென முடிவெடுத்துவிட்டார் போலுள்ளது.

அதாவது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து அநுராபண்டரநாயக்க தேர்தல் பிரச்சாரம் செய்யவில்லையெனில் மகிந்த சனாதிபதியானதும் நாட்டின் பிரதமராக ஜே.வி.பியின் பிரச்சாரச்செயலர் விமல்வீரவன்ச அல்லது அமைச்சர் மங்கள சமரவீர தேர்ந்தெடுக்கப்படுவார்களென்று கூறியிருந்தார்.

பொறுப்பாளர்களோ பண்டாரநாயக்காக்கள் சந்திரிகாவுக்கு தம்பி அநுரா கடிதம் எழுத சந்திரிகா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுத என சுதந்திரக்கட்சியின் குத்து வெட்டுக்கள் சந்தி சிரிக்கிறது.

போதாதுக்கு ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே றப்பர் செருப்புடன் அரசியலுக்கு வந்தவர் என்றும் அவருக்கு அரசியல் கற்றுக்கொடுத்தவன் தானென்றும் அநுரா கத்தோகத்து என்று கத்தியுள்ளார்.

அது எப்படியோ மகிந்த ராஜபக்ஷவிடம் சனாதிபதி வேட்பாளர் பதவிக்கான இடம் கைமாறியதுடனேயே பண்டாரநாயக்காக்களின் மனதில் பயம் குடிகொண்டுவிட்டது.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா அரசியலுக்கு உதவாத தம்பியை வைத்துக்கொண்டு எதையும் செய்ய முடியாதவராய் திணறி வருகிறார்.

சந்திரிகாவுக்கு அடங்கியிருந்த சாதாரண அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாய்க்கு வந்தபடியெல்லாம் சீண்டிப்பார்க்கிறார்கள். சனாதிபதி சந்திரிகாவின் கைகளிலிருந்து பதவி போக முதலே அவரை செல்லாக்காசாக நினைத்து பலரும் செயற்பட்டு வருகிறார்கள்.

இதைத்தான் சொல்வது அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை பகைவனுமில்லை என்று. அதிகாரம் இருக்கும் போது பண்டார நாயக்காக்களை சுற்றிவந்தவர்கள் இப்போதெல்லாம் ராஜபக்ஷாக்களை நம்பத் தொடங்கி விட்டார்கள். இது பண்டார நாயக்காக்களின் அரசியலில் அஸ்தமனத்தைத்தான் காட்டுகிறது போலுள்ளது.

அது சரி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டது போல அதில் ஒரு நியாயம் இல்லாமல் இல்லை. ஏனெனில் ராஜபக்ஷாக்களும், வீரவன்ஷாக்களும் மகிந்தவின் வெற்றிக்காக பாடுபட்டு உழைக்கும்போது பண்டார நாயக்காக்கள் சும்மா இருந்து விட்டு சுகமான பிரதமர் பதவியைக் கைப்பற்ற கனவு கண்டால் இவர்கள் சும்மா விடுவார்களோ.

அதுதான் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேற்படி தெரிவித்திருக்கிறார். இதை எப்படித்தான் பண்டாரநாயக்காக்களால் தாங்கிக்கொள்ளமுடியும்.

## பொருத்தமான போட்டி..!





தேர்தலையொட்டி தென்னிலங்கையில் பிரதான இரண்டு தரப்புகளும் ஒரு கின்னஸ் சாதனைப் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. போலத் தெரிகிறது.

அதாவது, தேர்தல் தொடர்பான வன்முறைகளில் ஈடுபடுவது தொடர்பாகத்தான் இந்தக் கின்னஸ் சாதனை நடைபெறுகிறது போலுள்ளது. ஆனால் பொலிஸ் தரப்புதான் பதிவாளர்கள்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக வெளிவரும் தகவல்களின்படி ஒரு தரப்பு ஐந்நூறு முறைப்பாடுகளை பதிவுசெய்தால் மற்றொரு தரப்பினர் அதற்குக் கூடுதலான முறைப்பாடுகளை பதிவுசெய்வதில் முனைப்புக் காட்டுகின்றனராம். இந்த எண்ணிக்கையில் ஏற்படும் முனைப்புக்களின் முடிவில் வன்முறைகள்தான் அதிகரிக்கின்றனவாம்.

சபாஷ்...நல்லபோட்டி பொருத்தமான போட்டியும் கூட. ஏனெனில் இன வன்முறை, மத வன்முறை, கட்சி வன்முறை, குழு வன்முறை என இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலத்திலிருந்து வன்முறைகளைத்தூண்டியே அரசியல் இலாபம் தேடியவர்களுக்கு பொருத்தமான போட்டிதான்.

ஆனால், இதில் என்ன வேடிக்கையென்றால் அடிப்பதும் சிங்களவர்கள், அடிவாங்குவதும் சிங்களவர்கள், அதைப்பார்த்து சிரிப்பவர்களும் சிங்களவர்கள், என்ன வேடிக்கை.

யார் தலை உருண்டாலென்ன? எவர் உயிர் பிரிந்தாலென்ன அரசியலில் பதவிதான் முக்கியம் என கங்கணம் கட்டி செயற்படும் பிரதான இரண்டு கட்சிகளுமே தாம் பதவியைக் கைப்பற்றிவிட முனைப்புடன் செயற்பட்டு வரும்போது தங்கள் தங்கள் கட்சித் தொண்டர்கள் பற்றி எங்கே சிந்திக்கப்போகிறார்கள்.

இதனால்தானோ என்னவோ தேர்தல் வன்முறைகள் தொடர்பான விபரங்களை வெளிவிடுவதில்லை என பொலிஸ்மா அதிபர் முடிவெடுத்துள்ளாராம்.

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தைப் பொறுத்தவரை அது தொட்டால் எதுவும் விளங்காது என்பதுபோல அவர்களால் எந்தக் குற்றத்தின் துப்பும் துலக்கப்படுவதும் இல்லை. முடிவு காண்பதும் இல்லை. இதே வேகத்தில் தேர்தல் வன்முறை தொடர்பினை புள்ளி விபரங்களை வேறுவெளியிட்டால் அவர்களால் தடுக்கமுடியாது போன தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அம்பலத்துக்கு வருவதுடன் பொலிசாரின் வண்டவாளங்கள் தண்டவாளம்தான் ஏறும்.

அதுசரி இந்த தேர்தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பாவிலிருந்து தலைமைதாங்கி வந்திருக்கும் குஸ்னகருக்கு தெரியாதோ தேர்தல் வன்முறைகளை பொலிசார் வெளியிடுவதில்லை என முடிவெடுத்திருப்பது.

தெரிந்தால் தான் என்ன நடக்கப்போகிறது. நடைபெறும் தேர்தல் தென்னிலங்கையை மையமாகக் கொண்டதால் வாய்மூடி இருந்து விடுவார்கள்.ஆனால் கின்னஸ் சாதனை முடிவுதான் வெளிவரப்போவதில்லை.

## நேர்மை இல்லாதபோது..!



தேர்தல் நாட்டில் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகிறதோ இல்லையோ ஆனால் அரசியல் வாதிகள் பொய் பேசுவதிலிருந்து சிலவேளைகளில் அவர்களை அறியாமலேயே உண்மையை பேசவைத்துவிடுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொது இனக்கப்பாடு குறித்து பேசி வருவது யாமறிந்ததே.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை அவருக்கு நன்றாகவே தெரியும் சிங்கள தேசம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் பொது இணக்கப்பாட்டிற்கு வரமாட்டார்கள் என்பது.

ஆனாலும் ரணில் இந்த பொது இணக்கப்பாட்டு விசயத்தை விடுவதாக இல்லை. இந்த நிலையில் தான் பொறுத்து பொறுத்து பார்த்த மங்கள சமரவீர அண்மையில் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இரு கட்சிகளிடையே இணக்கப்பாட்டை உருவாக்க கடந்த பதினொரு ஆண்டுகளாக சனாதிபதி முயற்சித்த போதும் ஒவ்வொரு முயற்சியையும் நிராகரித்தவர் ரணில். ஆனால் இப்போது பொது இணக்கப்பாடு குறித்து பேசுவது நல்ல நகைச்சுவையாக இருக்கிறது என தெரிவித்துள்ளார்.

உண்மையில் மங்கள சமரவீர தெரிவித்ததில் உண்மை இல்லாமல் இல்லை. இரண்டு பிரதான கட்சிகளுமே இனப்பிரச்சினையை தீர்ப்பதில் எதிரெதிரான நிலைப்பாடுகளுடனேயே இருந்து வருகின்றன. ஆனால் இந்த இரு கட்சிகளிடையே இருக்கின்ற ஒரேயொரு பொது இணக்கப்பாடு என்று சொன்னால் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டிருக்கும் நிலைப்பாட்டை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கவேண்டும் என்பதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுள்ள நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவேண்டும் என்பதுமாக அடிப்படையில் இரண்டு கட்சிகளும் தீர்வு எந்தக் கட்சியின் தலைமையிலும் எட்டப்பட்டுவிடக் கூடாது என்பதில் மட்டும் இரண்டு கட்சிகளுக்குமிடையில் ஒரு பொது இணக்கப்பாடு இருக்கிறது.

இதனால்தானோ என்னவோ ரணில் விக்கிரமசிங்கவின் இந்த வாய்ச்சவடாலை மங்கள சமர வீர கிண்டலடித்துள்ளார். அத்தோடு இன்னுமொரு விடயத்தையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். 1997 இல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொண்டு வந்த திட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி சீர்குலைத்தது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரி இவ்வளவு விடயங்களை கூறிய மங்கள சமர வீர இன்னுமொரு விடயத்தையும் கூறியிருக்கலாம். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி சீர் குலைத்த விடயங்களை பட்டியலிட்டவர். ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சீர் குலைத்த விடயங்களையும் பட்டியலிட்டிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். மிக அண்மைய உதாரணங்கள் தானே ஏராளமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருக்கிறதே அதில் ஒன்றிரண்டையாவது வெளியில் விட்டிருக்கலாம். அவ்வாறு விட்டிருந்தால் கொஞ்ச நேர்மையையாவது காட்டியிருக்கும்.

அது சரி நேர்மையே இல்லாதபோது கொஞ்ச நேர்மை எங்கிருந்து வரப்போகிறது.

வேழினி

# இராணுவ இயலாமைக்குள் திணறும் அரச புலனாய்வு அமைப்பு

சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பின் உயர் அதிகாரி கேணல் ரிஸ்லி மீடின் கொழும்பு புறநகரான கிரிபத் கொடவில் வைத்து இனந்தெரியாதோரின் தாக்குதலிற்கு பலியாகியுள்ளார்.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பு இழந்த மிக உயர் அதிகாரியாக கேணல். ரிஸ்விமீடின் காணப்படுகிறார். கேணல் ரிஸ்லிமீடினின் மீதான தாக்குதலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை எப்போது போலவும் இப்போதும் படைத்தரப்பு குற்றம் சாட்டியுள்ளது. இதேவேளை கேணல் ரிஸ்லிமீடின் மீதான தாக்குதலில் பாதாள உலக குழுவும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளதுடன் பாதாள உலகக் குழுவின் தலைவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட சம்லியின் வாக்கு மூலத்தின்படி ஐஸ்மஞ்சு என்பரே கேணல் ரிஸ்லிமீடினை சுட்டுக்கொன்றுள்ளார். இப்போது இதில் முக்கியமான விடயம் கேணல் ரிஸ்லிமீடினின் மீதான தாக்குதல் பற்றிய புலன் விசாரணைகளைப்பற்றியதல்ல. சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பு சந்தித்துவரும் அதன் மூத்த உயர் அதிகாரிகளின் இழப்பால் இராணுவப் புலனாய்வு அமைப்பு சந்திக்கப்போகும் பின்னடைவுகளும் நெருக்கடிகளும் பற்றியதாகும்.



ஏனெனில் சிறிலங்கா புலனாய்வுத் துறை லெப்.கேணல் முத்தலிப்பை இழந்து குறுகிய காலத்திற்குள் கேணல்.ரிஸ்லி மீடினை இழந்திருக்கிறது.

கேணல்.ரிஸ்லி மீடினும், லெப்.கேணல் முத்தலிப்பும் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான புலனாய்வு நடவடிக்கைகளிலும், தொடரும் நிழல் யுத்தத்திலும் முக்கிய பங்கு வகித்தவர்கள்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் நடைபெற்றுவரும் நிழல் யுத்தம் காரணமாக உருவான அசாதாரண நிலையின் முக்கிய சூத்திரதாரிகள் இவர்களே.

வெளியுலகில் பெருமெடுப்பில் இவர்கள் பேசப்படாதபோதும் இவர்களின் இராணுவ புலனாய்வு இராணுவ நடவடிக்கைகள் நன்கு பிரசித்தி பெற்றதுடன் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர்கள்.

பல நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்களும் யுவதிகளும் காணாமற்போனதற்கும், பல்வேறு சிறைகளிலும் காரணமின்றி அடைக்கப்பட்டதிலும் முக்கிய பங்குவகித்தவர்கள்.அத்தோடு பூசாவதை முகாமில் கதாநயகர்களில் ஒருவர்தான் ரிஸ்லிமீடின் எனவும் கூறப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் சுமார் பதினேழு வரையிலான சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையைச் சார்ந்தவர்கள் தாக்குதல்கள் மூலம் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

கேணல் ரிஸ்லிமீடின் மீதான தாக்குதலுக்கு முன்னர் லெப்.கேணல். முத்தலிப்பின் இழப்பு புலனாய்வு அமைப்பு. சந்தித்த மிக மோசமான இராணுவப்பின்னடைவாகக் கருதப்பட்டுவந்த சூழலில் இப்போது கேணல் ரிஸ்லிமீடினை இழந்து சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பு இயலாமையினால் தவிக்கிறது.

ஏறத்தாழ சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பின் இயக்கத்திற்கு பிரதான குருதி வழங்கல்களைச் செய்யும் குருதி நாளங்கள் மிகக் கச்சிதமாக துண்டிக்கப்பட்டு வருகிறது.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பை பொறுத்தவரை இன்னும் பல மூத்த அதிகாரிகள் இருந்தபோதிலும் அந்த அமைப்புக்குள் வினைத்திறன் கூடிய அதிகாரியாகவும் வேகமான இயங்குதிறன் கொண்ட அதிகாரியாகவும் புலனாய்வுத்துறையின் புள்ளிகளின் அடிப்படையில் 6719.71 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தில் இருந்து வந்தவர் ரிஸ்லிமீடின்.

லெப்.கேணல் முத்தலிப்பிற்குப் பின்னர் கேணல் ரிஸ்லின் கொல்லப்பட்டிருப்பதால் இவரின் இழப்பு என்பது சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பின் செயற்பாடுகளை பாரிய அளவில் முடக்கச் செய்யவல்லது என்பதுடன் மிகமோசமான இராணுவத் தோல்வியை சந்திக்கின்ற ஒரு அமைப்பாக சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பைக்கொண்டு செல்லக்கூடியதாகும்.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பின் இந்த அதிகாரிகள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வேரறுக்கப்பாடுபட்ட முக்கிய அதிகாரிகள் என்பதோடு இவர்களின் செயற்பாட்டு களமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களே முதன்மைபெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நிரூபிக்கும் வகையில் கேணல் ரிஸ்லிமீடின் தொடர்ச்சியாக பத்து வருடங்கள் வடக்கு கிழக்கில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இவர் தமிழ் குழுக்களையும் தமிழ் உளவாளிகளையும் நேரடியாக கையாண்டு வந்தவர். அத்தோடு மிகவும், நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ் உளவாளிகளைக் கையாண்ட அனுபவமும் தேர்ச்சியும் கொண்டவர்களாகவும் ரிஸ்லி முத்தலிப் சிறிலங்காப் புலனாய்வு அமைப்பில் செயற்பட்டு வந்துள்ளார்கள். கொழும்பைத் தமது செயற்பாட்டுமையமாகக் கொண்டிருந்த போதும் இந்தப் புலனாய்வு அதிகாரிகள் ஒவ்வொருவருமே பிரத்தியேகமான நாசகார வலையமைப்புக்களை வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குள் விஸ்தரித்தே வைத்திருந்தனர்.

இதன் காரணமாகவே சிறிலங்கா அரசின் வடக்கு கிழக்கிற்கான புலனாய்வு அசைவியக்கம் என்பது இந்த அதிகாரிகளை நம்பியதாகவே இருந்து வந்தது. ஆனால் இப்போது கேணல் ரிஸ்லிமீடின் மிக லாவகமாக தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டிருப்பதன் மூலம் அதன் அசைவியக்கம் முடங்கிப் போகும் அளவுக்கு ஆட்டம் கண்டுள்ளது.

தொடரும் சமாதான காலத்தில் மிக வேகமாக இயங்கத் தொடங்கிய நிழல் யுத்தத்தில் எத்தரப் பின்கரம் வலுப்பெறுகிறதோ அவர்களின் இராணுவ மேலாண்மையே சக்திமிக்கதாகக் காணப்பட்டது. அத்தோடு இந்த நிழல் யுத்தத்தை முறியடிக்க வேண்டியிருப்பதோடு தொடர்ச்சியான இராணுவ சமநிலையை தக்க வைக்கவேண்டிய அரசியல், இராணுவ யதார்த்தம் காணப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக கிழக்கில் கருணா குழுவின் தோற்றத்தோடு சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிய ரிஸ்லின் மீடின் மற்றும் முத்தலிப் போன்றோர் கிழக்கில் அடிக்கடி புலிகள் இயக்க போராளிகள் மீது தாக்குதல்களை நடத்தி கிழக்கு புலிகளின் விலிமையான கட்டுப்பாட்டிற்குள் இல்லையென்ற தோற்றப்பாட்டை காட்ட முயன்று வந்தனர்.

இந்த இராணுவ யதார்த்தத்துக்குள் சிறிலங்கா புலனாய்வுஅமைப்பு சந்தித்துவரும் தொடர்ச்சி யான இழப்பு என்பது இராணுவ சமாந்தரத் திற்குள் அது சந்தித்துள்ள பாரிய பின்னடைவை காட்டுகிறது.

இதில் முக்கியமானது சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பது அரச புலனாய்வு மற்றும் இராணுவ இயந்திரத்துக்கு தெளிவாக புரிகிறபோதும் அதை முறியடிக்கமுடியாத இராணுவ இயலாமைக்குள் சிக்கித்திணறுகிறது அரச இராணுவ இயந்திரம்.

தொடர்ச்சியான தாக்குதல்களால் தமது சகாக்களை இழப்பதன் மூலம் சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பு தனது

**சிறி.இந்திரகுமார்**

கீர்த்தியை இழந்துபோவதுடன் அதன்மேல் போர்த்தப்படும் இராணுவ அவமானத்தைக்கூட களையமுடியாத ஒருநிலையிலேயே செயற்பட்டுவருகிறது.

இதேவேளை வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியில் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தும் தாக்குதல்தாரிகள் மாறுபட்ட தாக்குதல் உத்திகளை மேற்கொள்வதுடன் மிக நேர்த்தியாக தமது தாக்குதல் இலக்குகளுக்குள் புலனாய்வு அதிகாரிகளை வீழ்த்திவருகின்றனர்.

தாக்குதல் தாரிகளின் இந்த செயற்பாடானது சர்வதேச இராணுவப் புலனாய்வு செயற்பாடுகளின் தரம் வாய்ந்தவையாகவும் சக்தி மிக்கவையாகவும் காணப்படுகிறது.

இதுவரை வீழ்த்தப்பட்ட புலனாய்வுத் துறையினரின் மீதான தாக்குதல்களில் தாக்குதல்தாரிகள் குறிப்பிட்ட இலக்கை நோக்கி தாமே நகர்ந்து தாக்கும் முறையைக் கையாண்டவர்கள் கேணல்.ரிஸ்லிமீடினின் தாக்குதலின் போது இலக்கை தம் பக்கம் கவர்ந்து இலகுவாகச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர்.

இது தாக்குதல் தாரிகளின் தாக்கு திறன் உயரிய வளர்ச்சியடைந்திருப்பதைக் காட்டுகிறது. இவ்வாறே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட தூரத்தில் இருந்து குறிபார்த்துச்சுடும் முறைக்காக அவர்கள் தாக்குதலுக்காக' இடத்தை தேர்ந்தெடுத்தமை, சுடுவதற்காக அவர்கள் பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் பிற உபகரணங்கள் என்பவற்றோடு மிகக் கச்சிதமாகச் சுட்டுவீழ்த்தப்பட்டமை போன்றவற்றில் உயர் இராணுவ அறிவியல் வளர்ச்சியை காட்டியிருந்தனர்.

ஆனால் இந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பானது இனிவரும் காலங்களில் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்கப்போகிறது.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அமைப்பைப் பொறுத்தவரையில் அதன் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக புதிய நுட்பங்களை வகுக்கவேண்டிய கட்டாயத்திற்குள் இருக்கின்ற அதேவேளை அதன் அதிகாரிகளை பாதுகாப்பதற்கே தனது முழு நுட்பங்களையும் பயன்படுத்தவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஏனெனில் சிறிலங்காப் புலனாய்வுத்துறை இழந்த முத்தலிப், ரிஸ்லிமீடின், புளொட்மோகன் போன்றோர் புலனாய்வுத்துறையில் சக்தி மிக்கவர்களாக திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



| | |
|---|---|
| பெயர் : | கேணல் துவான் ரிஸ்லி |
| பெற்றோர்: | T.F.மீடின் |
| | றமீனா மீடின் |
| மனைவி: | ஷமீனா றசீத் |
| பிறந்ததினம்: | 27.7.1966 |
| சொந்த இடம்: | அம்பாந்தோட்ட |
| ஆரம்பக்கல்வி: | புனித அலோசியஸ் கல்லூரி |
| ஆர்வம் : | கிறிக்கெட், உதைபந்தாட்டம் கடேற் அணி. |
| 17.03.1986 | பயிலுனர் அதிகாரியாக இராணுவத்தில் இணைவு. சிறிலங்கா இலகு காலாட்படைஇல் 2ஆம் லெப் ஆக இணைவு. |
| 17.3.1989 | லெப்.ஆக பதவியுயர்வு. கூட்டு நடவடிக்கைகள் கட்டளையகம். புலனாய்வுப் பிரிவில் இணைப்பு. |
| 17.3.1992 | கப்டனாகப் பதவியுயர்வு |
| 17.3.1995 | மேஜராக பதவியுயர்வு படைய புலனாய்வுக்கோ இற்கு 4வருடங்கள் தலைமை தாங்கினார். |
| 1.5.2005 | லெப்.கேணலாக பதவியுயர்வு. ஸ்ராப் ஒப்பிசர்I ஆக MIC றெஜிமென்ற் தலைமையகத்தில் பணி. |
| 30.10.2005 | சுடப்பட்டு மரணம். |
| பெற்ற பதக்கங்கள்: | ★ரணசூர பதக்கம்(RSP) ★50ஆவது சுதந்திரதின பதக்கம, ★ஆயுதப்படைகளில் நீண்ட சேவை பதக்கம் ★இராணுவ 50ஆவது வருடவிழா பதக்கம் ★தேசபுத்திர விருது ★வடக்கு-கிழக்கு நடவடிக்கைகள் பதக்கம் ★பூரணபூமி பதக்கம் ★வடமராட்சி நடவடிக்கைப் பதக்கம் ★ரிவிரச நடவடிக்கைப் பதக்கம். |
| பெற்ற பயிற்சிகள்: | |
| 1.உள்ளூர் பயிற்சி நெறிகள் | |
| 2.பாகிஸ்தானில் | i.அதிகாரிகளுக்கான அடிப்படைப்புலனாய்வு பயிற்சிநெறி ii.புலனாய்வு ஆளணியினர் பயிற்சிநெறி. |
| 3.பங்களாதேஷில் | கிளர்ச்சி முடியடிப்பு புலனாய்வுப்பயிற்சி நெறி. |
| 4.இந்தியாவில் | இளநிலை கட்டளைப்பீட பயிற்சிநெறி. |
| சகோதரர்கள்: | |
| பிரிகேடியர் பாடில் மீடின்: | கட்டளையிடும் அதிகாரி 515 பிரிகேட். |
| அக்ரம் | : முன்னாள் ஸ்குவாட்ரன் லீடர் (சிறிலங்கா வான்படை) |

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 04. 11 . 2005

மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com


## "கெடுகுடி சொற்கேளாது"

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களை வடக்குக் கிழக்கு பகுதிகளிலிருந்து அகற்றுமாறு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசுக்கு செய்திருந்த பரிந்துரையை இராணுவத்தரப்பு ஏற்க முடியாது என தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தோடு இந்த சிபார்சினை செய்திருந்த இலங்கை போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழுவையும் இராணுவத்தரப்பு கடு மையாக விமர்சித்துள்ளது.

முன்னர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலையையடுத்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் ஸ்ரீபன் ஜோர் ஜெய்சன் இந்த ப் பரிந்துரையைச் செய்திருந்தார்.

கௌசல்யனின் கொலையை நன்கு அவதானித்ததன் பிரகாரமும் கிழக்கின் நிலைமையைக் கருத்தில் கொண்டும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்த பரிந்துரையைச் செய்யவேண்டிய நிலையிலிருந்தது.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதன் சரத்துக்களில் ஒன்றாக வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து ஆயுதக் குழுக்களை களையப்பட வேண்டிய பொறுப்பை அரசு ஆவண ரீதியாக ஒப்புக்கொண்டுள்ளது.

இதன்படி வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து ஆயுதக் குழுக் கள் அகற்றப்பட்டு யுத்தநிறுத்தம் செம்மையாக நடைமுறைப் படுத்தப்பட அரசு ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால் அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாததோடு இந்த ஆயுதக்குழுக்களின் தீவிரமான செயற் பாட்டை ஊக்குவித்து வருகிறது.

இதன் விளைவு பல விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள் போராளிகள் என்போர் பலியாகக் காரணமாக இருந்ததோடு இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து அரசியற்பணி போராளிகள் வெளியேற வேண்டிய நிலையும் தோற்றுவித் திருந்தது.

சமாதான பேச்சுக்கள் முடங்கியிருக்கும் சூழலில் யுத்த நிறுத்தம் முறிந்து போய்விடாது பாதுகாப்பதில் ஈடுபட்ட கண்காணிப்புக் குழுவிற்கு இந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடு பெரும் இடர்களை தோற்றுவித்திருந்தது.

இதேவேளை வடக்குக் கிழக்கு பகுதிகளில் இந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடு தொடர்பாக புலிகள் இயக்கம் பலமுறை ஆதாரங்களுடன் நிருபித்திருந்த போதிலும் அரசும் இராணுவத் தரப்பும் இத்தகைய ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை மறுத்தே வந்தனர். ஆனால் இப்போது வடக்குக்கிழக்குப் பகுதிகளி லிருந்து இந்த ஆயுதக் குழுக்களை அகற்ற முடியாது என தெரிவித் திருப்பதுடன் இந்த ஆயுதக் குழுக்கள் மூலமே வடக்கு-கிழக்கு பகுதிகளில் புலிகளின் செயற்பாடுகளை பற்றிய தகவல்களை அறிந்து வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலமாக அரசு இவ்வளவு காலமும் மறுத்து வந்த ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை ஒப்புக்கொண்டிருப்பதுடன் நிழல் யுத்தத்தின் சூத்திரதாரிகள் தாமே என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

உண்மையில் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து இந்த ஆயுதக் குழுக்கள் களையப்படாத வரை வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இது யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணு வதிலும் பாரிய சிக்கல்களைத் தோற்றுவிக்கும்.

இதை உணர்ந்தே யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு தனது பரிந்துரையைச் செய்திருந்தது.

ஆனால் இதனை ஏற்க முடியாது என அறிவிப்பதன் மூலமாக யுத்தநிறுத்தத்தை எப்படியாவது முறித்து விடுவதில் படைத்தரப்புக் குறியாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

அத்தோடு இதுவரை காலமும் யுத்தநிறுத்தத்திற்கு அச் சுறுத் தலாக இருப்பது அரச படைத்தரப்பு என்பதும் நிரூபணமாகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்துக்களின் படி மக்களின் வாழ்வாதாரங்களை விட்டு படையினர் வெளியேறாததுடன் அதன் அமுலாக்கத்திற்கும் இடையூறாகவே இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இப்போது கண்காணிப்புக்குழுவிற்குச் சவால் விடுக்கும் வகையில் படைத்தரப்பு ஆயுதக் குழுக்கள் வடக்குக் கிழக்கு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் எனத் தெரிப்பதன் மூலம் அரச படைகள் தொடர்ந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் செயற்படப்போகிறோம் என்பதை அறிவித்துள்ளனர்.

தவிர்க்க முடியாத ஒரு சோலியாக எம் முன்னே வந்து நிற்கிறது சிறிலங்காவின் சனாதிப தித் தேர்தல். இதன் முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கப்போவது தமிழ்ப் பகுதி வாக்குகளே எனவும்; அதிலும்குறிப்பாக விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளின் வாக்குகளே எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கருத்து சிறிலங்காவின் புலனாய் வுத்துறையினால் சந்திரிகா அம்மையாருக்கு அறிக்கையிடப்பட்டிருக்கிறது. எனவே தான் தமிழ் பகுதி- அதிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்களின் வாக்களிப்புப்பற்றி அதிகம் பேசப்படு கிறது; எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து செயற்படும் ஒரு பத்திரிகையாளர் குறிப்பிட்டார்; "இந்த இருவரில் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தமிழ் மக்கள் பிரயோகிக்கும் சனநாயகம் என்பது, தம்மை சுட்டுக்கொள்வதற்கு இந்த இரண்டில் எந்த ரவை சிறந்தது எனத் தேர்ந்தெடுப்பதற்கு ஒப்பானது" என்று. அதாவது, தெரிவு செய்யப்படவுள்ள இருவரும் தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் ஒருவருக்கொருவர் வேறானவர் களல்லர் என்பதுவும்; அவர்கள் பதவிக்கு வந்த பின்னர் செய்யப்போவது என்னவோ, தமிழர் களுக்கு விரோதமான செயற்பாடுகளே என்பதனையே அவர் சுட்டிக்காட்டினார்.

காணமுனையும் தீர்வோ சகல கட்சிகளுடனும் பேச்சு, காணப்படும் முடிவு சர்வசன வாக்கெ டுப்புக்கு விடப்படுதல் போன்ற 'மெகா சீரியல்' செயன்முறைகளைக் கொண்டிருக்கின்றன. இந்தச் சிந்தனைகளிலெல்லாம் மழிக்கப்பட்ட தலைக ளும் தாடிவளர்த்த முகங்களும் தெரிவதாகத் தமிழ் மக்கள் உணரத்தலைப்பட்டால் அது தப்பல்ல.

ஆனால்ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தக் கொள்கைகளில் நிற்பதென்பது மகிந்தவுக்கும் சாத்தியப்படுவதென்பது அரிது. தற்போது அவரால் கரித்துக் கொட்டப்படும் போர்நிறுத்த உடன்படிக்கையினைப் பற்றிப்பிடித்தபடிக்கு புலி களை இராஜதந்திர ரீதியாக மகிந்த அனுகித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் இதுவரை காலம் கண்டியும், கொழும்பும் ஆதிக்கம் செலுத்திய ஆட்சி பீடத்தை அம்பாந்தோட்டைக்கு வசதியா னதாக மாற்றியமைப்பதென்பது அவருக்கு சாத்தி யமானதாக இருக்காது. "பெந்தர ஆற்றுக்கு அக்கரைக்குப் போன பூனையையும் எம்வீட்டில் அடுக்கமாட்டோம்'' என்றும் கொழும்புச் சிங்களவர்களின் பிடியிலிருந்து ஆழ்தென்புலச் சிங்களவரான மகிந்த ஆட்சி இயந்திரத்தை கைப் பற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. இந்த உட்பகையினை அவர் வெல்ல வேண்டுமாயின் வெளிப்பகையான புலிகளுடன் பொருதும் தெரிவை அவரால் செய்யமுடியாமலேயே இருக்கும்.

# சனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் என்ன செய்யலாம்...?

**இந்த இருவேட்பாளர்களும் வெளியிட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞா பனங்களும், வழங்கும் வாக்குறுதிகளும் , மேடைகளில் முழங்கும் வார்த்தைகளும் நடைமுறைக்கிடப்படப் போவதில்லை என்பது எமக்கு மிக நன்றாகத் தெரிந்ததே. அவ்வாறிருக்கும்போது நாங்கள் ஏன் இதுபற்றி அலட்டிக்கொள்ள வேண்டும்?**

இந்த இருவேட்பாளர்களும் வெளியிட்டி ருக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களும், வழங்கும் வாக்குறுதிகளும் , மேடைகளில் முழங்கும் வார்த் தைகளும் நடைமுறைக்கிடப்படப் போவதில்லை என்பது எமக்கு மிக நன்றாகத் தெரிந்ததே. அவ்வாறிருக்கும்போது நாங்கள் ஏன் இது பற்றி அலட்டிக்கொள்ளவேண்டும்?

ஆனால் தமிழ் மக்கள் தமது இலக்கினை அடைந்துகொள்வதற்கு வசதியானதொரு அரசியல் கள நிலவரத்தைக் கொழும்பிலே ஏற்ப டுத்துவதற்கு இந்தத் தேர்தல் ஏதோ ஒருவகையில் உதவக்கூடுமாயின், அதனைச்செய்வது உசிதமா னதாக இருக்கக்கூடும்.

இந்தப் பத்தியில் கடந்த வாரம் ரணிலை யும் ஐக்கிய தேசியக்கட்சியையும் அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் பார்த்திருந்தோம். அதனுடைய மறுதலை என்ன. ரணில் ஆபத்தானவர் என்பதற்காக மகிந்தவுக்கு தமிழர்கள் வாக்களிக்க முடியுமா?

"சிறுபான்மை வாக்குகளைக் கவர்வ தற்கான முயற்சிகளுக்குப் பதிலாக பெரும் பான்மையான வாக்குகளை அதிகம் திரட்டுவதில் கவனம் செலுத்துங்கள்" என லக்ஷ்மன் கதிர்காமர் வழங்கிய ஆலோசனையைச் சிரமேற்கொண்டு தனக்கான துணைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார். தேடிக்கொண்டிருக்கிறார் மகிந்த. ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவுமே இப்போது அவரது உள்வீட்டுப்பிள்ளைகள். நண்பர்கள். அவரின் சுதந்திரக்கட்சியின் பாரம்பரியமான தலைவர்கள் உறுப்பினர்களெல்லாம் தரமானவர்களாகவும், ஓரளவுக்கு விரோதமானவர்களாகவும் மாறிவிட் டிருக்கிறார்கள்.

'மகிந்தவின் சிந்தனைகள்' என்ற பெயரில் வெளிவந்திருக்கின்ற அவரது தேர்தல் விஞ்ஞாப னமோ தமிழ் மக்கள் கரடியாகக் கத்தும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ப வற்றை முற்றாக நிராகரித்து ஒற்றையாட்சிக் கொடியை உயரப்பறக்கவிட்டு நிற்கிறது. இந்தப்பின்னணியில், இனப்பிரச்சினைக்கு மகிந்த

ஆனால் தீவிர புலியெதிர்ப்புக்கோசங் களுடன் களத்தினை ஆக்கிரமித்திருக்கும் சிவப் புக் காவி நண்பர்கள் மகிந்தவை அவ்வாறிருக்க அனுமதிக்கமாட்டார்கள். அவர்கள் புலிகளைச் சீண்டவே முனைவார்கள். இந்த இரண்டுபட்ட சூழல் என்பது ஒப்பீட்டளவில் மகிந்தவால் ஒரு உறுதியான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு பாதகமாகவே இருக்கும்.

இந்த நிலைமை மேற்குலகினதும், மேற் குலக நிதியுதவிகளினதும் மேற்குலக முதலீடு களினதும் உட்பாய்ச்சலை நிச்சயம் பாதிக்கவே செய்யும். (இந்த வாய்ப்பை பயன்படுத்த இந்தி யாவும் சினாவும் வெகுவாக முயற்சிக்குமாயினும் மேற்குலகை முற்றாக பிரதியிடுவதென்பது அவற்றுக்கு முடியுமான காரியமல்ல).

ரணில் தெரிவு செய்யப்படுவாராக இருந் தால் இந்தத் தளம்பல்கள் எதுவும் இருக்கப் போவதில்லை. எனவே மகிந்த ஒப்பீட்டளவில் கொழும்பின் இதுவரையான தலைவர்களில் பலவீனமானவராகவே இருக்கப்போகிறார். அவ்வாறனதொரு அரசியல் சூழல் தமிழ் தேசிய விடுதலைக்குச் சாதகமானதாக இருக்கக்கூடும்.

அப்படியாயின் தமிழ் மக்கள் என்ன செய்வது? ஒற்றையாட்சியை வலியுறுத் தியபடி, தமிழரின் பிரதான கோரிக்கைகளை நிராகரிக்கும் மகிந்தவை ஆதரிப்பதென்பது சாத்தியமானதா? நிச்சயமாக சக்தியமானதல்ல. ஆனால் மாற்றுத்தெரிவாக ரணிலைத் தெரிவு செய்வதென்பது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மிக ஆபத்தானதாகும்..

எனவேதான் தமிழர்கள் தேர்தலைப் பகிஸ்கரிப்பது அல்லது தமது வாக்குச்சீட் டுக்களைச் சேதப்படுத்துவதென்பதே சிறிலங் காவின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலில் கடைப் பிடிக்கக்கூடிய உத்தியாகும். யாழ்ப்பாண முஸ் லிம் மக்களும் இதில் இணைந்து கொள் வார்களென்பது மிகவும் ஆரோக்கியமானதொரு செய்தி.

— பு. சத்தியமூர்த்தி

**மோசடித் தனங்கள் எல்லாம் ஆட்சியாளர்களால் தமிழ்ப் பகுதிகளில் செய்து பார்க்கப்பட்டு தென் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டவையே. இதன் உச்சக் கட்டம் வட மத்திய மாகாண சபைக்கு சனாதிபதி சந்திரிகா நடத்திய மாகாண சபைத் தேர்தலில் வெளிப்பட்டது.**

# முறைகேடுகள்..!

வடக்கு-கிழக்கு மக்களை சனாதிபதித் தேர்தலின் போது வாக்களிக்காது தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவது வெளிப்பட்டுள்ளது. இந்த வகையில் தென்னிலங்கை கட்சியொன்று அதனைத் தடுக்க சட்ட ரீதியான நடவடிக்கையொன்றுக்காக உயர் நீதிமன்றம் சென்று தோல்வியடைந்துள்ளது.

ஆனால் இவ்வாறு அவர்கள் எடுத்த முயற்சியானது அவர்களது மனநிலையைக் காட்டுகிறது. அதாவது தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைக்காக உயிர்ப்போராட்டம் நடத்தி உச்சக்கட்ட நிலையில் இருக்கையில் அவர்களது வாக்களிக்கும் உரிமையைப் பறித்துவிட தென்னிலங்கையில் சில கட்சிகள் முயல்வதனையே இது காட்டுகிறது.

இந்த முயற்சியை அக்கட்சி எடுத்திருப்பதானது சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தடை இவர்களுக்கு கொடுத்துள்ள உற்சாகத்தை வெளிப்படுத்துகின்றது.

சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தடையை ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் தமது வெற்றி போலக் காட்டிக்கொள்கின்றன. ஆனால் இது அதிகாரத்தில் தொடர்ந்தும் காலூன்றி நிற்க விரும்புவோர் கூட்டுச் சேர்ந்து நடத்தும் கபட நாடகம் என்பதை அவை புரிந்துகொள்ளவில்லை. அதாவது சுனாமிப் பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உண்மையிலேயே விருப்பம் கொண்டிருந்தால் உயர் நீதிமன்றத் தீர்ப்பும் அதற்கேற்ற வகையிலேயே இருந்திருக்கும்.

எவ்வாறாயினும், தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான உரிமையை இப்பொழுது பறித்துவிட முயற்சிப்பது அவர்களின் போராட்டம் வெற்றிப் படியில் ஏற வழிவகுத்துவிடும் என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறான தீர்ப்பு கிட்டியிருக்கின்றது.

அதேவேளை வடக்கு கிழக்கில் நீதியான தேர்தல் ஒன்று நடக்குமா, என்ற 'அச்சத்தை' ஜே.வி.பி தேர்தல் ஆணையாளர் முன் எழும்பியதிலிருந்தே இது தொடர்பாக பல ஆலோசனைக் கூட்டங்களை தேர்தல் ஆணையாளர் நடத்தினார். அங்கு சிங்கள ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தவேண்டும். கொத்தணிச் சாவடிக்கு வாக்களிக்க வருவோர்களை கணக்கெடுப்பது என்றெல்லாம் பல ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இத் தேர்தல்களில் வாக்களிப்பதனால் பயனேதும் கிட்டி விடப்போவதில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டமையினால்தான் தமிழ் மக்கள் கடந்த இரு தசாப்தங்களாக தேர்தல்கள் குறித்து அக்கறையின்றி இருக்கின்றனர் என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இம் முறையும் கூட தேர்தலில் போட்டியிடும் எவரையும், தமிழ் மக்கள் தமது தலைவர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. அடிப்படையாக அவர்கள் சிறிலங்காவின் தலைவர்களே ஒழிய, இலங்கையின் தலைவர்களாக நடந்துகொள்வதில்லை என்பது தமிழ் மக்களுக்கு ஒன்றாகவே தெரியும். அதனால் தான் தேர்தல்கள் குறித்த அக்கறையற்றவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு தேர்தல் நேர்மையாக நடக்குமா? என்று இன்று சந்தேகம் எழுப்புவர்கள் முன்னர் இங்கு புரிந்த மோசடித்தனங்கள் என்ன என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரியும். யாழ். தேர்தல் மாவட்டத்திலுள்ள மக்களில் ஒரு சில ஆயிரம் பேர் மட்டுமே வாக்களித்த தேர்தலில் தான் அதிலும் எத்தனை வாக்குகள் செலுத்தப்பட்டனவோ தெரியாது- ஈ.பி.டி.பி நாடாளுமன்றத்துக்கே போனது. இறுதியாக 1999 தேர்தல் வாக்குச் சீட்டுகள் கட்டாக பளையிலிருந்த ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் பெயரால் தெரிவு செய்யப்பட்டவர்களாக காட்டிக் கொண்டு தமிழ்மக்களை அழிக்க முற்பட்ட இனவாதிகளுடன் இணைந்து இவர்கள் செய்தவையெல்லாம் மக்களுக்குத் தெரியும்.

இது மட்டுமல்ல தென்பகுதி தேர்தல்களில் நடந்த மோசடிகள், முறைகேடுகள் கட்டுக்கடங்காமல் போனமையால் தான் கண்காணிப்பு அமைப்புக்கள் இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உள்ளூர் கண்காணிப்பு அமைப்புக்களும் சர்வதேச பார்வையாளர்களும் இதற்காகத்தான் கொண்டுவரப்பட்டனர்.

இந்த மோசடித் தனங்கள் எல்லாம் ஆட்சியாளர்களால் தமிழ்ப் பகுதிகளில் செய்து பார்க்கப்பட்டு தென் பகுதியில் நடைமுறைப்படுத்தப் பட்டவையே. இதன் உச்சக் கட்டம் வட மத்திய மாகாணசபைக்கு சனாதிபதி சந்திரிகா நடத்திய மாகாண சபைத் தேர்தலில் வெளிப்பட்டது.

அப்பொழுது அது குறித்து கூக்குரலிட்ட ஜே.வி.பி மோசடித்தனம் புரிந்தவர்களுடனேயே கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளமையால் இப்பொழுது வடக்கு கிழக்குப் பற்றிப் பேசுகிறது.

1994 இல் சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க போட்டியிட்ட போது ஐந்து சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்கப்போவதாக வாக்குறுதியளித்திருந்தார். நீதி, நிர்வாகம், தேர்தல், பொலிஸ், ஊடகம் ஆகியவற்றுக்கே சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்க அவர் வாக்களித்திருந்தார். பின்னர் அவர் அதனை மறந்துவிட்டார்.

2001 ஆம் ஆண்டில் அவரது சகாக்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில் ஆட்சியைக் காப்பாற்ற ஜே.வி.பியுடன் நன்னடத்தை அரசாங்கம் ஒன்றுக்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட போது ஊடகம் தவிர்ந்த ஏனைய நான்கு விடயங்களுக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் நாடாளுமன்றத்தில் சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இன்றுவரை தேர்தலுக்கு சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. 16மாதங்கள் சந்திரிகா அம்மையாருடன் கூட்டுச் சேர்ந்திருந்தபோது ஜே.வி.பி அதனை வலியுறுத்தவுமில்லை. இன்னும் அதுபற்றி ஜே.வி.பி. ஒருவார்த்தை பேசவுமில்லை.

இப்பொழுது ஜே.பீ.வி மட்டுமல்ல எவருமே இது பற்றிப் பேசுவதில்லை. ஏனெனில் முறைகேடுகளைப்புரிய அனைவருக்குமே வாய்ப்புள்ள நிலையில் வீணாக ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்பதால் அனைவருமே மௌனமாக உள்ளனர். ஆனால் தேர்தல் ஆணையாளரும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் தான் இடையிடையே இது பற்றிப் பேசிக் கொள்கின்றனர்.

எனவே இந்தத் தேர்தலிலேயே அக்கறையற்று இருக்கும் தமிழ் மக்கள் இவர்களின் கூற்றுக்களை பார்த்து நகைப்பதைத் தவிர வழியில்லை.

**வேலவன்**

## நேர்நோக்கு

# தமிழ் மக்களுக்காக ரணில் கண்ணீர் விடுகிறாரா?

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாடற்ற வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு தடை விதிக்குமாறு கோரி சிறிலங்கா முற்போக்கு முன்னணி சனாதிபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் பெரேரா உயர் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவில் அவர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்கா, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இராணுவத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஒரு சம்பவம் இருக்கத்தக்க வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கவேண்டும். என்று தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய சோசலிச கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய போன்றோரும் ஒரு மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அதே வேளை வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து நவம்பர் ஏழாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளது.

எனவே மேற்படி நிகழ்வுகளில் முதலாவது நிகழ்வுகள் போன்று இலங்கைத் தீவில் நடப்பது வழமையானதே. அத்தோடு அவ்வாறான நிகழ்வுகள் நடந்துமுள்ளன. சிறிலங்காவினுடைய சட்டம், நீதி என்பன தமிழ் மக்கள் தொடர்பில் நீதியாக நடந்ததில்லை, இனி நடக்கும் எனவும் எதிர்பார்க்கவும் முடியாது.

சிறிலங்காவில் சகல மட்ட அதிகாரங்களிலும் இருக்கின்ற அதிகாரிகளும் சரி அல்லது அதிகாரத்தை நோக்கி நகரப் போகின்ற அதிகாரிகளும் சரி அல்லது எந்தச் சிங்களத் தலைமை கள் என்றாலும் சரி இவ்வாறு தமிழ் மக்கள் தொடர்பில் சிந்திப்பது நடப்பது என்பது இங்கு புதிதல்ல.

ஆனால் இங்கு இரண்டாவது பந்தியில் குறிப்பிட்டது போன்ற நிகழ்வு என்பது ஆடு நனைவதை எண்ணி ஓநாய் அழுவது போன்றதாகும். அதாவது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியத் கட்சியானது வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இந்த சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை தடை செய்ய வேண்டும். (தமிழ் மக்கள் தாங்களாக முன்வந்து வாக்களிப்பார்களா என்பது வேறு விடயம்) எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்ததும் நவம்பர் ஏழாம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்யப் போவதும் என்பதெல்லாம் இலங்கையின் அரசியல் நிகழ்வுகளை சாதாரணமாக அவதானித்து வரும் ஒருவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதை நோக்கி நகர்கிறது என்பது தெளிவாகப் புரிந்துவிடும்.



தமிழ் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்ட போதும் 1987 யூலையின் போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ் மக்கள் மீது ஏற்படாத கரிசனை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தபோதும் நீதிமன்றம் அவற்றுக்கு இடைக்காலத் தடை விதித்த போதும் அவற்றுக்கெதிராக ஐ.தே.கட்சி வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது ஆர்ப்பாட்டங்கள் செய்யவோ முன்வராத இக்கட்சி,

அவசர காலச் சட்டம், பயங்கரவாதச் தடுப்புச் சட்டம் என்றெல்லாம் ஏற்படுத்தி தமிழ் மக்கள் கூரணமின்றி கைது செய்யப்பட்ட போதும் கண்டபடி கொலை செய்யப்பட்ட போதும் தமிழ் மக்கள் தொடர்பில் சிறு அனுதாபத்தை ஏதும் வெளிப்படுத்தாத இக் கட்சி,

இப்போது மட்டும் தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்படுவதாகக் கூறி வழக்குத் தாக்கல் செய்தும் ஆர்ப்பாட்டம் செய்யவும் இருக்கின்றது என்றால் அதன் உள் நோக்கம் அனைவருக்கும் தெளிவாகப் புரிந்துவிடும். காலம் காலமாக தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமை மறுக்கப்பட்டு வந்தபோது மௌனிகளாக இருந்தவர்களும் தமிழர்களின் அடிப்படை வாழ்வுரிமையை மறுத்தவர்களுமான இவர்களுக்கு ஏன் இப்போது மட்டும் இந்த அக்கறை. சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது மறுக்கப்படுவது தொடர்பில் அது தங்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாக தமிழர்கள் எண்ணத் தலைப்படவேயில்லை. ஏனெனில் தமிழர்கள் தங்களுடைய தாயக அரசியல் எல்லைக்கு அப்பால் வேறொரு நாட்டில் இடம் பெறும் தேர்தலாகவே இதனை கருதுகின்றனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்திலும், இருபிரதான வேட்பாளர்களும், தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் உருப்படியான எந்தத் திட்டத்தினையும் முன்வைக்கவில்லை. இந்நிலையில் தான் ரணிலின் தமிழ் மக்கள் மீதான இந்தக் கரிசனை.

கடந்த காலங்களில் சிறிலங்காவின் வாக்குகள் பெருமளவில் பகிரப்படவில்லை. அவை இரண்டு பிரதான கட்சிகளிடையேயுமே பகிரப்பட்டு வந்தன. இதனால் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தி சிங்கள மக்களிடமே காணப்பட்டது. எனவே தான் எந்தக் கட்சி சிங்களவர்கள் தொடர்பில் நல்ல திட்டங்களோடு தேர்தலில் இறங்குகின்றார்களோ அவர்களே ஆட்சி அதிகாரத்தை பிடித்துக் கொள்பவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் இப்போது நிலைமை அதுவல்ல, சிங்கள மக்களின் வாக்குகள் பல கட்சிகளிடம் பகிரப்பட்டு விட்டன. எனவே தான் இப்போது ஆட்சி அதிகாரத்திற்கு வருபவர்களைத் தீர்மானிக்கும் சக்தி சிறுபான்மை மக்களின் கைகளில் உள்ளது. அந்த மக்களின் வாக்குகள் எந்தக் கட்சிக்கு அதிகளவில் செல்கிறதோ அவர்களே சிறிலங்காவின் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் தமிழ் மக்கள் மீதான கரிசனை என்பது ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கிறது. பெரும்பாலான தமிழ் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள் எனவே தான் அவர்கள் வாக்களிப்பிலிருந்து தடுக்கப்படுவதை அக் கட்சி விரும்பவில்லை. அதற்காகவே இந்த மனுத் தாக்கலும், ஆர்ப்பாட்டமும்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. யார் ஆர்ப்பாட்டம் செய்தால் என்ன யார் யார் மனுத் தாக்கல் செய்தால் என்ன இதற்கப்பால் தமிழ் மக்கள் சிறிலங்காவின் இந்த சனாதிபதி தேர்தல் தொடர்பில் எப்போதோ ஓர் தெளிவான முடிவு எடுத்துவிட்டனர் என்றே கூறலாம். அதாவது தங்களது பிரச்சினை தொடர்பில் எதனையும் உருப்படியாகச் செய்யாத இந்தச் சிங்களத் தலைவர்களுக்கு தாங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதே; ஆடு நனைவதை எண்ணி ஓநாய் அழுகிறது என்றால் அதன் உள் நோக்கம் அனைவருக்கும் நன்றாகவே தெரியும்.

**மு.தமிழ்ச்செல்வன்**

# காரசாரம்



ஒரு நாட்டின் சுபீட்சம் என்பது சொந்தப் பொருளாதாரம் மட்டுமே. அந்நியப் பொருள் இல்லாது போனால் வாழவே முடியாது என்ற நிலை ஒரு நாட்டுக்கு வந்துவிட்டால் பொருளாதார நிலையில் அது ஏனைய நாடுகளின் அடிமைதான். வெளிநாட்டின் இராணுவ உதவியில்லாமல் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாத நாடும் அடிமைதான்.

அந்நிய நாடுகளின் கலாச்சாரமே நமக்குப் பெருமையென்று கொண்டால் சொந்த கலாச்சார மரபுகள் அழிந்து போனால் தமக்கென ஒரு பண்பாடற்ற அடிமைதான் நாடு, ஒட்டுமொத்தமாக ஒரு தேசியத் தன்மையற்ற எதுவுமே ஒரு நாடல்ல. தமக்கென ஒரு தேசியப் பண்பை வளர்த்துக்கொள்ள முடியாதிருப்பதை பேணிக்காப்பாற்ற முடியாத நாடு இறந்து போய்விட்டது என்பதுதான் பொருள்.

தாழ்வுற்று தோல்வி அடைந்த நாடு பிணத்துக்குச் சமம். அதைப் புரட்சிகளால் கூடப் பிழைக்கவைக்க முடியாது.

வலிமையும் பெருமிதமும் உள்ள நாட்டில் ஏற்படும் புரட்சி வறுமையையும் துன்பத்தையும் போக்கும்.

என்ற அறிஞர் வாக்குகளில் இடங்களில் நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான இயற்கை வழிமுறைகளே மலர்கள். தூப தீபம் என்பவையும் நாம் பூசிக்கொள்ளும் அத்தர் சவ்வாது என்பனவுமாகும். துணியில் செய்த அதுவும் நைலோன் வகைத் துணியில் செய்த மலர்ச் சரங்களே இன்று பெண்களின் தலையில் இருக்கிறது. இவற்றால் கிருமிகளை விரட்ட முடியாது. எண்ணைப் பிசுக்கும் ஈரமும் சேர இவை கிளப்பும் மணம் கிருமிகளை அணைத்துக்கொள்ளும் அவ்வளவே.

இதே போன்று நெற்றித் திலகமும் சுத்தமான மஞ்சளைப் படிகாரத்துடன் கலந்து பெறப்படுவதே. கிருமிநாசினியாகவும் உள்ள குங்குமமும், சந்தனமும். வெற்றிலை போல எமது சகல நிகழ்வுகளிலும் கலந்துள்ள பொருள். வாசனையைத் தன் குணமாகக் கொண்ட சந்தனம் குளிர்மையானது. இதை நெற்றியில் வைத்தால் விரைவில் உலர்ந்து விடும்.மனித உடலின் நரம்புகளின் தொடக்கம் கால் கட்டை விரல். அனைத்து நரம்புகளையும் கூட்டிக் கட்டிப்போட்ட முடிச்சு நெற்றி.

உடலின் எந்தப் பாகத்தில் பிரச்சினை ஏற்பட்டாலும் நெற்றிப் பொட்டு வில்லை.

"அ...அவயட பயித்தம் பணியாரத்தையும் அரியதரத்தையுஞ் சபைக்கு வைக்கேலுமே." என்றலுத்துக்கொள்ளும் நவநாகரிக நங்கையருக்குப் பஞ்சமேயில்லை. மேனாட்டுப் பலகார வகைகளைக் கச்சிதமாகச் செய்யும் ஒரு பெண்ணுக்கு அரியதரத்துக்கு பதமெடுக்கத் தெரியாது. இதுதான் இன்றைய தமிழர் நிலை.

இன்று லண்டனுக்குப் படிக்கப் போன மகனுக்கு பொரி விளாங்காய் செய்தனுப்புவாள் தாய். ஒருவருடமானா

# எதைச் சொல்வது..? எப்படிச் சொல்வது..?

முன்னதில் கூறப்பட்ட தோல்வி என்பது பொருளாதார கலாச்சார, மொழி, உணர்வுகள் ரீதியான தோல்வியாகும்.

பின்னதில் வரும் பெருமிதம், தற்பெருமையாகும். எமது மண், எமது மொழி, எமது பண்பாடு, எமது கலாசாரம் தனித்துவமானது, பெருமையானது எனக் கொள்ளும் பெருமிதம் இன்று தமிழர்களில் யாருக்குளது இப்பெருமை.

சும்மாவாகிலும் நமது கலாச்சார விழாக்களில் கலந்துகொள்ளப் போகும் போது என்னதான் காஞ்சிபுரப் பட்டும் கனகாம்பரமும்,பட்டு வேட்டியும், மாறுகரை வேட்டியும் கல கலத்தாலும் பெண்கள் சம்பிரதாயங்கள் சடங்குகளுக்கப்பால், செயற்கையாகத் தம்மை சகல வாழ்க்கைக்கும் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். பாண்டியன் சபையிலே பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா? என்ற ஒரு சபைக்குதவாத ஆராய்ச்சியைச் செய்து, அதற்காக பொற்கிழி வழங்கியதும், இந்தப் பிரச்சினையில் இறைவனே வந்து கலந்துகொண்டதுமான திருவிளையாடல்களை, இப்போது நடத்த முயன்றால் சிவனுக்கும் சீவன் தடுமாறும்.

பலவகை கூந்தல் அலங்காரத்தின் மீது சூடப்பட்டுள்ள குழையுங் கொப்பும் மலரும் மரமும் இயற்கையா? செயற்கையா? கழுத்து நிறைந்திருக்கும் கண்டசரம், காசு மாலை, மார்ப்பதக்கம், முத்துமணி, பொன்னா? கவரிங்கா? கடகம், பொன்வளை, கைச்சரம், காப்பு, முத்துவளை என ஜொலிப்பதும் அவ்வாறே. காதிலே சிமிக்கி தோடு, வாளி, சிறுமணி, லோலாக்கு, மயிர்மாட்டி, ஜடைபில்லை இத்தியாதி இத்தியாதிகள் கலகலக்க, விரத காலங்கள், கலியாணங்கள் களைகட்டும்போதும் மாறுகரை வேட்டி, மடித்துக்கட்டிய சால்வை - பத்துவிரல் மோதிரம், பவளம் பதித்த கைச்சங்கிலி, கழுத்துச் சங்கிலி- எனக் கூடவரும் ஆண்களையும், பண்பாட்டின் கலாச்சாரத்தின் பதிப்புகளாகப் பார்க்கலாமா? கோவிலும் குளமும் மணமண்டபமும் கூட மாறிவிட்டது.

அழகழகான மலர்ச்செடிகளை உருவாக்கி அம்மலர்களைச் சூடுவதாலும் வளர்ப்பதாலும் ஏற்படும் நறுமணங்களால் சூழல் சுத்திகரிக்கப்பட்ட காலம் போய் விட்டது. மக்கள் நெரிசலாகக் கூடும் வலிக்கிறது. மறந்துபோன ஒன்றைக்கூட நாம் நெற்றிப்பொட்டைத் தட்டித்தான் நினைவுக்குள் வரவைக்கிறோம். அந்த நெற்றிப் பொட்டில் சந்தனம் வைத்தால் குளிர்மையடைந்து உணர்ச்சிகளை மட்டுப்படுத்தும். அதன் மீது கிருமிகள் வந்துவிடாமல் குங்குமம் இடுவதுண்டு. இன்று ஒட்டுப்பொட்டு. சந்தனம் என்று வெறும் மஞ்சளை அரைத்து விற்பனை செய்வதும் நடைபெறுகின்றது. சரி கலாச்சாரத்தில்தான் இப்படி சுபாவமாக வசதிக்கேற்ப ஆடை அணிவதை யாரையும் யாரும் தடுக்க முடியாது. அதைவிட எமது குடியிருப்புக்களுக்கான வீடுகளை 'யப்பான் மொடல் அமெரிக்கன் பற்றன்' என மாற்றிக்கட்டிக்கொள்கின்றோம். உண்ணும் உணவில் கூட சைனீஸ்,உடுப்பி மேற்கத்தைய குடிவகையென்று மாறுகிறோம். போகட்டும் எங்கள் கலாச்சார விழாக்களில் பரிமாறும் உணவு பலகார வகைகளில் கூட எவ்வளவு மாறிவிட்டோம்.

அந்நிய மூலப்பொட்களைக் கொண்டு தயாரித்து உணவகங்களிலிருந்து தருவிக்கப்படும் பலகாரங்களே வீட்டு நிகழ்ச்சிகளில் இடம்பிடிக்கின்றன. அவற்றின் பெயர்கள் கூட சமேசா, பரோட்டா, ரோல்ஸ், ஜூஸ்,போண்டா, மிக்சர், சான்ட்விச், கேக், ரிச் கேக், இன்னும் பிறைட் றைஸ், புரியாணி, புடிங், இத்தியாதி இத்தியாதி வாயில் நுழையும் பலகார வகைகளுக்கு வாயில் நுழையாத பெயர்கள். பண்டிகைகளில் கூட லட்டு, கேசரி, தொதல் எனப் புதுவகை இன்னும் வடை மட்டும் தடையின்றி உலாவருகின்றது.

வடை, முறுக்கு, அரியதரம், பயிற்றம் பணியாரம், வாய்ப்பன்,சிப்பி, தோட்டச்சு, பொரி விளாங்காய் என்பவற்றை இனி நூதனசாலைகளில்தான் பார்க்கப் போகின்றோம். ஏனெனில் எங்கள் குழந்தைகட்கு பாக்குரல், பாக்கு வெட்டி, முறுக்குரல் என்பவற்றைத் தெரியாது. கொழுக்கட்டைக்கு அச்சுவந்துள்ளது.கோலம் போடக்கூட அச்சுலக்கை உண்டு.

மேலே குறிப்பிட்ட எந்தப் பலகாரத்துக்கும் உள்ளூர் மூலப்பொருட்களே தேவையாகும். அரிசி,பயறு, தேங்காய், உழுந்து போன்றவையே தேவை. இதே பொருட்களை உபயோகித்து இன்னும் புதியவகைத் தயாரிப்புக்களை கண்டு பிடிக்குமளவுக்கு எங்கள் அடுக்களை அறிவியல் வளரவில்லை, வளர்க்கப்படலும் கெடாது பக்குவம் குறையாது சுவை மாறாது ஆரோக்கியமான போசாக்கான உணவு பொரி விளாங்காய்.எம்மில் எத்தனை பேருக்கு இந்தப் பெயர் நினைவிருக்கிறது.

புதுப்புது உணவுகளையும், புதுப்புது உடை வகைகளையும்,புதுப்புது ஆபரணங்களையும் மட்டுமல்ல, புது வகையில் நாம் செய்யும் எதுவும் தவறல்ல. அது அந்நியப் பொருட்களின் அலங்காரப் பந்தலாக இராமல் அது எமது உற்பத்தியில் வந்த எமது மூலப் பொருட்களாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும்.

எமது மண்ணில் விளையக் கூடிய எந்த வகைத் தானியத்திலும் மிக நேர்த்தியான புதிய புதிய உணவு வகைகளைக் கண்டுகொள்ளலாமா? கச்சான் பிஸ்கட், எள்ளுப் பலகாரம், சோளப்பொரி உருண்டை என்பன அண்மைய கண்டுபிடிப்புகள் தானே. அடுக்களை அறிவியலில் மட்டுமல்ல அரிவையரின் மனமாற்றத்திலும்தான் எங்கள் தேசியத்தின் எழுச்சி தங்கியுள்ளது.

வளரும் குழந்தைகளின் வாத்திமார் தாய்மார் தானே. எமது உணவு, எமது உடை, எமது மொழி, எமது பாரம்பரியப் பழக்கங்களை முன்னெடுத்து எமக்கென்று ஒரு பண்பாடுண்டு என்பதை உலகுக்கு நிலை நிறுத்தி எமது விடுதலைப்போருக்கு வலுவூட்ட வேண்டும்.

தொழில் முறைகளில் மாற்றமில்லாது அவற்றை நவீனப்படுத்துவது போல அதாவது விவசாயத்தில் நெல்லை விதைத்து அறுவடை செய்வதில் முறைகள் மாற்றமடைந்தாலும் நெல் நெல்லாகவே இல்லையா? மீன் பிடியில் என்ன செய்தும் மீனையே பிடிக்கவில்லையா? அதுபோன்று முறைகளை மாற்றிப் புதுப்புதுக் கண்டு பிடித்தல்களைச் செய்யலாமே.

அதை விடுத்து அரிசியை விட்டு கோதுமை மாவும், கோதுமை ரவையும் இன்னும் பைகளில் அடைத்துவரும் பொருட்களிலும் மனதைப் பறிகொடுக்கலாமா? எமது விடுதலை என்பது தனியே மண்ணுக்கானது அல்ல. அது எமது தேசியத்துக்கானது. தேசியம் என்பது குடை, குடி, கூழ் அமைச்சு,அரண் என்பது தான்.

-மாயா-



# விசுக்விசுக் விசாலாச்சி

வளர்த்த கிடாய் மார்பிலபாயப் போறனெண்டு அறிக்கை விட்டிருக்கடா? அந்தநாளயில கண்டிராசனைக் காட்டிக் குடுத்த ஆலப்புளையுஞ்சரி, சங்கிலியக் காட்டிக் குடுத்த வன்னியனையுஞ்சரி, வெள்ளைக்காறன் விட்டுவைக்கேல்ல. தன்ர அலுவல் முடியத் தீர்த்துக்கட்டிப் போட்டாங்கள். சொந்த மக்களைக் காட்டிக் குடுத்தவனை எதிரி நம்புவானே. ஆக்களப் போட்டுத்தள்ளிற்றான். அப்பவே என்ர அப்பு சொல்லுவார். எல்லாருக்கும் ஒரு மன்னிப்பு இருக்கு ஆனாக் காட்டிக் குடுக்கிறவனைக் கடவுளும் மன்னிக்க மாட்டாரெண்டு. இப்ப எங்களை சரியான பொறியில கொண்டேத் தள்ளி விட வெளிக்கிட்ட கிடாரி இப்ப பல்லுப் புடுங்கின பாம்பு மாதிரி இடையில இடையில சீறிக்காட்டுது.

அது போதாம 'வாற லெச்சனை மட்டக்களப்புக்க நடத்த விடமாட்டனெண்டு ஒரு சவால் போட்டிருக்கடா இப்ப அங்கால தெறிச்சுப் போச்சோ? ஆர் கண்ட. எப்பிடியோ-தேர்தல் திருவிழாவில தூக்குக் காவடியும் இருக்கெண்டது உறுதியாப் போச்சு. அது கிடக்க உவன் வவுனியா ஆமிக்கும் ஏதோ கேடுகாலம் பிடிச்சாட்டுது போல.

பக்குப் பக்கெண்டு தன் பாட்டில சட்டங்கள் போடவும், கலைச்சு விடவுமா நிக்கிறாங்கள். சும்மா சைக்கிளில பேரணிக்குப் போனவைய விட்டிருந்தா வெறுஞ் செய்தியாப் போயிருக்குமடா. அந்தச் செய்திக்குப் பொட்டு வச்சு, மாலை போட்டு, பெரிசா மரியாதை குடுத்த வவுனியா ஓமந்தைச் சாவடி ஆமிக்கு.நன்றி சொல்ல வேணும். சனத்தை அங்கங்க குழப்பிவிட்டுக் கூத்துப் பாக்கிறதுக்கு, நல்ல நேரங்கிடைச்சதால, கொஞ்சப் பேருக்கு பட்டி கழண்டாலும் கொஞ்சப் பேருக்குப் பட்டி கிடைச்சிருக்கு. சும்மா சொல்லக்கூடாது. போன லெச்சனில பிக்கு முன்னணிக்கு கிடைச்ச வாக்கெல்லாம் தனக்குத்தான் எண்டு சொன்ன உடுவே தம்மாலோக தேரர், சடாரெண்டு யு என் பீக்க மாறிட்டார்.

அமைதியக் கொண்டு வர ரணிலால தான் முடியும் எண்டது, அவற்ற மேலான எண்ணம். மேலான எண்ணமுந்தான். சரி இந்த மாதத்தோட பதவிய இழக்கப் போற. இல்ல நிறைவு செய்யப் போற இப்பத்தயில் சனாதிபதி இன்னும் வெளிநாடுகளுக்குப் பறந்து திரியிறத நிப்பாட்டேல்ல. லெச்சன் முடியத்தான் தம்பியின்ர இடமும் தெரியும். இதுக்க வீங்கிப் பெருத்துப் போய்க் கிடக்கிற ஆமியக் கொண்டே என்ன செய்யிற, அவயளக் கொண்டே இப்ப ஆசுப்பத்திரியில விடப்போகினமாம்.... அ... வருத்தமொண்டுமில்ல வருத்தக் காறரைப் பார்க்க விடப்போகினமாம். ஏற்கெனவே ஆசுப்பத்திரி வழிய கோல்மால் நடக்குது.

இனி இவையும் போனா.... ஆசுப்பத்திரிக் கட்டிலுகள்ள நோயாளர் குறையப் போகுது. மெய்யேடீர பொடியா... மகிந்தற்ற ஆதரவுத் தொகை வரவரக் குறையிற மாதிரி கிடக்கு. ஆனா இப்ப ரணிலற்ற ஏறுறமாதிரியுமில்லையே. மெல்ல மெல்ல கேக்க மேய்க்க ஆளில்லாமத்தான் ராணுவம் நடவடிக்கை எடுத்துத் திரியிறானே. பழையபடி வேதாளம் முருங்கையில ஏறினமாரி புத்தூருக்க சீன வெடி கொளுத்தினாங்களாமடா, சனம் பொங்கு தமிழ்ழ கழட்டினமாதிரி தெருவில இறங்கிக் கழட்ட வெளிக்கிட்டா நாறிப்போமெண்டபயம்.

உள்ளுக்க இல்லாமயோ, எந்த நாட்டிலயும் சிவில் நிருவாகத்தில ஆமிய வைச்சிருந்தா அந்த இராணுவத்தை சனம் வெறுங்கையாலயே அடக்க வெளிக்கிட்டுருமடா. இவை துவக்க வைச்சிருந்து என்ன செய்யிற. உலகத்தின்ர ஆக்கிரமிப்பு நாடுகள், எல்லாம் அந்த நாள் முதல் இந்த நாள்வரை அறிஞ்ச நிகழ்ச்சி தானே. உலகம் முழுக்கப் பிடிச்ச பிரித்தானியாவும் அலெக்சாண்டரும் கிட்லரும் கூடப் படிச்ச பாடம் தான்ரா. தெய்வம் நிண்டறுக்கும் எண்டதெல்லாம் சும்மாவடா. இப்பதான் எல்லாம் துள்ளத் துடிக்க, நிண்டது நிக்க உடன கண்ணில காட்டுதே. முன்னை இந்தத் தமிழரை ஒரு உரிமையோடயும் வாழவிடமாட்டனெண்டு ஒற்றைக்கால்ல நிண்டு இதுக்கெண்டு யாப்பும் எழுதுவிச்ச ஜேயார்தான் தான் சாகேக்க ஏதுங் கொண்டு போனவரே. சாதாரண குடிமகனப் போல போய்ச் சேர்ந்தார்.

இப்ப தேர்தல்ல வெல்லுவன். தேர்தலக் குழப்புவன் எண்டு சவால் விடுறவையும், என்னவோ வள்ளுவர் சொன்னாரே "தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையில் இழிந்தக் கடை" மெய்தான், தலையில இருக்குமட்டும் தைலமென்ன? வார்வை என்ன? தலையில தூக்கி வைச்சு ஆடின மயிர். தலையால கழண்ட பிறகு குப்பை மேட்டில கிடந்து சவால் விடுது எதிரியின்ர முடிமயிர்.



## மண்ணின் மைந்தர்களின் கதை



# தளராத வீரம்...

ஒரு விடுதலைப் போராளியின் மன உணர்வை அதன் ஆழத்தை இதுவரை எவரும் கணக்கிட்டதாக வரலாற்றில் எங்குமே படித்ததில்லை. அதிலும் தமிழீழ தாய் நாட்டின் விடுதலையை நேசித்தவாறே களத்தினில் எதிரியை எதிர்கொள்ளும் போராளிகளின் தியாகங்களும் கொடையும் அதன் உச்சத்தே சென்று விட்டதை மெய்யான போராளிகளின் உணர்வினால் காணமுடியும்.

ஒரு விடுதலைப் போராளி யானவன் எதை செய்ய நினைக் கின்றானோ அதை செய்து முடிக்கும் வரை அவனது உயிர் ஓயாது துடிக்கும் என்பதை சொல்லிவிட்டுச் சென்ற எம் இனிய மாவீரர்களின் வரிசையில் மாவீரன் வீரவேங்கை லெப்.கோமகனும் சேர்ந்துகொண்டான்.

ரஜீவன் 01 பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்துக் கொண்டு களமுனையில் நுழைந்த வனை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வீரத்துடன் வரவேற்கிறது. பயிற்சி, துணிவு, தந்திரம், வெற்றி என்ற கொள்கை பிரவாகத்தில் தன்னையும் இணைத்துக்கொண்ட வனின் போராட்ட செயற்பாடுகள் எல்லோராலும் வரவேற்பவையாகவே இருந்தன. போராளிகளுக்கேயுரிய சகல குணாம்சங்களையும் பெற்றி ருந்தவனுக்கு மிடுக்கும் துணிவும் சிறப்பாக இருந்தது.

எடுத்த வேலையை எப்படிச் செவ்வனே செய்வதென திட்டமிட்டுச் செய்து முடிப்பான். எந்தப் பணியை யும் ஒதுக்கி வைக்காமல் செய்வதை மிக திருத்தமாகச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனிடம் இருந்தது. எதையும் எப்படியும் எவ்வளவு கடினப் பட்டும் எத்தனை வன்மைகளைக் கடந்தும் தனது அணிக்கானதும் தனக்கானதுமான களக் கடமை யினை செய்யத் துணிந்தவன், உயிரை சிலிர்க்க வைக்கும் அந்தக் கடமையைச் செய்து முடிப்பான்.

ஓயாத அலைகள் தொடர்ந்து கொண்டு இருந்தது. ஓயாத அலைகள் 01,02,03 என தொடராக நடந்த உரிமைப் போரிலே தனது படையணியின் வீரமிகு போராளிகள் செய்துவிட்டுச் சென்ற அளப்பெரிய கடமைகளையும், தியாகங்களையும் அந்தப் போராளி' நினைத்துப் பெருமிதம் அடைந்தான். எனவே தாயகக் கனவுகளுடன் வீரச்சாவடைந்த தன் பாசம் மிகுந்த தோழர்களின் நினைவுகளுடன் களம் விரைந்தான் மாவீரன் லெப். கோமகன்.

26.09.2000 அன்று ஓயாத அலைகள் 04 கிற்கென அணிகள் களமிறங்கத் தொடங்கிவிட்டன. இரவு பகலாக கனமான சுமைகளுடன் வேவு வீரர்கள் சண்டைக்கான திறவு கோளை அணிகளின் கைகளில் தந்துவிட்டு அவர்களும் சமர் முனை யில் முன்னகர்ந்து கொண்டிருந்தனர்.

சண்டைக்குச் செல்வதற்கு 5 நாட்களுக்கு முன்பே பகல் பாதை ஒன்றை திறப்பதற்கான வேவு நடவடிக்கையில் மிரேஸ் தலைமை யிலான அணி ஒன்று சென்று எதிரியின் தாக்குதலில் சிக்குண்டு மீண்டு வந்ததையும் மறக்காமல் நினைவு கூர்ந்த தடை அணியின் பொறுப்பாளன் வீரன் அவ் அணி களுடன் இறுதியாகக் கதைத்தான்.

ஏற்கெனவே பாதையில் சில தடைகள் ஏற்பட்டன. எல்லோ ருக்கும் தெரியும். என்றாலும் எங்க ளது உயிர் இருக்கும் வரை சண்டை செய்து, பாதையை உடைத்து அணிகள் உள் நுழைய துணிவுடன் சண்டை செய்யவேண்டும் என கூறியவாறே தயாராகிறான்.

இப்போது எதிரியின் நிலைக்கும் எமது நிலைக்கும் இடையிலான தூரம் 4.30 மீற்றராக இருந்தது. இந்தத் தூரத்தை அணிகள் ஓடியே கடக்க வேண்டுமென இருக்கும்போது. ஏற்கெனவே காலில் பட்ட காயத்தினால் நடக்கவே முடியாமலிருந்த கோமகனும் சண்டை அணியில் அதிலும் தடை அணியில் தயாராக இருந்தான்.

நேரம் நெருங்கிவிட்டது. பி.ப2.50 க்கு எதிரியின் நிலைகள் நோக்கி எமது ஐந்தங்குல மற்றும் ஆட்லறி ஏவுதளங்கள் எறிகணைகளை ஏவத்தொடங்கிய உடனேயே சண்டைதொடங்கிவிட, தடையணிகள் எதிரியின் தாக்கு தலோடு தாக்குதலாக நகரத் தொடங்கின.

தடையணியின் முதலாவது அணியுடன் வீரன், இறைமைந்தன், வேங்கை, கோமகன், முகிலரசன் என எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக வேகமாக ஓடி எதிரியின் தடையை அடைகிறார்கள்.

டேய் இறைமைந்தன் வேகமா டோபிற்ரோ வையடாவென கத்துகிறான் அணித் தலைவன் வீரன். பட்டப்பகலில் விழித்திருக்கும் ஆயிர மாயிரம் எதிரியின் கண்களுக்குள் சிக்காமல் என்னவென்று டோபிற்ரோ வைப்பது.

இறைமைந்தன் டோபிற் ரோவை வேகமாக வைத்துவிட்டு அதன் பாதுகாப்பு நெம்பை கழற்றிவிட்டு எதிரியின் முதலாவது தடைக்குள் புகுத்துகிறான். இது வொரு கன விநாடியில் நடக்கிறது.

பல விநாடிகளாகி 01-11/2 என நிமிடமாகியும் டோபிற்ரோ வெடிக்கவில்லை. அணிகள் பின்னே வந்து பாதுகாப்பு நிலை எடுத்து விட்ட நிலையை வீரன் உணர.

டேய் அது வெடிக்காட்டி பரவாயில்லை மற்றயதை கழற் றிவை என்கிறான்.

இறைமைந்தன் மற்றய டோபிற்ரோவை கழற்றவும் முதல் வைத்தது வெடிக்கவும் சரியாக இருக்கிறது. எனவே அந்த விநாடி யின் நிலையை உணர்ந்த வீரன்.

இறைமைந்தன் அடுத்த தடைக்கு அதை எறியடா என்கிறான்.

வீரன் சொன்னதும் இறை மைந்தன் எறிகிறான். அடுத்த தடை யும் வெடித்துச் சிதறுகிறது. மூன்றா வது தடைக்கான டோபிற்ரோவை கோமகன் எடுத்து வந்து வேங்கை யிடம் கொடுக்க, வேங்கை இறை மைந்தனிடம் கொடுத்ததும் அடுத்த தடையில் வைத்து அதுவும் வெடித்து விட்டது.

எதிரியின் மூன்று தடை களையும் உடைத்துமே முன்சென்ற மூவரும் எதிரியின் தாக்குதலில் காயமடைகின்றனர்.

இப்போது எஞ்சி பக்கத்தில் இருப்பது கோமகன் மட்டுமே என்றா லும் பின்னாலிருந்து வரவேண்டிய டோபிற்ரோ இன்னும் அவர்களின் கைக்கு வந்து சேரவில்லை என்பதை உணர்ந்த கோமகன் மிகவிரைவாக செயற்படத் தொடங் குகிறான். ஓடிச்சென்று அடுத்த டோபிற்ரோவை எடுத்து வருகிறான்.

எதிரி தொடர்ச்சியாக அந்த இடத்தை டொங்கானால் தாக்கிக் கொண்டிருந்தான். எனவே காயக் காரரை பாதுகாப்பாக வைக்க முனைந்துகொண்ட தடையை உடைப்பதே முக்கிய கடமை என இருக்கும் போது அடுத்த கட்டளைக் காக தனது அணித்தலைவனைப் பார்க்கிறான்.

வீரன் தனது காயத்துடனும் எதிரியின் சூடுகளால் உடைந்து போய்விட்ட தனது ரி56-2 ரக சுடுகரு வியை குண்டுக்காரனான முகிலர சனிடம் கொடுத்து எதிரியை நோக்கிச் சுடச் சொல்லிவிட்டு இறுதித் தடையான மண் அணைக்கு தவழ்ந்து கோமகனுடன் செல்கிறான்.

அங்கு முதலாவதாக வீரன் டோபிற்ரோவை வைக்க அது வெடிக்கவில்லை. அதன் பின் வீரனை இழுத்துவிட்டு கோமகன் போய் டோபிற்ரோவை சரிபார்க்கிறான். ஆனால் அது வெடிக்காது என்பதனை தெரிந்துகொண்டவன், ஏனைய அணிகள் இருக்கும் இடத்திற்கு ஓடிவருகிறான்.

எதிரியின் ரவைகள், எறிகணைகள் பொழிந்தவாறுஇருக்க அந்த கடினமான களத்திலிருந்து வேகமுடன் ஓடோடிவந்து அடுத்த டோபிற்ரோவை எடுத்துக்கொண்டு எதிரியின் கடசித் தடைக்கு ஓடுகிறான். எதிரியோ தொடர்ந்து தாக்கினாலும் தப்பி வீரன் இருக்கும் இடத்திற்குச் சென்று விட்டான்.

இதுவும் ஒருவித அதிர்ச்சி யானதும் அதிசயமானதுமான களநிகழ்வேயாகும்.

வீரண்ணை நான் வைக்கி றேன் என்று சொல்லிவிட்டு டோபிற்ரோவை கொண்டு சென்று மண் அணையில் வைத்த அதே கணத்தில் கோமகன் தனது இடது கழுத்தில் காயமடைந்து தூக்கி யெறியப்படுகிறான்.

இப்போது எதிரி சந்தோசப் பட்டிருப்பானெனின் பாவம் அவன்.

காரணம் கழுத்துக் காயத் துடன் மீண்டும் கோமகன் டோபிற் ரோவை தேடி எடுத்து வந்து இரண் டாவது தடவையும் வைக்கிறான்.

ஆனால் எதிரியின் சூட்டுக்கு மீண்டும் கோமகன் இலக்காக மீண்டும் தலையில் காயமடை கிறான். கோமகனின் தலை யிலிருந்து பெருக்கெடுத்து சீறிப் பாய்ந்த இரத்தம் வீரனின் உடலை மேலும் இரத்த மயமாக்க வீரன் கட்டளை இடுகிறான்.

கோமகன் இரத்த வெள்ளத் தில் துவண்டு கிடந்து அதை செவிமடுக்கிறான். என்றாலும்

**— க.மிரேசு —**

அவனது உயிரின் தாகம் எதையோ செய்ய அவனைத் தூண்டுகிறது.

கோமகன் வேண்டாம். வந்த தடையணியில எல்லோரும் வீரச்சாவும், காயமும் எனவே உதவி அணிகள் வரமட்டும் இப்படியே இருப்போம் என சொல்கிறான் வீரன். அதை என்றுமில்லாதவாறு மறுக்கிறான் கோமகன்.

வீரண்ணை நான் எப்படியும் டோபிற்ரோவை வைப்பேன் நீங்கள் உந்தக்காயத்தோட இங்க இருக்கவேண்டாம். அவன் வந்தாலும் பிரச்சினையா போயிடும். மெதுவா தவண்டு வெளியே போங்கோ என்றவன்.

புதிய உயிரொன்று உருவானதை வீரன் அவ்விடத்தில் காண்கிறான்.

கோமகனின் இரண்டு காயங்களிலும் இரத்தம் வழிந்தோட தனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை செய்து முடிக்க வேண்டு மென்ற ஆன்ம உணர்வுடன் மீண்டும் எழுகிறான்.

எழுந்தவன் டோபிற்ரோ வுடன் மெதுவாக தவண்டு தவண்டு சென்று மண் அணையேறி டோபிற் ரோவை வைக்க பக்கத்து காவலர ணிலிருந்து எதிரியின் துப்பாக்கி சடசடத்து ஓயும் போது.

எங்கள் வீரமகன் டோபிற் ரோவை வைத்துவிட்டு தலையில் பல சன்னங்களைத் தாங்கி தாய் மண் ணின் மீது எதிரி ஆக்கிரமித்து அடித்திருந்த மண் அணையிலிருந்து உருண்டு உருண்டு கீழே வந்து வீழ்கிறான். கோமகனின் உயிர் அவனது இலட்சியக் கடமைக்காக பிரிந்து விட்டது.

எங்கள் கோமகன் மீண்டும் மீண்டும் முயன்று கடினப்பட்டு அவர் வைத்த வெடிமருந்து இறுதிவரை வெடிக்கவேயில்லை. அவனது தியா கம் மேலோங்கியிருந்தது. அவனது வீரமோ உயிரையே உலுப்பும் ஓர் அதிசயமாக நடந்தேறியிருந்தது.

மாவீரன் கோமகன் வைத்த வெடிமருந்து வெடிக்க வில்லை. என்றாலும் அவனது வீரச் செயலை நேரே கண்ணுற்ற எதிரியின் இதயம் நிச்சயமாக வெடித்திருக்கும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

இந்த வீரச் செய லைப் போன்றே அந்தத் துடிப்பான வீரன் 2000 ஆம் ஆண்டு உதயமாவ தற்கு முதல் நாள் பரந்தன் சண்டை யிலும் திறம்படச் செயற்பட்டிருந் தான்.

பரந்தன் புளியடி வரை கைப்பற்றி யிருந்த புலிகள் சேனை மேலும் நகர்ந்து சுற்று லாவிடுதியை கைப்பற்ற நகர்ந்தது. நக ர்ந்த அணியில் கோமகனும் ஒருவன். மண் அணை கரையாகக் கடந்து எதிரி தென்படும் போது தாக்குதலை செய்ய வேண்டும் என்பதே திட்டம்.

எதிரியை அண்மித்து தேடிச் சென்ற போது எதிரி முந்திக் கொண்டு தாக்குகிறான். அதில் கோமகன் அவனது அணி காயமடைகிறது. காயமடைந்ததை அறிந்த எதிரி மேலும் தாக்குதலை தொடுத்து முன்னேற முற்பட்டபோது கோமக னின் 02 குண்டுகள் எதிரியை பதம்பார்க்கின்றன.

என்றாலும் எதிரி விடுவதாக இல்லை. தொடர்ந்து தாக்குகிறான். பின்னாலிருந்த எமது அணிக்கு இவ்வணியின் நிலை தெரியாது இருக்கவே நிலைமையை அவர் களுக்குச் சொல்ல. தனது காயங் களுடன் சென்று நிலைமையைச் சொல்லி அவ்வணியின் உதவியை பெற்று பின்வாங்குவதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினான்.

இவ்வாறாக அந்த துடிப்பான போராளியான லெப்.கோமகனுக்கு வீரம்மிகுந்த வேகமான செயற்பாடு இருந்தது.

தான் எடுத்த கடமையில் தன் உயிரைப் பணயம் வைத்தே அவன் செயற்படுவதுண்டு. லெப் கோமகன் (சிவசுப்பிரமணியம் பிள்ளையார்சோதி) என்ற அந்த மாவீரனின் அதிசயமான வீரத்தின் முன் என்றும் நாம் தலைசாய்த்தாக வேண்டும். தாய்நாட்டின் உயிர் மூச்சுக்காய் இறப்பிலும் உழைத்தவன் லெப். கோமகன்.

# தமிழ் மாணவர்கள் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்



தமிழர் தாயகத்தில் தமிழ் மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும் தற்போதைய கல்வித் தரத்தில் இனியும் வீழ்ச்சி ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். 1970களில் இருந்து தமிழ் மாணவர்களின் கல்வி படிப்படியாக வீழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கின்றது. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். இனியும் வீழ்ச்சியுறும் நிலை தொடருமானால் எதிர்காலத்தில் தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் மிகவும் மோசமான வேதனையான் நிலையை அடையும். இதனைத் தடுத்துநிறுத்த அனைத்து ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும், கல்விசார் நலன் விரும்பிகளும் உடனடியாக நட வடிக்கை எடுக்கவேண்டும் என தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எமக்கு வழங்கிய பேட்டியில் தமிழ் மாணவர்களின் கல்விப் பாரம்பரியம் எப்படிச் சீரழிகின்றது அல்லது எப்படிச் சீரழிக்கப்படுகின்றது என்பதனை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றார்.

அவர் எமக்கு வழங்கிய பேட்டியின் முழு விபரம் வருமாறு;

**கேள்வி:- பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் கல்வித்தரப்படுத்தலில் பாதிக்கப்பட்டதினால் தான் தமிழ் மாணவர் பேரவை என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது. அன்று கல்வித் தரப்படுத்தலை யாழ்ப்பாணத்தில் எதிர்த்த தமிழ் மாணவர்கள் அதற்காக இன்று ஏங்கும் அல்லது கல்வித்தரப்படுத்தல் வேண்டும் என்று குரல் எழுப்பும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டிற்கு என்ன காரணம்? இன்று இலங்கைத்தீவில் கல்வித் தரப் படுத்தல் இல்லாவிட்டால் குறிப் பாக [illegible] மாணவர்களின பல்கலைக்கழகப் பிரவேசம் மேலும் வீழ்ச்சியடையும் என ஆய்வுகள் கூறுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்:- இலங்கைத்தீவில் கல்வியறிவில் கூடியவர்கள் தமிழீழத்திலேயே வாழ்ந்தார்கள். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிறந்துவளர்ந்தார்கள். 1970களில் இலங்கை அரச அலுவலகங்கள் எங்கும் தமிழர்களே பணியாற்றினார்கள். எங்கும் தமிழ்தான், யாழ்ப்பாணத்திலிருந்தே உத்தியோகத்தர்கள் இலங்கை எங்கும் சென்றார்கள். அதனால் தமிழர்களின் கல்வியறிவை குறைப்பதற்கும் சீரழிப்பதற்கும் சிங்களவரின் கல்வியறிவைக் கூட்டுவதற்காகவும் அவர்களை வளப்படுத்துவதற்காகவும் வெட்டுப் புள்ளித் தரப்படுத்தல் திட்டத்தை சிங்கள அரசு முன்வைத்தது.

அதனால் அதி கூடிய புள்ளி பெற்ற தமிழர்கள் பல்கலைக்கழகம் செல்லவில்லை. அதைவிட குறைந்த புள்ளிகளைப்பெற்ற சிங்களவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். இதனால்தான் தமிழரின் புரட்சிப் போராட்டம் தோன்றியது. இவ்வாறாக காலம் கடந்தபோது தமிழ் மாணவர்களின் கல்வியில் சிங்கள கல்வியமைச்சு திட்டமிட்டு பல்வேறு சூழ்ச்சிகளை செய்துவந்தது. அதன் மூலம் கல்வி அறிவு ரீதியில் தமிழர்களின் அறிவியல் வளம் படிப்படியாக குறைய ஆரம்பமானது. புத்திக் கூர்மையும் கல்வியறிவில் ஆற்றலும் திறமையும் உடைய தமிழ் மாணவர்களின் கல்வி படிப்படியாக வீழ்ச்சியைக் கண்டது. அல்லது வீழ்ச்சியடையச் செய்யப்பட்டது.

தமிழ் மாணவர்களின் கல்வியறிவு குறைய இடப்பெயர்வுகளும் போரும் ஒரு காரணமாக இருந்தது. அத்துடன் பிரதான காரணமாக அமைந்தது அது அல்ல. தமிழ் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் வளம் ப்ற்றாக்குறையாக்கப்பட்டது.ஆசிரியர் நியமனம் குறைக்கப்பட்டது. ஆசிரியர்வெற்றிடங்கள் உருவானமை, கல்விச் சாதனங்கள் இன்மை என்பன காரணமாக அமைந்தன.

தமிழ் மொழிமூல ஆளணி சகல துறைகளிலும் சிங்கள அரசால் மட்டுப்படுத்தப்பட்டு குறைக்கப்பட்டது. 1971-1974ஆம் ஆண்டும் இடையில் 21374 புதிதாக நியமிக்கப்பட்ட இடத்தில் அதில் 1867பேருக்கு மட்டுமே தமிழர்களுக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாண்டில் 3000 தமிழர்கள் ஓய்வு பெற்று வீடு சென்றனர்.

1.11.1976இல் 7500 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டனர். இதில் 645மட்டும் தமிழர்கள். இது மொத்த சனத்தொகை வீதத்தில் 8.6 வீதமாகும்.

**★★★★★★★ தமிழரின் மூளைவளம் நாசமாகின்றது. அதனை தமிழர் தேசத்திற்கு பயனுள்ளதாக மாற்றியெடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் ஆர்வலர்களினதும் கடமையாகும். தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைகின்றது என்று கூறுவதைவிட திட்டமிட்டு சிங்கள அரசால் வீழ்ச்சியடையச் செய்யப்படுகின்றது. ★★★★★★**

1977-79 காலப்பகுதியில் இலங்கையில் அரசசேவையில் 59092 நியமிக்கப்பட்டனர். இதில் தமிழர்கள் 4596பேர் மட்டும். இதனால தான் தமிழ் மாணவர்களின் கல்வி சீரழிகின்றது.

அத்துடன் இலங்கையின் மத்திய கல்வி அமைச்சின் அலுவலகத்தில் 1200 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இதில் 20

## கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்

தமிழர்கள், 30 முஸ்லிம்கள் 4-1 வீதம் தமிழ் முஸ்லிம் உத்தியோகத்தர். மீதி 95.9வீத உத்தியோகத்தரும் சிங்கள இனத்தவர்கள்.

தேசிய கல்வி நிறுவனத்திலும் கல்வி நிர்வாக சேவையிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. இதனால் இலங்கையின் தமிழ்க் கல்வி நிர்வாகம் சீர்கெட்டுப் போய் உள்ளது. தமிழ் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இல்லை. சரியான பாடத்திட்டமும் இல்லை. குறைவான ஆசிரியர்களே உள்ளனர். எல்லாப் பாடசாலைகளிலும் தொண்டர் ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். பயிற்றப்பட்ட ஆசிரியர் வளம் இல்லை. ஆசிரியர்களுக்கு போதியளவு கைநூல்கள் இல்லை.

சிங்கள அரசு திட்டமிட்டு தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கின்றது. இதனால் தமிழ் மாணவர்களின் கல்வி மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டம் தான் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டிருப்பதும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பாடங்கள் குறைக்கப்பட்டுள்ளதுமாகும்.

இதனால் தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் குறைந்துவிட்டது. சிங்கள மாணவர்களின் கல்வித்தரம் அதிகரித்துவிட்டது. தமிழர்களின் கல்வித்தரம் அதிகமானபோது தரப்படுத்தல் இருந்தது.

இன்று சிங்களவர்களின் கல்வித்தரம் சூழ்ச்சிகளால் உயர்த்தப்பட்டபோது தரப்படுத்தல் முறைமை நீக்கப்பட்டுள்ளது. இதனால் அன்றும் இன்றும் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மாணவர்களே. இதனால் இன்று கல்வித்தரப்படுத்தல் வேண்டும் என்பதற்காக தமிழ் மாணவர்கள் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இது சிங்கள அரசின் திட்டமிட்ட சூழ்ச்சியினாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தமிழரின் மூளைவளம் நாசமாகின்றது. அதனை தமிழர் தேசத்திற்கு பயனுள்ளதாக மாற்றியெடுக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் ஆர்வலர்களினதும் கடமையாகும்.

தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைகின்றது என்று கூறுவதைவிட திட்டமிட்டு சிங்கள அரசால் வீழ்ச்சியடையச் செய்யப்படுகின்றது. சிங்கள மாணவர்களுக்கு குறைந்த வெட்டுப்புள்ளி, தமிழ் மாணவர்களுக்குக் கூடிய வெட்டுப்புள்ளி இவ்வாறான பிரச்சினைகள் தான் தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம். அட்டவணை I,II ஐப் பார்க்கவும்.

மருத்துவத்துறையில் 70ஆம் ஆண்டில் ஒரே அளவாக இருந்த சிங்கள, தமிழ் மாணவர்கள் அனுமதி வீதம் 75ஆம் ஆண்டில் சிங்கள மாணவர்கள் 30வீதம் கூட தமிழ் மாணவர்கள் 31.5வீதம் குறைவடைந்து சிங்கள, தமிழ் மாணவர்கள் அனுமதி வேறுபாடு 61.5 வீதம் ஆக அமைந்தது. 1970ஆம் ஆண்டில் 3.4 வீதமாக இருந்த பொறியியல்துறை

பல்கலைக்கழக அனுமதியில் இனவாரியான தரப்படுத்தல் -1970 அட்டவணை I

| துறை | பல்கலைக்கழகம் | இனம் | அனுமதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை | அனுமதிக்கான ஆகக்குறைந்த இனவாரியான புள்ளி. |
|---|---|---|---|---|
| பொறியியல் | பேராத்னை | சிங்களவர் | 86 | 227 |
| ” | | தமிழர் | 60 | 250 |
| ” | கட்டுபெத்த | சிங்களவர் | 60 | 212 |
| ” | ” | தமிழர் | 53 | 232 |
| மருத்துவம் | பேராதனையும், கொழும்பும் | சிங்களவர் | 137 | 229 |
| | | தமிழர் | 103 | 250 |
| பல் மருத்துவம் | பேராதனையும், கொழும்பும் | சிங்களவர் | 17 | - |
| ” | ” | தமிழர் | 24 | - |
| வேளாண்மை | பேராதனை | சிங்களவர் | 25 | - |
| | ” | தமிழர் | 17 | - |
| கால்நடை மருத்துவம் | ” | சிங்களவர் | 15 | - |
| ” | ” | தமிழர் | 05 | - |
| உயிரியல் விஞ்ஞானம் பௌதீகவியல் | எல்லாநான்கு இடங்களிலும் விஞ்ஞானம். | சிங்களவர் | 111 | 175 |
| ” | ” | தமிழர் | 41 | 181 |
| ” | ” | சிங்களவர் | 178 | 183 |
| ” | ” | தமிழர் | 92 | 204 |
| கட்டடக்கலை | | சிங்களவர் | 16 | 180 |
| | | தமிழர் | 28 | 194 |

# தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கிறது

நேர்காணல்
சங்கரன்

பல்கலைக்கழக அனுமதி -1969-1975 அட்டவணை II

| விஞ்ஞான அடிப்படையிலான கற்கைநெறி | 1969/70 | 1970/71 | 1971/72 | 1972/73 | 1973/74 | 1974/75 |
|---|---|---|---|---|---|---|
| சிங்கள மாணவர்கள் | 69.7% | 68.0% | 67.0% | 73.1% | 75.4% | 78.0% |
| தமிழ் மாணவர்கள் | 27.6% | 28.6% | 31.2% | 25.9% | 20.9% | 19.5% |
| பொறியியல் கற்கைநெறி | | | | | | |
| சிங்கள மாணவர்கள் | 51.7% | 55.9% | 62.4% | 72.1% | 78.8% | 83.4% |
| தமிழ் மாணவர்கள் | 48.3% | 40.8% | 34.7% | 24.4% | 16.3% | 14.2% |
| மருத்துவம் | | | | | | |
| சிங்கள மாணவர்கள் | 48.9% | 53.5% | 56.1% | 58.8% | 70.0% | 78.9% |
| தமிழ் மாணவர்கள் | 48.9% | 40.9% | 39.3% | 36.9% | 25.9% | 17.4% |
| கலை, சட்டம், உட்பட | | | | | | |
| சிங்கள மாணவர்கள் | 88.4% | 88.9% | 92.6% | 91.5% | 86.0% | 85.6% |
| தமிழ் மாணவர்கள் | 07.5% | 07.6% | 04.8% | 06.1% | 10.0% | 10.0% |

சிங்கள, தமிழ் மாணவர் அனுமதி வேறுபாடு 75ஆம் ஆண்டில் 69.2 வீதம் ஆக உயர்ந்தது.

இனவாரித்தரப்படுத்தல், மாவட்ட அடிப்படையிலான இட ஒதுக்கீடு, பின்தங்கிய மாவட்ட ஒதுக்கீடு, திறமைக்கான அனுமதி என பல்வேறு வகைகளில் மாற்றியமைக்கப்பட்டு கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி புதிய அனுமதிமுறைகளுக்கு ஏற்ப சற்றுக் கூடியும் குறைந்தும் வீழ்ச்சிப் போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறது.

1970இல் 48.9 வீதமாக இருந்த தமிழ் மாணவர்களுக்கான மருத்துவத் துறை அனுமதி 2002இல் 10.28 வீதம் ஆகக்குறைந்துள்ளது. மாவட்ட ஒதுக்கீடு குறைக்கப்பட்டு திறமைக்கான ஒதுக்கீடு உயர்த்தப்படும் என்ற தேசிய கல்வி ஆணைக்குழுவின் முடிவுக்கேற்ப அடுத்த ஆண்டில் தமிழ் மாணவர்களின் மருத்துவத் துறை அனுமதி 8வீதம், 7வீதம் எனக் குறையப்போகின்றது. இதனால் பல்கலைக்கழகத்தில் இருக்கும் மருத்துவபீட மாணவர் ஒதுக்கீட்டளவுக்கும் குறைவான தமிழ் மாணவர்களுக்கே பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். எமது பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மீதி இடங்களை சிங்கள மாணவர்களைக்கொண்டு நிரப்ப வேண்டிய நிலை தவிர்க்கமுடியாததாகி விடும். இதுபோன்றே ஏனைய துறை அனுமதிகளுக்கும் நேர இருக்கின்றன.

அந்த அளவுக்கு தமிழ் மாணவர்களின் கல்வித்தரம் கடந்த 35 ஆண்டுகளில் சிங்கள ஆட்சியாளரால் திட்டமிட்டு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சிப்போக்கு மேலும் கூடுவது தவிர்க்கமுடியாததாகும்.

70ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ் மாணவர்களின் கல்வித்தரமும், பல்கலைக்கழகத்திற்கான அனுமதியும் படிப்படியாகக் குறைந்து வருகிறதே தவிர அதிகரித்ததாக வரலாறு இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

**கேள்வி:- தமிழ் பாடநூல்களில் பல பிழைகள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன? ஆதாரங்களுடன் சுட்டிக் காட்ட முடியுமா?**

பதில்: தமிழ்-சைவம் தவிர்ந்த ஏனைய பாடநூல்கள் அனைத்தும் சிங்கள நூலின் மொழிபெயர்ப்பே யாகும். இதனை தமிழ் மாணவர்கள் கிரகிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

தேசிய கல்வி நிறுவனத்திற்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் பலமுறை இதுபற்றி சுட்டிக்காட்டியும் அவர்கள் அவற்றில் அக்கறை காட்டவில்லை. சமூகக் கல்வி, குடியியல், புவியியல், வரலாறு, 7ஆம் ஆண்டு நூல்களிலும் ஏகப்பட்ட பிழைகள் உண்டு. அதாவது பல வரலாற்றுத் தவறுகள் உண்டு. வரலாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இலக்கணப் பிழை, எழுத்துப்பிழை சொற்பிழை, எண், இடம், புணர்ச்சி, திணை, பால் என்று பல பிழைகள் உண்டு. இதனை எமது பிள்ளைகள் சரிஎன்று நினைத்துப் படிக்கப் போகின்றார்கள். உதாரணமாக பல வரலாற்றுப் புத்தகம் 62 பக்கத்தில் 667பிழைகளும், புவியியல் 48 பக்கத்தில் 329 பிழைகளும் குடியுரிமை 40 பக்கத்தில் 231பிழைகளும் உண்டு. இதனைக் கண்டு பிடிக்க ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டு அனுப்பப்பட்டபோதும் உருப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இவ்வருடமும் புதிய பதிப்பும் அதே தவறுகளுடன் எதுவித திருத்தமும் இன்றி வெளியிடப் பட்டுள்ளது.

**கேள்வி:- வடக்கு கிழக்கில் க.பொ.த(சாதாரணதரம்), க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளில் மாணவர்களின் ஆங்கிலப் பாட சித்தி மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்:- தமிழர் தாயகத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது.

தமிழ் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியிலும் அக்கறை காட்ட வேண்டும். நாங்கள் தமிழர்கள் ஆனாலும் ஆங்கில அறிவில் தேர்ச்சிபெற்றவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர் பற்றாக்குறையே முக்கிய பிரச்சினை. இது தொடர்பான விபரம் அட்டவணை IIIஐ பார்க்க.

எமது தமிழ் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற்றால் தான் சர்வதேசரீதியில் தமிழர்களின் கல்வித்தரத்தையும் நகர்த்தமுடியும்.

**கேள்வி:- வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை விபரம் பற்றிக் கூறமுடியுமா?**

பதில்:- வடகிழக்கு தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை அட்டவணை IV ஐப்பார்க்கவும்.

வடக்கு கிழக்கில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை - 2004
(தமிழ் மொழிமூல மாணவர்களுக்கானது) அட்டவணைIII

| தரம் | தேவை | இருப்பு | பற்றாக்குறை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| 1-5 தொடக்கநிலை | 1645 | 340 | 1305 | 79.33% |
| 6-11 இடைநிலை | 1422 | 822 | 600 | 42.19% |
| 12-13 க.பொ.த.உயர்தரம் | 272 | 98 | 174 | 64.0% |
| மொத்த ஆங்கில ஆசிரியர்கள் | 3339 | 1260 | 2079 | 62.26% |

இப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ கல்விக்கழகம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. இருக்கின்ற ஆசிரியர் வளத்தை சம பங்கீடு செய்து வருகின்றோம். இது தொடர்பாக அரசுக்கும் கல்வியமைச்சுக்கும் மாகாண சபைக்கும் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டது. பல்வேறு போராட்டங்கள் நடாத்தப் பட்டது. எதுவித பயனும் கிடைக்கவில்லை.

சிங்கள பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர் நியமனம் செய்யப்படுகின்றது. தமிழ் பாடசாலைகளில் தேவை யைக்கூட அரசால் பூர்த்தி செய்ய முயற்சிக்க அல்லது விரும்பவில்லை.

**கேள்வி:- பாட சாலைகளில் மாணவர் களிடம் நற்பண்புகள் அருகி வருவதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்:- தமிழர் பாரம்பரியத் திற்குப் பெயர் போன யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களிடம் அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச பாடசாலை மாணவர்களிடம் தீய பழக்க வழக்கக் கலாச்சாரம் காணப படுவதாக அறியமுடிகின்றது. மாண வர்களிடம் தீயபழக்க வழக்கம் வளர்ந்துவர பிரதான காரணம் சிறிலங்காப் படைத்தரப்பும் புலனாய் வுப் பிரிவும் தான் காரணம். குறிப்பாக நீலப்படங்களை இராணுவத்தினரே யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடம் விநியோகித்து வருகின்றனர். மாணவர்களிடம் சிறு சிறு குழுக்கள் உருவாகக் காரணமாக இருப்பதுடன் கோஷ்டி மோதல்களுக்கும் இவர்கள் பின்புல ஆதரவு வழங்கிவருகின்றனர்.

**கேள்வி:- இறுதியாக தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பற்றியும் சுருக்கமாகக் கூறுங்கள்.**

பதில்:- இலங்கைத்தீவில் தமிழர் கல்வியானது மாறி மாறி வந்த எல்லா அரசுகளாலும் எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் புறக்கணிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. 70களின் தொடக்கத்தில் தமிழர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கு உலைவைக்கும் நோக்குடன் தரப்படுத்தல் எனும் வழிமுறை அன்றய அரசால் கையாளப்பட்டது.

வெளிப்படையான நேரடியான அந்த இனவாதப்போக்குக்கு உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய அளவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து சிங்கள இனவெறி அரசு தமிழர் கல்விக்கு உலைவைக்கும் போக்கை மாற்றாது வழி முறையில் மாற்றங்களை மேற்கொள்ளும் முயற்சியில் இறங்கியது.

தொர்ட்ச்சியாக ஆட்சியில் இருந்த சிங்கள அரசுகளினால் தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் பணியமர்த்தல்கள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டும், மட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன.

தமிழ்ப் பகுதிகளுக்கான கட்டட வளங்கள் ஏனைய கற்பித்தற் கருவிகள் போன்றவற்றில் புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மொழி மூலப் பாடநூல்கள் தரக்குறைவாகவும் காலந்தாழ்த்தியும் வெளியிடப்படுகின்றன.

பல பாடங்களுக்கான நூல்கள் தமிழ் மொழியில் அறவே வழங்கப்படாத நிலையும் இருந்துவருகிறது. உலக வங்கியின் உதவியோடு நாடளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் கல்விச் சீர்திருத்தங்கள் அதற்கான வளப்பங்கீடுகள் போர்ச்சூழலைக் காரணங்காட்டி தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காத நிலை, ஏற்படுத்தப்பட்டன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியிலிருக்கின்ற சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்கொடிய இனவெறி நடவடிக்கைகளினால் தமிழ் மாணவர் கல்வித் தரம் நாடளாவிய அளவில் எல்லா மட்டங்களிலும் குறைந்துகொண்டு வீழ்ச்சிப்போக்கில் செல்கின்றது.

தரப்படுத்தல்களை எதிர்த்து திறமைக்கு முன்னுரிமை கோரிப் போராடிய தமிழ் மாணவர்கள் இன்று அரசு வழங்கும் மாவட்டக் கோட்டாக் களுக்குக் கையேந்தும் நிலைக்குத் தமிழர் கல்வி தாழ்ந்துவிட்டது. தொடர்ந்தும் தாழ்ந்துகொண்டு செல்கிறது.

**★★★★★★ தரப்படுத்தல்களை எதிர்த்து திறமைக்கு முன்னுரிமை கோரிப் போராடிய தமிழ் மாணவர்கள் இன்று அரசு வழங்கும் மாவட்டக் கோட்டாக் களுக்குக் கையேந்தும் நிலைக்குத் தமிழர் கல்வி தாழ்ந்துவிட்டது. தொடர்ந்தும் தாழ்ந்துகொண்டு செல்கிறது. ★★★★★★**

கல்விக்கு அடிப்படையான தொடக்கக்கல்வி ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள கடும் பற்றாக்குறையினால் தொடக்கக்கல்வியே ஆட்டங் கண்டுவிட்டது.

ஆங்கில ஆசிரியர்கள் வழங்கப்படாமையால் ஆங்கிலக்கல்வி அறவே இல்லை என்ற நிலை ஆகிவிட்டது. கணித விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறைகளினால் கணித விஞ்ஞான கல்வித்தரம் தாழ்ந்துவிட்டது. தமிழ்ப்பாடசாலைகளில் தொழில் முன்னிலை கல்வி, தொழிற்கல்வி அறவே இல்லை என்ற நிலை ஆகிவிட்டது.

தேவையான தொழில்நுட்பக் கல்லூரிகள் இன்மையினாலும் இருக்கும் தொழில்நுட்பக் கல்லூரிகள் கடும் வளப்பற்றாக்குறைகளோடு இயங்குவதாலும் தொழில் தொடர்பான தொழில்நுட்பம் தொடர்பான அறிவு தமிழ் மாணவர்களுக்கு அறவே கிடைக்காத எட்டாக்கனியாகிவிட்டது எனத் தெரிவித்தார் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் அவர்கள்.

வடகிழக்கு மாகாணத் தமிழ்மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை
அட்டவணை IV

| | தொடக்க நிலை பொது | | | | இடைநிலை கணிதம் விஞ்ஞானம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | தேவை | இருப்பு | பற்றாக் குறை | வீதம் | தேவை | இருப்பு | பற்றாக் குறை | வீதம் |
| 1999 | 9110 | 6262 | 2848 | 31.26% | 3156 | 2627 | 529 | 16.76% |
| 2000 | 9194 | 6566 | 2628 | 28.58% | 2824 | 2301 | 523 | 18.51% |
| 2001 | 9229 | 7094 | 2135 | 23.13% | 3037 | 2817 | 320 | 10.53% |
| 2002 | 8887 | 6752 | 2135 | 24.02% | 2938 | 2531 | 407 | 13.85% |
| 2003 | 8581 | 7067 | 1514 | 17.64% | 2668 | 2349 | 519 | 11.95% |
| 2004 | 8549 | 7207 | 1342 | 16.00% | 3077 | 2559 | 518 | 16.83% |
| 2005 | 9420 | 7343 | 7343 | 22.04% | | | | |



சிறுகதை



# “மகேபுத்தா”

**அந்தப் புன்னகை முகத்தில் கனநேரம் தன்னை மறந்து இருந்தான் கப்டன் நந்தசிறீ. காலையில் நடந்த அந்த விபத்தில் நினைவு இடைக்கிடை சேர்ந்து கொண்டாலும் அந்த விபத்து அவன் இயல்பான நடவடிக்கைக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவன் மேசை மேல் இருந்த தொலைபேசிமணி அலறியது. றிசீவரை எடுத்து காதில் பொருத்தியவன் சிறிது நேரத்தில் “மகேபுத்தா” என அலறினான்.**

அமைதியை விழுங்கிய பேரிரைச்சலுடன் ஓர் சிறிலங்கா இராணுவத்தின் ஜீப்வண்டி பலாலி இராணுவ முகாமை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அவ் வண்டியில் பச்சைத் தொப்பிகளுடன் இராணுவத்தினர் கையில் துப்பாக்கியுடன் உசார் நிலையில் பார்வையை வீசியபடி உட்கார்ந்திருந்தனர்.

அவர்கள் மனம் மட்டும் புத்த பகவானை ஜெபித்தபடி இருந்திருக்க வேண்டும். முகங்கள் நன்றாக இறுகி இருந்தன. முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த இராணுவ கப்டன் நந்தசிறீ மட்டும் ஓர் சிகரெட்டைப் புகைத்தபடி வீதியில் பார்வையை செலுத்தி விறைப்பாக அமர்ந்திருந்தான்.

அவன் பார்வையில் பயம் மண்டிக் கிடந்தாலும் அதை வெளிக்காட்டக் கூடாது என்ற எண்ணத்தில் இயல்பாக அமர்ந்திருப் பவன் போல் தோற்ற மளித்தான். அந்த ஜீப் வண்டியை செலுத்தியபடி இருந்த சிப்பாய் அடிக்கடி கப்டன் நந்த சிறீயை நோக்குவதும் பின் பார்வையை பாதையில் சொலுத்தியபடி இருந்தான்.

அவன் தன்னைப் பார்ப்பதையும் பார்வை பாதை மீது படுவதும் கவனித்தும் கவனிக்காதவன்போல கப்டன் நந்தசிறீ அமர்ந்திருந்தாலும் அவன் முகம் வினாடிக்கு வினாடி மாறியபடி இருந்தது. வீதியில் சென்ற அந்த ஜீப் திடீரென பிறேக் போட்டு குலுங்கியது. அந்த குலுக்கலால் திகிலடைந்த இராணுவ சிப்பாய்கள் அனைவரும் கட்டளை ஏதும் இல்லாமல் துப்பாக்கியைப் பிடித்தபடி திக்கொருவனாய் நின்றார்கள்.

‘கண்மூடித் திறப்பதற்குள் அவ்வீதியால் வந்த பல்கலைக்கழக மாணவி தூக்கி வீசப்பட்டாள். அவளின் அம்மா? என்ற வார்த்தையும் உயிர்த்துடிப்பும் சில கண நேரத்துக்குள் அடங்கி ஒடுங்கிப்போயிருந்தது. அவள் உடல் அந்த ஜீப் வண்டியில் இருந்து சில அடி தூரத்தில் இரத்த வெள்ளத்தில் சங்கமித்தபோது.

அந்த ஜீப் வண்டி யில் இருந்து இறங்கிய கப்டன் நந்தசிறீ உட்பட அனைவரும் அந்தப் பெண்ணைப் பார்த்தார்கள். அதில் ஓர் சிப்பாய் அவளிடம் அடையாள அட்டை உள்ளதா என ஆராயத் தவறவில்லை. இருண்டுபோயிருந்த அனைத்து சிப்பாய்களின் முகத்தில் சிறிது தெளிவு தெரிந்தது.

கப்டன் நந்தசிறீயின் முகத்தில் அலட்சியமும் வெறுப்பும் தோன்ற “ஹரி...ஹரி... ஒக்கம நகிண்ட” என்றவன் தானும் ஜீப்பில ஏறி அமர்ந்துகொண்டான். அந்த ஜீப் வண்டி மறைந்து போனது.

சில மணித்துளிகள் விரைந்தன. அந்தத் தெருவில் பலர் கூடினர். “ஐயோ பாவம் ஆரெண்டு தெரியேல்ல... கோதாரி யில போன ஆமிக்காரங் கள் நாயை அடிச் போட்டு போடுற மாதிரி போறாங்கள். எங்கட சனங்கள் இப்பிடித்தான் அநியாயமாகச் சாகுதுகள் பாவம்” என்ற பல தரப்பட்ட குரல்கள்.

அனுதாபத்தையும் இரக்கத்தையும் சுமந்து நின்ற அந்தக் கூட்டம் மெல்ல... மெல்ல அவ்விடத்தை விட்டு அகன்ற வண்ணம் இருந்தது. சிறிலங்கா போக்கு வரத்து கண்காணிப்பு பொலிசார், செஞ்சிலுவை சங்கவான் விசாரணை, போஸ் மட்டம் என வழமையாக நடப்பவை நடந்தேறின.

‘பாவம்... அந்தப் பிள்ளை கம்பசில தான் படிக்கிறது. இந்த நேரத்தில பாவம் நாசமாப் போன ஆமிக்காரங்கள் கண்மண் தெரியாமல் அடிச்சுப் போட்டு போட்டாங்கள். என்ன செய்யிறது உப்பிடி எத்தினை சனங்கள். உந்த கொள்ளையில போன ஆமிக்காரங்களால் செத்துப்போகுதுகள்’

என தன் மன உணர்வை வெளிப்படுத் தியது அந்தக் குரல். பயணத்தை முழுமையாக விழுங்கிய திருப்தியில் பலாலி இராணுவ முகாமுக்குள் நுழைந்து நின்றது அந்த இராணுவ ஜீப் வண்டி. அதிலிருந்த சிப்பாய்கள் சர்வ சாதாரணமாக இறங்கிக் கொண்டனர்.

அவர்களோடு கப்டன் நந்தசிறீயும் தன் தொப்பியை சரி செய்து கொண்டு இறங்கிக் கொண்டான். பின் ஏதோ சிந்தனை செய்தவன் தனது அறைக்குள் புகுந்து கொண்டான். முகத்தில் வழிந்த வியர்வையை தன் கைக்குட்டையால் துடைத்தபடி அவன் பார்வை மேசை மேல் வைத்திருந்த தன் மனைவி, மகன் பிரியந்தவின் போட்டோவில் படிந்தது.

அந்தப் புன்னகை முகத்தில் கனநேரம் தன்னை மறந்து இருந்தான் கப்டன் நந்தசிறீ. காலையில் நடந்த அந்த விபத்தின் நினைவு இடைக்கிடை சேர்ந்து கொண்டாலும் அந்த விபத்து அவன் இயல்பான நடவடிக்கைக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவன் மேசை மேல் இருந்த தொலைபேசிமணி அலறியது. றிசீவரை எடுத்து காதில் பொருத்தியவன் சிறிது நேரத்தில் “மகேபுத்தா” என அலறினான்.

அந்த அலறல் அந்த அறையை ஆக்கிரமித்து அதன் அப்பாலும் வியாபித் திருந்தது. அவன் முகம் சோகத்தால் இருண்டது. அவன் கண்களில் இருந்து கண்ணீர் திரண்டது. அந்த அலறல் சத்தம் கேட்டு காவலில் நின்ற சிப்பாய் அவன் அறைக்குள் துப்பாக்கியுடன் பாய்ந் தான். அவன் கண்கள் அச்சத்தால் விரிந்திருந் தன. பயத்துடன் நந்த சிறீயைப் பார்த்தான்.

அவன் எவ்வித சலனமும் இன்றி கண்களில் நீர் வழிய,

“மகேபுத்தா” “மகேபுத்தா” என தனக்குள் புலம்பிக் கொண்டிருந்தான். காவலுக்கு நின்ற சிப்பாய் விழித்தான்.

அவனைத் தொடர்ந்து சில சிப்பாய்களும் ஓடி

**ரமணன்**

வந்தார்கள். அவர்கள் அனைவரின் முகத்திலும் என்ன நடந்தது என்ற கேள்விக்குறி எழுந்து நின்றது.

நந்த சிறீயால் எதுவும் பேச முடியவில்லை. சிறிது நேரத்தின் பின் “மகேபுத்தா... மரணுவா... பஸ் அக்கிடன்” என்றவன்.

பேசாமல் மெளன மாக நின்றான். புத்திர சோகம் அவனை மெளன மாக்கியது. எம் மண்ணி லும் புத்திர சோகம் எத் தினை உள்ளங்களை மெளனமாக்கியது என்பது அவனுக்குப் புரியுமா? மீண்டும் அவன் கண் முன்னே அந்த விபத்து நிழலாடியது.

## யாழ் இடப்பெயர்வின் மறக்கப்படாத நினைவுகள்

# மாறாத வடுக்களும் மறக்கப்படக்கூடாத வலிகளும்!

வேரோடு இழுத்து
வெளியே எறிந்தது போல்
ஊரோடு எல்லாம்- அவல
ஊர்வலம் போன நாள்

சுற்றிவர உறவோடு
சொந்தம் சொல்லப் பலரோடென்று
அறியாத காலம் தொட்டு
பரம்பரை பரம்பரையாக
நாமெல்லாம் அறிந்தளந்த தெருக்களின்
குட்டி ராஜா/ராணி என
குதூகலித்து வேரோடியிருந்த வலிகாமம்!

இரவினைக் காவியங்கே
இயமர்கள் வந்தார்கள்;
எங்கள் அழகிய ஊரின் மேலே
அழிகுண்டு போட்டார்கள்
அவர்கள் முறைத்துப்பார்த்த- எங்களின்
முகவரிகளெல்லாம் முகாரி பாடின!
நாம் சுவாசித்த அழகுவதனங்களெல்லாம்
அலங்கோலம் ஆக்கப்பட்டன
உறவுகளென்று அழைக்கப்பட்டவர்கள் பலர்
உதிர வெள்ளத்திலே
அடையாளம் காணப்படுவதற்காய்
அடுக்கப்பட்டிருந்தனர்
ஐயோ! ஏனிந்த அவலம் எங்களுக்கு?
பேயே! ஏனிப்படி பேய்த்தனம் புரிகின்றாய்?
காலியிலோ, குருநாகலிலோ அல்லது
கேகாலையிலோ வந்துன் மடியிலிருந்து
உபத்திரவம் ஏதும் செய்தோமா நாம்?
இல்லையே! பிறகேன் வந்தாய் இங்கே?

கேட்கத்தானே முடிந்தது
அப்போது எம்மால்!
கெடுதல் செய்துகொண்டிருப்பதை
பார்த்துப்பார்த்து பதைபதைத்தபடி- மனம்
வெம்முவதைத் தவிர
வேறென்ன முடிந்தது எம்மால்?

எங்கள் பிள்ளைகள் வந்தார்கள்;
மாற்றிவிட ஆளணியின்றி நேற்று
அதற்கு முந்தைய இரண்டுநாட்களுமென்று
பலமாகப் போராடினார்கள் தனித்து நின்று!
இருந்தும் பேயின் ஆட்டம்
பொதுமக்கள் உயிர்களின்
பெறுமதி அறியாதது
அண்டை நாட்டின்
ஆசீர்வாதத்துடன் அல்லவா
அகலக்கால் பதிக்க வந்தது
அங்கும் இங்குமாய்
அகோரம் சிரித்தது
தேவனின் ஆலயத்திலும்
தேடி அழித்தது
ஓலத்தின் குரல்
உச்சியைத் தொட்ட போதும்
அடங்காமல் நாகர்கோயிலிலும்
நரபலி கண்டது
பிஞ்சுத்தசைகள் சிதறிப் பெருங்குவியலென
எங்கள் எதிர்காலங்கள்
மூட்டைகளில் முடிச்சிடப்பட்டன!
என்ன செய்வோம்?
வேறுவழியின்றி
வெளியேற வேண்டியிருந்தது
எஞ்சியிருக்கும் உயிர்களாவது
எங்களுடன் மிஞ்ச வேண்டுமல்லவா?

எத்தனை கால்கள்
அன்று நடந்தன?
எத்தனை கண்கள் அழுதன?
இனிமேலும் முடியாதென்று
இதயங்கள் விடைபெற்று
இழவுகள் நடந்தேறின!
சொல்லிச்சொல்லித் தீராத
சோகங்கள் நிகழ்ந்தேறின!
எல்லாமே வெளியால் வாழும்
எமது உறவுகளைத் தவிர
வேறெவர் அறிவார்
அல்லது அறிய முற்பட்டார்?
முடக்கப்பட்ட ஊடக சுதந்திரமும்
கொழும்பிலிருக்கும் தமிழின்
கோடரிக்காம்புக்கட்சிகளும்
ஆதிக்க விசுவாசத்திற்கு
அடங்கியே போய்
ஆதரவு கொடுத்தன

எங்கள் வலிகள் வலியன
தொகுக்கப்பட்டொரு நாள்
தலைமுறைகளும் அறிந்துகொள்ள
வாய்ப்பளிக்கப்பட வேண்டும்!

இந்த அவலங்களுக்குள்ளே தான்
இதுவும் நடந்தேறியது :
அவள் ஒரு இளம்
விதவைத்தாய்; கடற்படையினரின் துப்பாக்கிக்கு
கைப்பிடித்தவனைப் பறிகொடுத்தவள்;
உயிர்வாழும் விருப்பிழந்து- வெறும்
உடலாகவே வாழ்ந்தாலும்
தங்களின் காதலின் சின்னமாகிய
கைக்குழந்தைக்காக
அவளும் அங்கே
கூட்டத்திலே ஒருத்தியாய்!
கடலிலும், வானிலும்
தரையின் பின்னிருந்தும் துரத்தும்
குண்டுவீச்சுகளுக்கிடையில்
குடாநாட்டோடு கூடவே படகேறி
பெருநிலப்பரப்பு வந்தாள்!
தட்டிய தரையிறங்கி
தான் அணைத்துக்கிடந்த குழந்தையை
உச்சிமோர்ந்தொருக்கால்
மூச்செடுக்கிறாள்
"உன் அப்பன் போனபிறகு
உனக்காகத் தானேயடா
உயிர் வாழ்கிறேன், செல்லமே!
அப்பனுக்குப் பசிக்குதோடா?
பொறு!" என்றவளாய்
அந்த மக்கள் வெள்ளத்துக்குள்ளே
ஓரமாய் ஒரு ஒதுக்குத் தேடுகிறாள்
இரண்டு நாளாய்
உணவென்று அவள் - எதுவுமே
உண்ணவில்லை
மழைநீரைக் குடையிலேந்தி
மற்றவர்கள் குடித்தபோது
வாய் நனைத்ததைத் தவிர!
இருந்தும் தன் குருதியைப் பாலாக்கி
கொடுக்கத் தெரிந்தவள் அல்லவா தாய்!
அங்க ஸ்பரிசத்தோடு
அணைத்து "குடிடா செல்லம்!"
ஏதுமில்லாதது கண்டு - முகம்
எடுத்துத் திருப்பிப்பார்த்த போதுதான்
மூச்சிழந்து விழி சொருகி
முகம் வெளிறிக்கிடந்த
தன் உயிரின் உறவைக் காணுகிறாள்
அண்டம் இருள்கிறது அவளுக்கு:
"ஐயோ! உனக்காகத் தானேடா
உயிர் பிடித்து இங்கு வந்தேன்!
என் வாழ்வின் எஞ்சிய
ஒற்றைச் செல்வமே
கண் திறவடா! ஐயோ!
உன்னை விட்டு வேறொரு
உயிரில்லையடா எனக்குள்ளே!
பேயே! பெரும்பசி பிடித்தலையும் பேயே!
பெண் முகம் கொண்டிங்கு
என் செல்லத்தின்
உயிர் பறிக்க வந்தாயோ!
ஐயோ ஆருள்ளார் இங்கே- இந்த
அநியாயத்தைக் கேட்பதற்கு!
ஆவி பதறுகிறதே!
யாரும் வாராரோ,
நியாயம் கேட்பதற்கு!
படுபாவியே! பாதகியே!
இரண்டைச் சுமந்தும் - ஏனுனக்கு
இதயம் இல்லாமல் போனது?
இந்த ஒட்டல் தாயிவள்
உதிரம் உருக்கிக் கொடுத்த பாலில் வளர்ந்த என்
குஞ்சினை
பறித்தாயோ!
இந்த மண்தூவி சாபமிடுகிறேன்
சண்டாளியே!
சாவு வந்து நேருமடி
விரைவில் உனக்கு!
இந்தத் தாயைப்போல்
இன்னும் எத்தனை பேர்!
அத்தனையும் கனலாகி
உன் ஆவி குடிக்குமடி!
ஐயோ! ஐயோ!"
என்றவாறே மண்ணில் விழுந்தவள்
புரண்டவள், விம்மி விம்மி அழுதவள்
எழவில்லை... ஆமாம்
அவள் எழவேயில்லை!

எழ வேண்டியவர்கள்
எண்ண வேண்டிய நாங்கள் அனைவருமே!
என்றோ ஒருநாள்
முலைதிருகி எறிந்து
மதுரையை எரித்த
கண்ணகியின் கற்பைப் பற்றியே கவி பாடும்
பேனைகளே! பேதைகளே!
எம்மில் ஒருத்தியான இத்தாய்
பாலருந்தப்படாத பட்சத்தில்
தன் மகவு செத்தது அறிந்து
பட்ட துன்பம் பற்றி எண்ணிப்பாருங்கள்!
இவள் நெஞ்சில்
கண்ணீரோடு எழுந்த கனலினை பேனாக்கண்ணில்
ஏந்திக்கொண்டு
எழுங்கள் எரித்து விட!
...மதுரையை அல்ல!!

சு.ஞாலவன்

# வெல்லப்போவது விடுதலைக் கூத்து

தேர்தல் கால
உற்சவ மூர்த்திகள்
திருமுகப் பவனி வீதிகளில்?
விதி மாற்றி எழுதப்போவதாய்
பேசுபவர் நாவும் கேட்பவர் செவியும் கிழிய
வீர முழக்கம் மேடைகளில்.
தென்னிலங்கையில்
உருக்கொள்கிறது தேர்தல் கூத்து
தேர்தல் கனவில் வீழ்ந்துவிட
மாரீசர்கள் அல்ல மறத் தமிழர்.
வாக்குப் போட்டதற்காக முன்பு
பரிசளித்தது நீங்கள்
அழிவுகளும் அவலங்களும் தானே.
கசப்பான நினைவு வடுக்களை மறக்க
இன்னமும் நாம்...
மூளைச் சலவை செய்யவில்லை.
வேண்டுமானால்...
நீங்கள் ஆடுங்கள் தேர்தல் கூத்து
நாங்கள் ஆடுவோம் விடுதலைக்கூத்து
உங்கள் இலக்கு தேர்தலை வெல்வது
எங்கள் இலக்கு வாழ்வையே வெல்வது.
சேடம் இழுக்கும்
அமைதியும் சமாதானமும்
போலவே...
வெளிச்சம் இழந்தன
எல்லோர் முகங்களும்.

மீதமுள்ள
நம்பிக்கையும்
முடிச்சவிழும் கணத்தில்
நாடும் நாமும்
இருள் கவ்விப் படிகிறது
மேகமும் பூமியும்
இப்பவோ...
விடியவோ...
இடிகொட்டி
மின்னல் வெட்டி
கொட்டப்போகிறது
நெருப்புமழை

மீண்டும் தோள்களில்
பல்லக்கு ஏற
விட்ட இடத்திலிருந்து
விடுதலைப் பயணம்.
வீச்சுக்கொள்ளும்
சும்மா இருக்கச்
சுதந்திரம் வராது
என்பதால்!
நீங்கள் ஆடுங்கள் தேர்தல்கூத்து
நாங்கள் ஆடுகிறோம் விடுதலைக்கூத்து.

வேலணையூர் சுரேஸ்

# சொற்சிலம்பு-111

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | று | ங் | வ | னா | அ | எ |
| மா | கு | லி | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | பு |
| நெ | னா | ப | லி | ளை | கீ | இ |
| மூ | ட் | தா | ஷி | ர் | லி | து |
| சா | ர் | ய | க் | ஸ் | கி | ரு |
| ப் | உ | கோ | ன் | சி | த் | ழி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் -109 இன் விடைகள்

01. தேன்சிட்டு.

02. திருமூலர்.

## சொற்சிலம்பம் - 109 இன் பரிசுக்குரியவர்

க.சுலக்ஷ்சனா,
தரம்-8,
மு/மாங்குளம்,
மகா வித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 109 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கவிராஜன், தரம்-7A, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்.
02. பா.லினோசிகா, தரம்-5, கற்சிலைமடு அ.த.க -பாடசாலை.
03 தி.சுபராஜ், தரம்-7, அ.த.க.பாடசாலை, கல்விப்பாடு, முல்லைத்தீவு.
04. ந.டயாழினி, யாழ்.கொடிகாமம், திருநாவுக்கரசுமகாவித்தியாலயம்.
05. ஜெயதீஸ், மு/வித்தியானந்தாக்கல்லூரி, முள்ளியவளை.
06. இ.விஸ்ணுலிபகம்சித்திரா, தச்சன்தோப்பு, கைதடி.
07. டே.டயானி,தரம்-8 மு/தேவிபுரம் அ.த.க. பாடசாலை.
08. க.தனுஜிகா, தரம்-4A, கிளி/இராமநாதபுரம் ம.வி, இராமநாதபுரம்.

01. மிகப் பெரிய பறவையின் பெயர்?

01) ...................................

02. உலகில் மிக உயர்ந்த சிகரம்?

01) ...................................

சொற்சிலம்பம்-111
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ...................................

முகவரி
:-...................................
...................................
...................................

## கைவண்ணம்



அ.அனாஸ்டிகா, தரம்-08, பாரதி சிறுவர் இல்லம்.



# இளைய நாதம்

# முள் ஓணான்

பல்லிகள் நிலத்திலே உள்ள உயிரினங்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள, எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. சில வகைகள் ஹிஸ் என்று சத்தமிடும்; சில தங்களது உடல்களை ஆட்டி ஒருவித மருட்சியை ஏற்படுத்தும். பெரும்பாலானவை தங்களது வாலைக் கழற்றி எறிந்துவிட்டு தப்பி ஓடிவிடும். வாலை இழந்த பல்லிக்குப் புதுவால் சிறிது நாளில் வளர்ந்துவிடும். இவற்றில் முள் ஓணான் என்று ஓரினம் உள்ளது. இது எதிரிகளிடமிருந்து தப்பிக்க முள்களை அவற்றின் மீது உதிர்த்துவிட்டு ஓடிவிடும். முள் ஓணான் அவுஸ்திரேலியாவில் பாலைவனங்களிலும் மிக வறண்ட பகுதிகளிலும் காணப்படும். பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும் இதனால் எந்தத் தீங்கும் ஏற்பட்டதில்லை. இது 15செ.மீ நீளம் வரை வளரக்கூடியது. இதன் உடல் முழுவதும் தலைப் பகுதியிலிருந்து வால் வரை முட்கள் இருக்கும். செம்பழுப்பு நிறமும் ஆங்காங்கே வெளிர் பழுப்புத் திட்டுகளும் கொண்டது.



இதன் உடல் நீளத்துடன் ஒப்பிடும்போது 2.5செ.மீ நீளமும் ஒரு செ.மீ அகலமும் கொண்ட இதன் முட்டைகள் மிகப் பெரியவை என்றே கூறவேண்டும். இதை மலைப் பேய் என்றும் அங்குள்ளவர்கள் குறிப்பிடுவார்கள்.

இதன் உணவு எறும்புகள் மட்டுமே. இது உணவு உண்பதற்கு நீண்ட நேரம் ஆகும். எறும்புகளை நாக்கால் துழாவி உண்கிறது. ஒரு சமயத்தில் ஒரு எறும்பை மட்டுமே பிடித்துண்ணும். இவ்வாறு ஒரு நிமிடத்தில் 30முதல் 45 எறும்புகளைப் பிடித்துண்ணும். இதன் பசிக்கேற்ப ஒருமுறை உணவு உண்ண ஏறக்குறைய 35 நிமிடங்கள் முதல் 165 நிமிடங்கள் வரையாகும். அதாவது 1000முதல் 5000 எறும்புகள் வரை தின்னும். சற்று வேகமாகச் சாப்பிடுபவைகளுக்கு 25முதல் 160 நிமிடங்கள் வரையாகும்.

இனச்சேர்க்கை முடிந்த பின் பெண் முள் ஓணான் மணல் மேட்டில் 60 செ.மீ நீளத்திற்கு சுரங்கப்பாதை அமைத்து முடியுமிடத்தில் முட்டைகளிடுகிறது. பிறகு அந்தச் சுரங்கப் பாதையை மூடி மறைத்துவிடுகிறது. சிறிது நாட்களுக்குப் பிறகு முட்டைகளிலிருந்து வெளிவரும் இளம் ஓணான்கள் அந்த சுரங்கப்பாதையை மூடி வைத்திருக்கும் மண்ணை அகற்றிவிட்டு வெளியே வந்து தங்களது வாழ்க்கையைத் துவக்குகின்றன.

## பொன் மொழிகள்

★நீ இறக்கும்போது உனக்காக அழக்கூடியவர்களை உன் உயிருள்ளபோதே தேடி வைத்துக்கொள்!

★யாருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்!

★மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்!

★மறக்க வேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும் மறக்க வேண்டாதவைகளை மறந்துவிடுவதும் தான் இந்த உலகத்தின் இன்றைய துன்பங்களுக்குக் காரணம்.

★பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.



# நீச்சல் போட்டி






இன்றைய உலகிலே ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களின் அன்பையும், ஆதரவையும் எப்படிப் பெறவேண்டும் என சிந்திக்கின்றான். ஆனால் இந்த அன்பு, ஆதரவு, மதிப்பு என்பன கடைகளில் வாங்கும் பொருட்களல்ல பணத்தையும் பகட்டையும் காட்டி அன்பையும், நட்பையும் பெற முடியாது. அழகுக்கோ ஆடம்பரத்திற்கோ, ஆணவத்திற்கோ அடிமைப் பட்டதல்ல உண்மையான நட்பு. மாறாக அன்பைக் கொடுத்துத்தான்

**நாம் கொண்டுள்ள நட்பு விருட்ஷமாக வளர வேண்டுமானால் இரு உள்ளங்களுக்கிடையே புரிந்துணர்வு அவசியம்.**

அன்பான நட்பைப் பெறவேண்டும். பண்பான பழக்க வழக்கங்கள் அன்பான நடத்தைகள் என்பவற்றின் மூலம் தான் தூய்மையான நட்பை பாதுகாக்க முடியும். எனவே அர்த்தமற்ற நடைமுறைகளால் அன்பான நட்பை நிலை நாட்ட நினைப்பவர்கள் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். ஏனெனில் இரு இதயங்களிற்கிடையே மலரும் நட்புப் புனிதமானது. இந்தப் புனித நட்பில் தான் அன்பு, ஆதரவு எல்லாமே அடங்கியுள்ளது.

ஆனால் இன்று எம்மிடையே மலரும் நட்பு வெறும் நடிப்பாகவும், போலி வேஷமாகவும் மாறி வருகிறது. உயிரையே வைத்திருக்கும் உத்தம நண்பர்களைப் போல உருமாறித் திரியும் பலர் நம்மிடையே இருக்கிறார்கள்.

"உண்மையான நண்பனை ஆபத்தில் அறியலாம்." என்று சொல்வார்கள். ஆனால் சுயநலத்திற்காக உயிர் நண்பனையே தூக்கில் தொங்க வைக்கும் தோழர்கள்தான் ஏராளம்.

நாம் கொண்டுள்ள நட்பு விருட்ஷமாக வளர வேண்டுமானால் இரு உள்ளங்களுக்கிடையே புரிந்துணர்வு அவசியம். நற்பண்புள்ள ஒருவரும்



# நட்பின் வலிமை

தீய குணம் கொண்ட ஒருவரும் இணையும்போது அவர்களிடையே உத்தமமான நட்பு உதயமாவது சந்தேகத்துக்குரியது. நல்லவனின் ஆதிக்கம் தீயவனின் உள்ளத்தை வியாபிக்குமாயின் அங்கே நல்ல நட்பு உருவாகும். மாறாக தீயவனின் செயற்பாடுகள் நல்லவனை ஆட்கொள்ளுமாயின் அந்த நட்பு நஞ்சிலும் கொடிய விஷத்தை உருவாக்கும். இதனால் தான் "உன் நண்பன் யார் என்பதை வைத்து நீ யார்? எப்படிப்பட்டவன்? என்பதைச் சொல்லி விடலாம்" என்றார் ஒரு அறிஞர். இன்னும் தனிமையை விட நல்ல நண்பனுடன் இருப்பது சிறந்தது. அதே தீய நண்பனை விட தனிமை மௌனம் என்பன சிறந்தவை.

எனினும் எடுத்த எடுப்பில் ஒருவனுக்குத் தீயவன் என முத்திரை குத்திவிடக்கூடாது. அதற்கு முன்னர் தான் நல்லவன்தானா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதேபோன்று நமது பழக்க வழக்கங்களை நண்பனின் பழக்க வழக்கங்களோடு ஒப்பீடு செய்து பார்க்கக் கூடாது. ஏனெனில் நமது தீயசெயற்பாடுகளையும் எமது மனம் நல்ல நடத்தைகளாகத்தான் அர்த்தப்படுத்தும். இதனோடு நண்பனை ஒப்பிடும் போது, அவனது நல்ல குணங்கள் கூட நமக்குத் தீய கொள்கைகளாகத் தெரியலாம். இதனால் தான் "நட்புக் கொள்ளும் விஷயத்தில் அவசரப்படாதீகள். நிதானமாக இருங்கள். நட்புக்கொண்ட பின்பு அந்த நட்பு நிலைத்து நிற்க வழிதேடுங்கள்" என்றார் ஒரு அறிஞர்.

எனவே நீடித்த நட்புக்கு நிலையான அன்பும், நிலைமாறாத கொள்கையும் வேண்டும். எமது தைரியம் எப்போதும் நல்லெண்ணங்களின் விளைநிலமாக இருந்தால் தான் நல்ல நட்பு நமக்கும் கிடைக்கும். ஆகவே நல்லதையே நினைப்போம். நல்லதையே செய்வோம். நல்ல நட்பைப் பெறுவோம்.

**யாழ் தினேஸ்**

## மஞ்சட் சோறு




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சம்பா அரிசி | -1சுண்டு |
| மஞ்சள்தூள் | -1தேக்கரண்டி |
| பட்டர் | -1மேசைக்கரண்டி |
| வெங்காயம் | -25கிராம் |
| பச்சைமிளகாய் | -4 |
| ஏலப்பொடி | -1/2 தேக்கரண்டி |
| கராம்பு | -4 |
| கறுவா | -அளவாக |
| தேங்காய்ப்பால் | -21/2 டம்ளர் |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

*தேங்காய்ப்பாலைக் கொதிக்க வைத்து அரிசி, மஞ்சள்தூள் சேர்த்துப் பதமாக வேக வைத்து உவித்து எடுக்கவும். மஞ்சள்தூளைச் சுத்தமான வெள்ளைத்துணியிற் போட்டு தளர்ந்த பொட்டளமாகக் கூட்டிப் போடவும்.

*பொட்டளத்தை அரிசியுடன் சேர்த்து வேகவிட்டு தேவையான நிறம் வந்ததும் பொட்டளத்தை எடுத்துக் கொள்ளவும்.

*பச்சைமிளகாய் வெங்காயத்தை குறுணலாக வெட்டவும்.

பட்டரில் வெங்காயம், மிளகாய், ஏலம், கராம்பு, கறுவா இவற்றைப்
*பொன்னிறமாகப் பொரித்து அதனுடன் சாதத்தைச் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

நாம்! இவ்வையத்தில் பிறப்பெடுத்தும் படிப்படியாகத் தான் ஒவ்வோர் வளர்ச்சிகளையும் அனுபவித்துக் கொள்கின்றோம். சிறியவனாக இருந்து கற்று பெரியவனாக மாறி தொழில் துறைகளில் ஈடுபடுகின்றோம். காலங்கள் கடந்தோடிய பின்னர் திருமண பந்தத்தில் இணைகிறோம். காலங்கள் கடந்தோடிய பின்னர் திருமண பந்தத்தில் காதல் திருமணம், நிச்சயிக்கப்படு கின்ற திருமணம் இது எவ்வாறு நிகழ்ந்தாலும் திருமணம் என்பதற்குள் தான் இணைகிறோம். ஆனாலும் சீதனம் என்றால் பெரியதோர் பிரச்சினையுமுண்டா கின்றது.

ஒரு பெண் மனத்துள் இறுகப் படிந்திருக்கும் இன்னல்களை அறிய முடியாது. அதனுள் சீதனம் தீச்சுவாலைவிட்டெரிகின்றது. இதற்குள் திருமணமானவளும் திருமணமாகாதவளும் தவிக்கின்றார்கள், இது உண்மையானவை. குடும்பவாழ்வினில் இன்பதுன்பம் இரண்டறக் கலந்திருக்க வேண்டும். அது ஓர் கோயிலாக மாறவேண்டும். இன்பதுன்பத்தில் இருவரும் மனம் விட்டுப் பேசவேண்டும். அங்கு புரிந்துணர்வு பிறக்க வேண்டும். இதன் மூலம் இருவர் மனங்களிலும் சந்தோஷம் பிறப்பெடுக்கும்.

ஒரு குடும்பப் பெண்ணின் உள்ளக் குமுறல்களை அறிவதாயின் கஷ்டமானவொன்றுதான். அவளும் நிறைய மனக்கவலைகளோடு தான் வாழ்வாள். சீதனம் அவள் மனதினை தாக்கியழிக்கும் கருவியாகவுள்ளது. இதற்கு பெற்றார் கூட ஓர் காரண தாரிகள் தான். பெற்ற பிள்ளையை பிரிந்து வாழ்வது சரியானதா? இது எம்மில் பலரிலுள்ளது. ஓர் குடும்பத்தில் மூன்று பெண்பிள்ளைகள் என்றால் இருவருக்கும் சீதனம் எனும் பெயரில் சிறு தொகையினை வழங்கி மற்றவரை புறக்கணித்துக்கொள்வார்கள். இங்கு பெற்றார் அந்தப் பெண் மனதில் இரண்டு பிரச்சினைகளை ஏற்படுத்து



# புரிந்துணர்வுதான் வாழ்க்கை!

கின்றனர். அவள் தன் குடும்ப வாழ்விலிருந்த மகிழ்ச்சி தன் சகோதரர்களோடிருந்த உறவு.

இவ்வாறின்றி இருப்பதற்கு பொற்றோர்களின் கைகளில்தானுள்ளது. மனிதா! நீ எந்த வசதி வாய்ப்பினை தேடினாலும் இறுதியில் ஆறடி நிலம் தான் உனக்குச் சொந்தம். இதற்காய் நீ முடங்கிப் போகாதே. உன் இரு கரங்களினை நம்பி நீ வாழ்! இனி உன் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி ஆர்ப்பரிக்கும். உன்னால் இயன்ற வரை உழைத்திடு. ஓய்வு நேரங்களில் இருவரும் மனம் விட்டு பேசி சில தீர்வுகளை தேடிக் கொள்ளல் நல்லது.

இருவருக்குமிடையில் நிம்மதியினைத் தரவேண்டியது புரிந்துணர்வு, புரிந்துணர்வு தான் வாழ்க்கை. இதனை புரிந்தே நடந்தால் புன்னகைப்பீர் தினம் நீர்.

சீதனப் பிரச்சினையை முன்வைக்கும் போது அவள் தானும் ஓர் வேலையை தேடிக்கொள்வாள். ஒரு குடும்பப் பெண் உழைக்கச் செல்வது தவறா? இல்லை இதனை பிறர் அறியாதிருப்பது தான் தவறு. இரு கரம் சேர்ந்தால் தான் ஓசை வரும். குடும்பப் பெண் வேலை செய்யமுன் அவள் தனக்குள் இட்டிருக்கும் நேர அட்டவணையில்.

அதிகாலை துயிலெழுந்து தன் வீட்டு வேலைகளை செய்கின்றாள். பிள்ளைகளின் உணவு, உடையென தயார்ப்படுத்திக்கொண்டு பிள்ளைகளை பள்ளிக்கனுப்ப நேரம் நெருங்கிக்கொள்ளும். இதன் பின் தன் சக வேலைகளை முடித்துக்கொண்டு தன் வேலைப்பீடம் விரையும் போது சில வேளைகள் நேரங்கள் போதாமலிருக்கும். வேலைக்குச் சென்றால் அங்கு வேலை அதிகமாயிருக்கும். வேலைப்பளு வினைத் தாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தால் மிகுதி வீட்டு வேலைகள் காத்துக் கொண்டிருக்கும். இப்பிடியாக பெண் என்பவள் ஓர் ஆறு தலற்றவள் அதாவது (வேறு உதவியற்றவள்) எனவே இச்சந்தர்ப்பத்தில் கணவன் தான் அவளோடு சகவேலைகளில் ஈடுபட வேண்டும். இதில் தான் ஒரு கோடி மகிழ்ச்சி உண்டாகும். இன்பதுன்பத்தில் இரண்டறக்கலந்து நல்லாலோசனை செய்து வாழ்வு செழிப்புற தாங்கள் இருவரும் புரிந்துணர்வினை ஏற்படுத்தி இல்லறத்தில் இனிமையாக வாழ்வீராக!

மனிதா! நீ எதனை கொண்டு வந்தாய்! உன்னில் இயலாமை என்பதிருக்குமாயின் நீ முடங்கியவன் தான். உன் முயற்சியினால் எத்தனையோ தேடுவதைவிட்டு இன்னோர் மனதினை தினம் புண்ணாக்காதே? பிறர் கரத்தினை நீ நம்பாதே. உன்கரம் தான் உனக்குத்துணை. இதனை மறந்து வாழ்வது உன்மடமைத்தனத்தின் ஓர்படி. உன் குடும்ப வாழ்வு சிறப்பதாயின் உன் மனதில் உறுதிகொள். பிற எதிர் பார்ப்பினைத் தேடிக்கொள்ளாதே! இருளிலிருந்து ஒளியினைத் தேடமுனை. உனக்குள்ளுமில்லை இன்னல். இதனால் நீ பின்நோக்காதே எம் வாழ்வு சிறப்புற புரிந்துணர்வுதான் வாழ்வு என்ற வட்டத்துள் வாரீர் இனி வாழ்வில் என்றும் வசந்தமே.

**எஸ்.மதீஸ்**

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 66தொடக்கம் 70 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –66**
இ.முத்துலட்சுமி,
C/0 R.றஞ்சன்,
தென்னிந்திய திருச்சபை
(C.S.I) மாங்குளம்.

**பரிசுத்திட்டம் –67**
இ.இராஜகோகிலா,
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
மாவட்டச் செயலகம்,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –68**
யசோதா செந்தில்ராசன்,
இல:14,கொல்லவிளாங்குளம்,
வவுனிக்குளம்.

**பரிசுத்திட்டம் –69**
க.தனஜேஜினி,
கற்சிலைமடு,
3ஆம் கண்டம்.

**பரிசுத்திட்டம் –70**
B.தேன்மொழி,
உபதபால் அலுவலகம்,
இலுப்பைக்கடவை,
மன்னார்.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை,
அழகுப்பொருள் வாணிபத்தின்
பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்— 72

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# ஏ9-ஏரம்பு

# நகை மட்டும் அழகாபரணமல்ல; அறிவும் ஒரு அழகாபரணம்தான்




வணக்கம் பிள்ளையள்! முந்தநாள் வன்னிக்குத் திரும்பீட்டன். இருந்தாலும் அங்கால குந்துப்பக்கம் போகேலாத அளவுக்கு, மழைக்கு முன்னால முடிக்கவேண்டிய வீட்டு வேலையள் ஒருதொகை கிடக்கிது. உண்மையைச் சொல்லப்போனால் அது என்ரை வேலை இல்லை. இருந்தாலும் ஆவெண்டு கிடக்கிற வேலியை அப்படியே விட்டிட்டு இருக்கவும் முடியேல்லை. உங்களுக்குச் சொன்னால் என்ன! என்ரை வீட்டு வளவின்ரை 2 பக்கம்தான் என்னோட பங்கு. அது நான் காலா காலத்துக்கு அடைச்சுப்போடுவன். ஆனால், உந்தக் கிணத்தடிப்பக்க வேலி பக்கத்துவீட்டு இளசு ஒருத்தருக்குரியது.

பொங்கலுக்கு அடைக்க வேண்டிய வேலி மழைவிட்டதும் அடைக்கிறதெண்டு சொன்னவர். வேலியில இன்னமும் கையே வைக்கேல்லை. கேட்டால் "ஐயோ! தலைக்கு மேல வேலை. இருக்கவே நேரமில்லை", எண்டு பதில் வரும். உங்களுக்குத் தெரியும்தானே, நானும் கிருமி லேசில விடாமல் கேட்டன்: "தம்பி அப்பிடியென்ன இருக்கவே நேரம் இல்லாத அளவுக்கு வேலை?" "எங்கை அப்பு! ஒரு விசயத்தைத் தன்னும் செய்துமுடிக்கிறதுக்கு, நேரம் இருந்தாத்தானே!" "அதுதான் தம்பி கேட்கிறன்: எந்த வேலையைச் செய்யிறதுக்கு எந்த வேலை இடைஞ்சலாய் இருக்கிது?" "எனக்கு ஊரிப்பட்டை வேலை இருக்கிது. உங்களை மாதிரி நானொண்டும் இலையான் அடிச்சுக்கொண்டு இருக்கேல்லை". "சரி தம்பி! நான் இலையான் அடிக்கிறன். நீர் என்ன அடிக்கிறீர் எண்டு சொல்லுமன்". அந்த நேரம் அவற்றை முகத்தை நீங்கள் பார்த்திருக்கோணும். எனக்குத் தெரியும் பிள்ளையள் அதொரு முழுச்சோம்பேறிப் பொடியன். ஏதோ தன்ரை தான்தான் உலகத்தைப் பிடிச்சு சுத்திக்கொண்டிருக்கிற மாதிரி கதை. உப்பிடி நேரம் இல்லையெண்டு சொல்லிற ஆக்கள் சிலரை நீங்களும் கண்டிருப்பியள். உண்மையிலையே அலுவல்கள் நிறைஞ்ச ஆக்களுக்கு நேரம் போதுமான அளவுக்கு இருக்கேக்கிளை, உப்பிடி சில முழுச்சோம்பேறி ஆக்களுக்குத்தான் நேரமே இல்லை.

கதிரையில பத்துநிமிசம் தொடர்ந்து இருந்தாலே நித்திரையாகிப் போற பொடியர்தான் பாருங்கோ, தன்ரை பங்கு வேலியை அடைக்கிறதுக்கு எனக்கு றீல் விட்டுத் திரியிறார். கன நாளைக்குப் பிறகு அண்டைக்குத் தம்பியர் வீட்டை வந்தார். "வணக்கம் அப்பு! பக்கத்தில் இருக்கிறீயள், எனக்கு நீங்கள் சொல்லவே இல்லை. நீங்கள் பேப்பருக்கு எழுதிறனீங்களாம்!" "இதென்ன தம்பி! ஏரம்பு எண்டு பேர் போட்டுத்தானே எழுதிறனான். அது க்ர்ணாதெண்டு வீடுவீடாய் வந்தும் சொல்லோணுமே!" "உங்களுக்கு எப்பையும் பகிடிதான். எனக்குத் தெரியாது. தெரிஞ்ச பொடியங்கள் தான் சொன்னவங்கள்.

உங்களுக்குத் தெரியும்தானே, பேப்பர் வாசிக்க எனக்கெங்கை நேரம்?" டேய் சோம்பேறிக்கழுதை! 57 கிழமையாய் எழுதிவாறன், அறுபதாவதோட நிற்பாட்டுவோம் எண்டிருக்கிறன். வாசிக்கிறது ஒவ்வொருதற்றை தெரிவும் விருப்பமும், அது பரவாயில்லை. ஆனால், தனக்குப் பத்திரிகை வாசிக்கிறதுக்கு நேரம் இல்லையெண்டு அவிக்கிறானே, எண்டு மனசுக்குள்ளை புகைஞ்சன். "அப்பு! எனக்கும் எழுத விருப்பம், நேரம் கிடைக்கிறேல்லை. ஆனால், உங்களுக்கு நேரப்பிரச்சினை இல்லை. நீங்கள் தொடர்ந்து எழுதுங்கோ! மற்றது அப்பு! ஒரு சின்ன உதவி. இந்த முறை நீங்களே என்ரை வேலியையும் அடையுங்கோ. அதுக்குப் பதிலாய் மழைகாலம் முடிய, அடுத்த முறை நான் உங்கட பங்கு வேலியையும் சேர்த்து அடைச்சுத்தாறன்" நான் என்னத்தைச் சொல்ல பிள்ளையள், அதுவும் கிணத்தடிப்பக்க வேலி. நான் ஒரு வயசுபோன மனுசன் மானத்தோட குளிக்கவேணும் எண்டிட்டு சம்மதிச்சன். ஆனாலும், அடுத்த வருசமும் அவருக்கு நேரம் இருக்காது எண்டிறது எனக்கு இப்பவே விளங்கீட்டிது. சந்தோசத்தோட அவர் வெளிக்கிடேக்கிளை தான் ஆளில தெரிஞ்ச வித்தியாசத்தை வைச்சுக் கேட்டன்: "தம்பி! என்ன ஆளில கொஞ்சம் வித்தியாசம் தெரியுது!" "ஓ... ஓம் அப்பு! உடம்பு இறுகோணும் எண்டு கொஞ்ச நாளாய்த் தான் body building செய்யிற இடத்தில போய் எக்செசைஸ் செய்யத்தொடங்கினனான். 'வீ-ஷேப்' வருமட்டும் விடாமல் செய்யோணும். எப்பிடி நல்ல வித்தியாசம் தெரியுதே?" மகிழ்ச்சிப்புயல் அடிக்கிற அவரின்ரை முகத்தை உங்களுக்குப் பார்க்கக் கிடைக்கேல்லை. 'அப்பு! வேலி அடைக்கிறதும் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதுதான்'. எண்டு மௌனமாய் கத்திக்கொண்டு, வேற வழியில்லாமல் வேலியடைப்பில இறங்கீட்டன் பிள்ளையள். உங்களுக்கும் சொல்லிறன் : ஒண்டுக்குமே நேரம் இல்லையெண்டு சொல்லிற உப்பிடிப்பட்ட சோம்பேறியள் குறிச்சு நீங்களும் விழிப்பாய் இருங்கோ!

எனக்கென்ன கவலையெண்டால் பிள்ளையள் கடலில கப்பல் மறையிறதையும், சந்திரனில விழுகிற பூமியின்ரை நிழலையும் கொண்டு பூமியின்ரை விட்டத்தை அண்ணளவாக கி.மு காலத்திலயே கண்டு பிடிச்சாச்சிது. தோமஸ் அல்வா எடிசன் (1847-1931) மின்குமிழில தொடங்கி ஒரு கணக்கு கண்டுபிடிப்புகளைச் செய்திட்டார். நகரங்களை ஒளியூட்டிற காரியம் அவராலதான் 1882இல தொடக்கி வைக்கப்பட்டிச்சிது. அது மட்டுமில்லாமல் இண்டைக்கு லட்சக்கணக்காய் பாட்டுகளைப் பதிச்சு வைச்சுக்கேட்கிறம்.

இதுக்கெல்லாம் அடித்தளமாக உலக வரலாற்றிலயே முதல் பதிவாக எடிசன் பாடின 'mary had a little lamb' (மேரி ஒரு சின்ன செம்மறியாடு வைச்சிருந்தா) எண்ட பாட்டுத்தான் இருக்கிது. இவர் மின்குமிழுக்குப் பொருத்தமான இழையைத் தெரிவுசெய்யிறதுக்காக செய்த பல பரிசோதனைகள் கைகூடாமல் போனதை, கூட்டாளிமார் சுட்டிக்காட்டி அருமந்தநேரம் வீணாய் போச்சிது எண்டிருக்கினம். அதுக்கு அவர் என்ன சொல்லியிருப்பார் எண்டு நினைக்கிறீயள்: 'கைகூடாத பரிசோதனைகளின் ஊடாகத்தான் சரியான தெரிவை (ரங்ஸ்ரன்) என்னால் அடையாளம் காண முடிந்தது' எண்டாராம். இவ்வளவு தன்னடக்கம் கொண்ட விஞ்ஞானி உருவாகினது முழுக்க முழுக்க சுயமுயற்சியில தான். தான் ஆர்வம் கொண்டிருந்த துறையள் குறிச்சு இடைவிடாத தேடலோட வாசிப்புகளை மேற்கொண்ட அவர், அப்பிடித் தான் பெற்றுக்கொண்ட அறிவை பரீட்சித்தும் பார்த்தார்.

இவரை மாதிரியே சொந்த முயற்சியில ஜோர்ஜ் ஸ்ரீபன்சன் (1781-1848) உலகத்துக்குப் பெற்றுத் தந்ததுதான் தண்டவாளத்தில ஓடிற ட்றெயின். நாட்கூலியாக விறகு தூக்கிப்போடிற தொழிலாளிக்கு மகனாய் பிறந்து, அதே தொழிலைச் செய்த இவர் இந்தளவுக்கும் எந்தவிதமான பள்ளிப் படிப்பும் இல்லாதவர். இருந்தாலும் சுயமுயற்சி, அவதானம், தேடல் எண்ட பண்புகளால இவர் போட்ட தண்டவாளத்தில உலகத்திலயே முதன்முதலாய் 1825 இல மணித்தியாலத்துக்கு 25 கி.மீ வேகத்தில 300 பிரயாணிகளோட தொடங்கின பயணம், இண்டைக்கு உலகம்பூராவும் நடுத்தர மக்களுக்கான முன்னணிப்போக்குவரத்துச் சாதனமான தொடருந்தாய் இருந்து வருகிது.

மேல நான் சொன்ன விசயங்கள் என்னண்டு உவையளுக்கு வாய்ச்சது எண்டு யோசிப்போமெண்டால், 'அறிவியல் பசி'க்கு நாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் குடுக்கிறோம் எண்டதில தான் எல்லாம் தங்கியிருக்கிது. அஞ்சறிவு ஜீவன்களுக்கு முன்னால ஆறறிவு படைச்ச பிறப்புகளாய் பெரிசாய் விலாசம் அடிச்சுக்கொள்ளிற நாங்கள், எங்களுக்கு பிரத்தியேகமாய் கிடைச்சிருக்கிற ஆறாவதை வைச்சு என்னத்தைச் சாதிக்கிறோம் எண்டு நினைச்சுப்பார்க்க வேண்டியவையாய் இருக்கிறம். புள்ளிவிபர அடிப்படையில இந்தியாவில 40 வீதமான ஆக்களுக்கு எழுதவாசிக்கத் தெரியாமல் இருந்தாலும், எங்கட சராசரி வாசிப்பு-விகிதம் அவையளை விட மட்டமாய்த்தான் இருக்கிது. வாசிப்பு-ஈடுபாடு குறைஞ்சதுக்கு இலத்திரனியல்-ஊடகங்கள் வந்ததை வெறுமனே காரணம் சொல்லேலாது. ஏனெண்டால் கைத்தொலைபேசியிலயே ரிவி பார்க்கக்கூடிய வசதியை பொக்கற்றில வைச்சுக்கொண்டு திரியிற வெளிநாடுகளில எத்தினை இலத்திரனியல்-ஊடகங்கள் குவிஞ்சாலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வாசிக்கப்படிறது குறையாமல் அதிகரிச்சுக்கொண்டுதான் வருகிது. போன யூலை மாசம் ஹரி பொட்டர்-சிறுவர் நாவலின்ரை தொடர் வெளியானது அறிஞ்சிருப்பியள்.

விற்பனைக்கு வந்த முதல் நாளே உலகம் பூராவும் 5 மில்லியன் (50 லட்சம்) பிரதிகள் விற்பனையாகி இருக்கிது. எங்கட ஈழத்தமிழ் படைப்புலகத்தில நானறிய (தெரியாமல் வேற ஏதாவது சிலகாலம் வந்திருக்கலாம்) இப்பதான் முதன் முதலாய் சிறியவர்களுக்கெண்டு ஆரோக்கியமான மாத சஞ்சிகையாக 'பூங்கனி' வவுனியாவில இருந்து 8 மாசமாய் வெளிவருகிது. அந்த முயற்சியை பாராட்டிறது மட்டுமில்லாமல் தாய்தகப்பன்மாரும் வாங்கி தங்கட பிள்ளையளுக்குக் குடுக்கோணும். மாசம் 20 ரூபா செலவழிச்சு பலதரப்பட்ட அறிவியல் சுவாரஸ்யங்களையும் அவையள் அறியிறதுக்கு வழிசெய்தால்தான் இளைய சந்ததி எண்டாலும் (எங்களை விடுங்கோ, காலம் போய்ட்டிது) துரிதமான அறிவியல் வளர்ச்சி அடையலாம். பிள்ளையளுக்கு நகை போட்டு அழகு பார்க்கிற நாங்கள் அறிவும் ஒரு மிக முக்கியமான அழகாபரணமே எண்டு விளங்கிக் கொள்ளோணும்.

2ஆம் உலகயுத்தம் முடிஞ்ச தருவாயில யப்பான் வலு வேகமாய் முன்னேறத் தொடங்கீட்டிது. அதிலையும் 1950ஆம் ஆண்டில யப்பான் வில்லியம் எட்வேட் டெமிங் எண்டவரை தங்கட ஆலோசனையாளராய் கூப்பிட்டு வைச்சிருந்திச்சிது. தொழில்துறை உற்பத்தி, விவசாய உற்பத்தி, முகாமைத்துவம் எண்டு பல விசயங்களிலையும் ஆதரவாய் இருந்த இவரின்ரை ஆலோசனைகளை அமெரிக்க நிறுவனங்கள் 1970கள் வரைக்கும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கேல்லை.

பேந்து 1980இல ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில, அந்தநேரம் அமெரிக்காவின்ரை மோசமான பொருளாதார நிலைமையை (யப்பானோட ஒப்பிடேக்கிளை) குறிப்பிட்டு கதைக்கிற நேரம் 'If Japan can, why can't we?' (யப்பானால் முடியுமானால், எங்களால் ஏன் முடியாது?) எண்டு டெமிங் அழுத்தின கருத்து அமெரிக்காவில ஆழமாக உள்வாங்கப்பட்டு TQM (Total Quality Management) எனப்படிற தராதர முகாமைத்துவ அடிப்படையில குறைநிறைகள் இனங்காணப்பட்டு, உற்பத்தியை மேற்கொண்டு முன்னேற்றக் கூடியதாய் இருந்திச்சிது.

அப்பிடி பிள்ளையள் மற்றவையள் செய்யிற சரியளையும், பிழையளையும் அறிஞ்சு, நாங்களும் முன்னேறப் பார்க்கோணும். ஒவ்வொரு தனிமனிதனின்ரை முன்னேற்றத்திலையும் தான் முழு தேசத்தின்ரை உயர்வும் தங்கியிருக்கிது. அதேமாதிரி முழுதேசமும் உயர்ந்தால் மட்டுமே தனிமனிதனின்ரை வளர்ச்சியும் மேம்படும். ஆகவே இந்தச் சங்கிலித்தொடர்பை அறிஞ்சு தனிமனிசர் நாங்கள் ஒவ்வொருத்தரும் எப்பிடி தேச மேம்பாட்டுக்காக ஆக்கபூர்வமாய் பங்களிக்கலாம் எண்டு சிந்தித்துச் செயலாற்றத் தலைப்படுவோம்! வேறென்ன பிள்ளையள் வாற முறை சந்திப்பம்.

பொறுங்கோ! பொறுங்கோ! தேர்தல் நெருங்கிது. நான் என்ன நினைக்கிறனெண்டு கேட்பியள். 17 வருச ஐ.தே.க அடக்குமுறை தாங்கேலாமல் தான் ஒரு நப்பாசையில சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணியை சிலர் தெரிவு செய்தவை. இப்ப அந்த 10 வருசக் கொடுமையைத் தொடர விடக்கூடாதெண்டு பழைய 17 வருசக் கொடுமைக்காரர் மேல எங்களில ஆராவது நப்பாசை கொண்டு, படுகுழிக்குள்ளை கவிழுவினம் எண்டு நான் நினைக்கேல்லை. ஏனெண்டால் நாங்கள் மனுசர், எங்களுக்கெண்டு தக்க வைச்சுக் கொள்ள வேண்டின சில விழுமியங்கள் இருக்கிது. நாயாய் இருந்தால் பரவாயில்லை, எலும்புக்கு வாலாட்டிப்போட்டு எங்கையெண்டாலும் குரைச்சுப் போட்டு கிடக்கலாம்.




## அத்தியாயம்- 17

**பகுதி -71**

அவள் அவளாகவே ஏற்கப்பட்டதாலும் ஒரு தாய் என்ற வகையில் அச்சுறுத்தலுக்குள்ளாகாமல் போய்விட்டதாலுமே அவள் தனது சொந்த உணர்வுகளுள் ஆழமான ஒரு தேடுதலை நடத்திக் குறிப்பிடத்தக்க உள்நோக்கையும் புரிந்துகொள்ளுதலையும் பெற்றுக் கொண்டிருக்கலாம்.

டிப்ஸ் போன்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் சிகிச்சையில் பங்குகொள்ள அல்லது தங்களுக்கு உதவியைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிடும் பல சந்தர்ப்பங்களிலே அந்தப் பிள்ளைகள் சிகிச்சைக்காக ஏற்றுக்கொள்ளப் படாமல் போவதுமுண்டு. இந்தக் காரணியின் காரணமாக எத்தனை பிள்ளைகள் சிகிச்சை மறுக்கப்படுகிறார்கள் என்று ஒருவருக்குமே தெரியாது. பல சந்தர்ப்பங்களிலே பெற்றோர் இங்குவந்து பிள்ளைகளுடனான தங்கள்



உறவுகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தங்கள் பங்களிப்பை வழங்குவதென்பது எங்களுக்குப்பெரும் உதவியாக அமைந்துவிடுகிறது. ஆனால், பெற்றோர் சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டாலும் அடைவுகள் மிக மிகக் குறைவாக இருக்குமளவுக்கு, ஒத்துழைக்காமல் போய்விடுகிறார்கள் என்பதும் உண்மைதான். அவர்கள் பட்டறிவுகளுக்கு உட்பட விரும்பாவிட்டால் அவற்றிலிருந்து பயன்பெறவும் அவர்களால் முடியாமல் போய் விடும். அச்சுறுத்தலுக்குள்ளாகும் இவ் வகை ஆட்களின் தற்பாதுகாப்பிற்குள் புகுந்து கொள்ளும் தன்மை அளவிடமுடியாததாக இருக்கக்கூடும். டிப்ஸினுடைய நற்பேறு வசமாக டிப்ஸினுடைய வளர்ச்சியைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் விதந்து பாராட்டுதல் முதலியவற்றில் தாங்கள் மாறிக்கொள்ளும் அளவுக்கு அவனுடைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளை தொடர்பாகப் போதுமான அளவு சுருணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள். டிப்ஸ் மட்டும் தன்னைக் கண்டு கொண்டிருக்க வில்லை. அவனுடைய பெற்றோரும் தங்களைக் கண்டு கொண்டிருந்தார்கள்.

## அத்தியாயம்- 18

அடுத்த புதன் கிழமை ஜேன் மிஸ் எனக்குத் தொலைபேசி அழைப்பொன்றை எடுத்தபொழுது, பாடசாலையில் டிப்ஸ் எப்படி நடந்து கொள்கிறான் என்பது குறித்து அவள் என்ன கூறப்போகிறாள் என்ற ஆர்வ அலை பொன்று என் மனதில் பெரிதாகப் பிரவகிப்பதை நான் உணர்ந்தேன். விளையாட்டறையில் நான் அவதானித்த பல நடத்தைகளில் சிலவாவது பாடசாலை வரை நீட்சி கொண்டிருக்க வேண்டும். அந்தரமான அந்த நிலையில் என்னை நீண்ட நேரம் அவள் வைத்திருக்கவில்லை. எடுத்த எடுப்பிலேயே அவள் படபடவென்று சொல்லத் தொடங்கினாள்.

"டிப்ஸில பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கு என்கிறத உங்களுக்கு தெரிவிக்க விரும்புறன். அது எனக்கு சரியான மகிழ்ச்சியாயும் இருக்குது. அது படிப்படியா ஏற்பட்ட மாற்றந்தான். ஆனா எங்கள் எல்லோருக்குமே அது மகிழ்ச்சியா இருக்குது. இப்ப அவன் எங்கட கேள்விகளுக்குப் பதில் சொல்லுறான். சில வேளைகளில அவனே ஒரு உரையாடலத் தொடங்குகிறான். அவன் இப்ப மகிழ்ச்சியா இருக்கிறான். அமைதியா இருக்கிறான். மற்றப் பிள்ளைகளில ஆர்வம் காட்டுறான். இப்ப நல்லாக் கதைக்கிறான். ஆனா ஏதாவது அவன் மனதக் குழப்பிவிடும்போது அந்த அரைகுறையான... முதிர்ச்சியில்லாத கதைக்குள் போய் விடுகிறான். அவன் இப்ப அநேகமான சந்தர்ப்பங்களில தன்னை 'நான்' என்றே சொல்லிக் கொள்கிறான். ஹெடா மகிழ்ச்சி வெள்ளத்தில மூழ்கிப்போய் இருக்கிறாள். நாங்க எல்லோருமே அவனப்பாத்து சந்தோசப்பட்டுக்கொண்டிருக்கிறம். இதுகள நீங்க அறியவிரும்புவீங்கள் எண்டு நினைச்சன்" என்றாள்.

"இதுகள அறிஞ்சது எனக்கு நிச்சயமாவே சந்தோசமாயிருக்குது" என்று சொல்லிவிட்டு, "அவன்ர நடத்தையைப் பற்றி மேலதிக விவரங்கள நான் அறிந்துகொள்ளக்கூடியதா ஏதோ ஒருவகை ஒன்று கூடல உங்களால ஒழுங்கு செய்ய முடியுமா? நீங்களும் ஹெடாவும் நானும் ஒன்றாகப் பகல் சாப்பாடு ஒன்றை சாப்பிடு வோமா? கெதியா அதச் செய்யவேணும்'" என்றேன்.

" எங்களுக்கும் அப்பிடிச் சாப்பிட நல்ல விருப்பம்தான். ஹெடாவும் கட்டாயம் விரும்புவாள் எண்டு நினைக்கிறன். அவளையும் டிப்ஸின்ர ,குழுவுக்கு நகர்த்தியிருக்கிறம். அவளுக்கும் டிப்ஸுக்கும் நல்லா ஒத்துப்போகும் எண்டு நாங்கள் நினைச்சதாலதான் அப்பிடிச் செய்திருக்கிறம். அவனோட இருக்கிறத அவள் நிச்சயமா விரும்புறாள். அவள் அவனுக்கு பெரிதும் உதவியிருக்கிறாள்" என்றாள் ஜேன்.

அடுத்த நாள் நாங்கள் ஒன்றாக மதிய உணவை அருந்தினோம். அந்த வேளையிலே டிப்ஸ் பற்றின பல விடயங்கள வெளிப்படுத்துகின்ற வகை கலந்துரையாடலாக அது இருந்தது.

தனக்குத் தானே போர்த்திக்கொண்ட தனிமை என்ற போர்வைக்குள்ளிருந்து மிக மெதுவாகவும் மிக மென்மையான முறையிலும் அவன் வெளிவந்துகொண்டிருந்தான். தன்னைச் சூழ நிகழ்ந்தவற்றை டிப்ஸ் அறிந்திருந்தான்




என்பதில் எங்களில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை. எங்களுடைய ஊகங்கள் சரியானவையாகவே இருந்தன. அவன் தனது குழுவின் விளிம்பில் இருந்த மேசைக்குக் கீழே குந்திக்கொண்டிருந்த வேளைகளில் அல்லது ஏதோ தன் குழுவிலிருந்து பிரிந்து இருப்பவன் போல் தோன்றும் படி தன் குழுவுக்கு முதுகைக் காட்டியபடி அமர்ந்துகொண்டிருந்த வேளைகளில் அவன் கேட்டுக்கொண்டும் கற்றுக் கொண்டும் இருந்திருக்கிறான். படிப்படியாக அவன் தன் குழுவை அதிகமதிகம் நேரடியாக அணுகத் தொடங்கியிருந்தான். ஆரம்பத்திலே அவனிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுருக்கமான பதில்களே கிடைத்தன. பிறகு, மற்றப் பிள்ளைகள் செய்வது போல் செய்யத் தொடங்கிவிட்டான். காலையில் அறைக்குள் வரும்போது யாராவது காலை வணக்கம் சொன்னால் அவனும் பதில் வணக்கம் சொல்கிறான். அவன் தனது கோட்டையும் தொப்பியையும் அவதானமாகக் கழற்றி கோட்டுகளை தொங்கவிடும் அறையில் தனக்குரிய மூலையில்தொங்க விடுகிறான். அவன் படிப்படியாக மற்றப் பிள்ளைகளை நோக்கி நகர்ந்தான். கதைகள், பாட்டுகள், உரையாடல் வேளைகளில் தன் கதிரையை மற்றப்பிள்ளைகளுக்குக் கிட்டக் கிட்ட நகர்த்தினான். சில சமயங்களில் கேள்விகளுக்குப் பதில்களையும் சொன்னான். மற்றப் பிள்ளைகளோடு கலந்து கொள்ளும்படி அல்லது கதைக்கும்படி கேட்கும் விடயத்தில் டிப்ஸ் மீது திடீர் கவனம் செலுத்தப்படுவது போல் தோன்றாத விதத்தில் ஆசிரியைகள் அந்த குழுவினரின் செயற்பாடுகளை திறமையுடன் நடத்திச் சென்றிருந்தார்கள். ஆனால், பங்கெடுக்கின்ற வாய்ப்பு அவனுக்காக எப்போதுமே காத்துக்கொண்டிருந்தது.

" அவன் பொறுமையிழந்து கத்துறவன் என்கிறத நாங்க மறந்து போய்விடுகிற அளவுக்கு நீண்ட காலமாகவே அவன் பொறுமையிழந்து கத்தாமலே விட்டிட்டான்" என்று ஹெடா சொன்னாள்.

"இப்ப அவன் மற்றப்பிள்ளைகளப் பாத்துச் சிரிக்கிறான். எங்களயும் பார்த்துச் சிரிக்கிறான். எங்கட குழுவுக்குள்ள அவன் முதல் முதல் வரத் தொடங்கயுக்குள்ள எனக்கு நெருக்கமா வருவான். என்ர கையப் பிடித்துக் கொண்டு கொஞ்சக் கொஞ்ச நேரம் கதைப்பான். அவன்கொடுக்க விரும்புற அளவில மட்டும் பெற்றுக்கொள்ளுறதில நான் கவனமா இருந்தன். அவனப் பிடிச்சுத் தள்ளி விடுறதுக்கு ஒருநாளும் முயற்சிக்கயில்ல. அவன் செய்யிற எல்லாத்தையும் சிநேகபூர்வமா பாராட்டுறனான். இன்னும் செய்யும் படி ஊக்கப்படுத்துறனான். மற்றப்பிள்ளையளும் தங்கட வேலைகளை பார்த்துக்கொண்டே டிப்ஸ் செய்யிற எல்லாத்தையும் கேள்வி ஏதும் கேட்காமலே ஏற்றுக்கொண்டினம். படிப்படியாகத் தனக்குத் தரப்படுகிற பணிப்புகள அவன் நிறைவேற்றத் தொடங்கினான். கெதியிலேயே மற்றப்பிள்ளைகள விடத் திறமையான முறையிலும் நிறைவேற்றத் தொடங்கினான். பிறகு, வரையும் பீடமும் தீந்தைகளும் இருக்கிற இடத்துக்குப் போவான். அவன் முதன் முதலா செய்ததும் அதுதான். ஏதோ கலைப்பொக்கிசம் ஒண்ட உருவாக்கிறவன்போல தன்ர வேலையில மூழ்கிப்போயிருப்பான்"

பெரிதாகச் சிரித்துக்கொண்ட ஹெடா, அவனது சித்திரங்கள் இருந்த கடதாசிச் சுருளை எடுத்து அவற்றை விரித்தாள். " அவன் ஓவியன் இல்லத்தான்.ஆனா ஏதோ செய்யுறதுக்காவது முயற்சி செய்திருக்கிறான்"

நான் அந்தச் சித்திரங்களைப் பார்த்தேன். ஒரு ஆறுவயதுக் குழந்தை வரைந்திருக்கக் கூடியமாதிரி, எளிமையான வகை மாதிரிச் சித்திரங்களாக அவை இருந்தன. புராதனமான வீடு , மரங்கள், பூக்கள். வர்ணங்கள் தெளிவானவையாயும் பிரகாசமானவையாயும் இருந்தன. ஆனால் இவற்றைவிடச் சிக்கலான ஓவியங்களை வரையக் கூடிய திறமை இருக்கும் போதும் இந்தவாறான சித்திரங்களை டிப்ஸ் ஏன் வரைந்தான்? அவனது வயதுப் பிள்ளைகள் வரையக் கூடியவற்றை ஒத்தவையாகத்தான் அவை இருந்தன.ஆனால் "வீட்டில்" தனது வயது இயலுமையை மீறிய சித்திரங்களையும் ஓவியங்களையும் வரையும் ஒரு பிள்ளையின் பங்களிப்பென்ற வகையிலே விசித்திரமான ஒன்றாக அவை இருந்தன.

"அவனுடைய வேறுசில வேலைகளையும் கொண்டு வந்திருக்கிறன்" என்றாள் ஹெடா. " இது அவன் எழுதின சில கதைகள். அரிச்சுவடியை அவன் அறிந்திருக்கிறான். சில வார்த்தைகளை எழுத்துக்கூட்டி எழுதவும் அவனால் முடியும்.

அந்தத் தாள்களை ஹெடா என்னிடம் தந்தாள். டிப்ஸ் மிக முயற்சி செய்து சில வார்த்தைகளை ஒவ்வொரு எழுத்தாக எழுதியிருந்தான்.

நான் பூனையைக் காண்கிறேன்.
நான் நாயைக் காண்கிறேன்.
நான் உங்களைக் காண்கிறேன்.

(தொடரும்)

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

புதிர் ஐந்திற்கான விடையினை சரி பார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 3 | 1 | 6 | 8 | 9 | 7 |
| 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 1 | 2 | 4 |
| 1 | 9 | 8 | 4 | 2 | 7 | 6 | 5 | 3 |
| 9 | 8 | 1 | 7 | 5 | 3 | 2 | 4 | 6 |
| 6 | 3 | 2 | 8 | 4 | 9 | 7 | 1 | 5 |
| 5 | 4 | 7 | 2 | 6 | 1 | 9 | 3 | 8 |
| 4 | 7 | 5 | 6 | 9 | 2 | 3 | 8 | 1 |
| 3 | 1 | 9 | 5 | 7 | 8 | 4 | 6 | 2 |
| 8 | 2 | 6 | 1 | 3 | 4 | 5 | 7 | 9 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

### சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமானமனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

**புதிர் -06**

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப்புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத் திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

*(இதற்கான விடை அடுத்தவாரம்)*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | | | | 1 | |
| 8 | | | 6 | 2 | 1 | | | 5 |
| | | 3 | | | | 6 | | |
| | 3 | | 8 | 6 | 9 | | 2 | |
| | 4 | | 3 | | 2 | | 8 | |
| | 6 | | 5 | 7 | 4 | | 3 | |
| | | 6 | | | | 1 | | |
| 1 | | | 9 | 3 | 6 | | | 8 |
| | 5 | | | | | | 6 | |

## Save the Children
in Sri Lanka

## STAFF HOUSE WANTED

Save the children in kilinochchi is urgently looking for a suitable house for renting with approximately at least 04 rooms with Kitchen & comfortable Veranda with Vehicle parking compound.

The house is not to be located 02 Km far away from A9 Road and 04 kms from Save the Children office compound.

For further details, conduct the HR/Admin Asst, Kilinochchi.

**Tp No 021 228 5797**
**Tp: 021 228 5983.**

**அலுவலர்கள் தங்குவதற்கான இடம் கோரல்**

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கு கண்டி வீதியில் இருந்து 02 கிலோமீற்றருக்கு உட்பட்டதாகவும், சிறுவர்பாதுகாப்பு நிதியத்தில் இருந்து 04 கிலோமீற்றருக்கு உட்பட்டதாகவும், ஆகக்குறைந்தது 04 அறைகளையும் பரந்த விறாந்தையும் உடையதான வீடு ஒன்று அவசரமாக வாடகைக்கோ அல்லது குத்தகை அடிப்படையிலோ தேவைப்படுவதால் மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக வீட்டினை தந்துதவ விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் உடன் தொடர்புகொள்ளமாறு வேண்டப்படுகின்றீர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம்,
142, கண்டி வீதி, கிளிநொச்சி.

**Save The Children in Srilanka**
**142,Kandy Road, Kilinochchi Regional Office**

(சி.13260)

## வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்

## [நிகொட்]

## கணக்குப் பதியுநர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இயங்கிவரும் நிகொட் கருத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் கணக்குப் பதியுநர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் அரசாங்க அதிபர்,கச்சேரி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 23.11.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறாது ''நிகொட் மாவட்ட முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தில் கணக்குப் பதியுநர் பதவிக்கான விண்ணப்பம்'' என பதவியின் பெயரைக்குறிப்பிடல் வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.

### கடமைகள்:-

**தேவையான ஏடுகளையும் மற்றும் புத்தகங்களையும் பராமரிப்பதற்கும் சகல கொடுப்பனவு ஆவணங்களின் பொறுப்பாளராக இருப்பதற்கும் கொடுப்பனவுகளைத் திறமையாகவும் சரிவரவும் செய்வதற்கும் கணக்காளருக்கு உதவியாக இருத்தல் வேண்டும்.**

### தகைமைகளும் அனுபவங்களும்:-

***பின்வரும் தகைமைகளில் ஒன்றையாவது கொண்டிருத்தல் வேண்டும்.***

- க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்களம், கணிதம், வர்த்தகம்/கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் வர்த்தகம்/கணக்கியல் உட்பட புதிய பாடத்திட்டத்தின் கீழ் இரண்டு பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தி.
- இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கீட்டியல் டிப்ளோமாவில் சித்தி.
- இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி.

### தொழில்சார் தகைமைகள்:-

- கணக்குப் பதியுநராக 5 வருட அனுபவம்.
- MS Ward, Excel கணனி செயற்பாட்டில் அனுபவத்துடன் கணனியில் தனித்து இயங்கும் திறன்.
- ஆ[illegible]லத்தில் கடிதத்தொடர்பு கொள்ளும் ஆற்றல்.

தி.இராசநாயகம்,
அரசாங்கஅதிபர்/மாவட்டச்செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.13144)

## 04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
01 - 06 - 1982



வீரச்சாவு
04 . 11 . 2004

## லெப்-தென்றல்

**சிவநாதன் சர்வலோஜினி (சர்மி)**
**அளவெட்டி,யாழ்.**

*எம் செல்வமாம் சர்மியம்மாவின்*
*இன்முகம் கண்டு*
*நான்காண்டுகள் ஓடிப் பறந்ததுவோ*
*நான்காண்டல்ல நாற்பது ஆண்டுகள்*
*தான் சென்றிடினும்*
*உன் நினைவு எம் மனதுக்குள்*
*அழியாதம்மா*
*வீட்டிற்கு மூத்தவளாய்*
*சர்வலோஜினியாய்*
*விடுதலையை சுவாசிக்க*
*தென்றலானாய்*
*உனது இன்பமான சிரிப்புடன்*
*இனிதாய் வாழ்வுறும் பருவமல்லோ?*
*இதமாய் வாழும் பருவமென்று*
*காலனே உன்னை கண்ணுக்குள்*
*வைத்து*
*கவர்ந்து கொண்டு போகையிலே*
*என் செய்வோமம்மா*
*எது செய்வோம் யாதுமறியாமல்*
*துடிக்கின்றோம்-குஞ்சே*
*துடிக்கின்றோம் எத்தனையோ*
*நினைத்திருந்தோம் எவ்வளவோ*
*கனவுகண்டோம் கனவுகளை*
*நினைவாக்கிவிட்டு எங்கம்மா*
*சென்றுவிட்டாய்.*

தகவல்:-
குடும்பத்தினர்

(6639)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13 - 05 - 1955



இறப்பு
30 - 10 - 1989

## அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

**ஐயனார் வீதி,**
**பருத்தித்துறை.**

*கள்ளமில்லா வெள்ளை மனம் கொண்ட*
*உள்ள மாந்தரை எள்ளி நகையாடும் எந்தன் உறவேயப்பா!*
*குடும்ப விளக்கே குலத்தேவரே,*
*பலத்துடன் பாசமூட்டிய பாவலரேயப்பா*
*சிரித்த முகம் எங்கே?செவ்விதழிற் சீறிய வார்த்தை எங்கே?*
*உங்கள் பாவமறியாப் பட்சிகள் எமைப் பாதிவழியில்*
*பரிதவிக்க விட்டது ஏனப்பா?*
*திருமுகம் காணத் தினமும் வாடுகின்றோம்*
*தரும நீதிதான் சொல்லுமா?*
*தரணியில் உங்கள் முகம் காணபோமா?*
*காலங்கள், கோலங்கள் மாறினாலும் மங்கையும்,*
*மாதருமாய் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவருடன் நாமிங்கே.*
*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

**8ஆம் வட்டாரம்,**
**மந்துவில் ,**
**புதுக்குடியிருப்பு.**

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(6873)

## ஒலிம்பிக் நோக்கி

ஒலிம்பிக் வெற்றி வீரர்களை எங்குமே தேடவேண்டியதில்லை. அவர்கள் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் இருக்கிறார்கள். அவர்களை உரிய வயதில் இனம் காண்பதுதான் மிக முக்கியம். ஏறக்குறைய பத்து அல்லது பன்னிரண்டு வயதில் இனங்காணப்பட்டு உரிய முறையில் பயிற்சியளித்து வந்தால் அவர்கள் ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை வெற்றி கொள்வதை யாராலும் தடுக்க முடியாது.

நவீன உபகரணங்களும், வசதிகளும் பயிற்சியில் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதில்லை. அதனை விட மனப்பாங்கே முக்கியமானது. மனப்பாங்கு எனும்போது மெய்வல்லுனரின் மனப்பாங்கு, பயிற்றுனரின் மனப்பாங்கு, அவர்கள் சார்ந்திருக்கும் சமூகத்தின் மனப்பாங்கு என்பவையே முக்கியமானவை.

மெய்வல்லுனரைப் பொறுத்தவரை பயிற்சிக்குரிய நேரத்தைக் கண்டுபிடிப்பதற்கும், அதன்படி பயிற்சியை முறையாகப் பின்பற்றுவதும் முக்கியமானவை. மெய்வல்லுனர்களைப்



## வீரர்களைத் தேடவேண்டாம் இங்கே இருக்கிறார்கள்

பொறுத்தவரை ஆண்டு முழுவதுமான தொடர் பயிற்சி அவசியமாகும். அதனைவிட பயிற்றுனர்கள் அர்ப்பணிப்புடையவர்களாகவும், பிந்திய தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இம்முறை இருபத்தொரு பயிற்றுனர்கள் மிகப் பிந்திய நுட்ப முறைகளில் பயிற்றப்பட்டனர். சிறிது காலத்தின் பின்பே இவர்களின் செயற்பாட்டின் பலன்களை உணரமுடியும். 1994ஆம் ஆண்டு என்னிடம் பயிற்சி பெற்ற திரு. றொகான் இராஜசிங்கம் இம்முறை அகில இலங்கை ரீதியான போட்டிகளில் தங்கப்பதக்கம் பெறும் வீரர்களை உருவாக்கியுள்ளதை அறிகிறேன். ஒவ்வொரு பயிற்றுனரும் அர்ப்பணிப்புடன் செயற்படும்போது அதன் விளைவுகள் எப்போதும் நல்லவையாகவே அமையும்.

மெய்வல்லுனர்கள் வெற்றி பெறுதல் என்பதில்அவர் சார்ந்திருக்கும் சமூகத்தின் மனப்பாங்கும் செயற்பாடுகளும் முக்கியமானவை.மெய்வல்லுனர்கள் சாதனை மட்டத்தை எட்டும் போது அவர்கள் அங்கீகரிக்கப்படவும்,பாராட்டப்படவும், அவர்களைத் தாங்கி நிற்பவர்களாகவும் சமூகம் அமையும்போதுதான் அவர்கள் மேலும் மேலும் வெற்றியடையும் ஊக்கத்தைப் பெறுவார்கள். ஒவ்வொரு மெய்வல்லுனருக்கும் புரவலர் (**Sponser**) அவசியம். பொருளாதார ரீதியாக அவர்கள் தாக்கப்படும் போது அவர்களின் வளர்ச்சியில் தடையிருக்காது.

கலாநிதி ஜோக்கிம் பிரிண்ஸ் -ஜேர்மன் மெய்வல்லுனர் பயிற்றுனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடக்குக்கிழக்கு மெய்வல்லுனர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி பயிற்சியில் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்ட மெய்வல்லுனர் சங்கங்களின் பயிலுனர்களும் கலந்துகொண்டனர்.இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வட-கிழக்கு மெய்வல்லுனர் சம்மேளனம் சிறிலங்கா மெய்வல்லுனர் சங்கம்,தமிழீழ விளையாட்டுத்துறை என்பவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. மிகவிரைவில் வடக்கு கிழக்கு இளையோர் மெய்வல்லுனர் போட்டி, இளையோர் கூட்டு நிகழ்ச்சிப் போட்டி என்பன தமிழர் தாயகமட்டத்தில் நடத்தப்படவுள்ளதாக வட- கிழக்கு மெய்வல்லுனர் சம்மேளன நிர்வாகிகள் தெரிவித்திருந்தனர்.

- அ. அன்ரன் அன்பழகன்-




அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தை ஈர்ப்பவையாகவும், ஒரு எதிர்பார்ப்பை தோற்றுவிப்பவையாகவும் உள்ளது.

மூன்று டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரிலும் விளையாட சந்திரபோல் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் மேற்படி டெஸ்ட் தொடர் ரசிகர்களை நோக்கும் வகையில் அமைந்துள்ளது.

விளம்பர சர்ச்சை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்ட லாறா உட்பட ஏழு முன்னணி வீரர்கள் அணியில் இணைக்கப்பட்டிருப்பதும், இப்போட்டித் தொடர் குறித்த அணித் தலைவர் சந்திரபோல் மற்றும் பிரயன் லாறா ஆகியோரின் கூற்றுக்களுமே இப்போட்டி குறித்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது.

அதாவது, வலுவான அணி அவுஸ்திரேலியா என்பது எல்லோருக்கும் தெரியும். அதேசமயம் எங்கள் அணியிலும் அவர்களுக்கு நிகராக



## பழி தீர்க்குமா? பழியாகுமா?

ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடிய வீரர்கள் உள்ளனர் என அணியின் தலைவர் நம்பிகை அளிக்கும் வகையில் தெரிவித்துள்ளார்.

சந்திரபோலின் கூற்றுக்கு வலுச் சேர்க்கும் வகையில் பிரையன் லாறாவின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

அதாவது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலக பதினொரு பேர் அணியில் ஆடிய வீரர்களைவிட எமது வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் எனவும், அவுஸ்திரேலியா அணியை இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரில் வீழ்த்திய முறையை அவதானித்திருப்பதாகவும், அந்த வகையில் அது தற்போது பலமிழந்துள்ளது எனவும் லாறா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இருவரின் கூற்றுக்களுக்கும் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் அண்மையில் நடைபெற்று முடிந்த குயின்ஸ்லாந்து அணியுடனான பயிற்சிப் போட்டி அமைந்துள்ளது.

சாமுவேல், ஸ்மித் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் குயின்ஸ்லாந்து அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் 610 ஓட்டங்களைக் குவித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி அவுஸ்திரேலியா அணியுடனான டெஸ்ட் தொடரை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளக்கூடிய வகையில் இருக்கும் என்ற எண்ணப்பாட்டையும் தோற்றுவித்துள்ளது.

ஆனால், அவுஸ்திரேலியா அணியோ உலக தரப்படுத்தலில் முதல் நிலையை நீண்ட காலமாக தன்னகத்தே கொண்டிருப்பதுடன் அவ்வணியுடனான போட்டி என்றாலே எதிரணிகளுக்கு அச்சமூட்டும் ஒன்றாகவே இருக்கும்.

இந்நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பாரிய சவால்களுக்கு மத்தியில் இப்போட்டித் தொடரை வெற்றிகொள்ள வேண்டிய அவசியத்திற்கும் உள்ளாகியுள்ளது.

அதாவது கடந்த 13 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடர் எதையும் அதன் சொந்த மண்ணிலோ அன்றி அவுஸ்திரேலியாவிலோ வெற்றிகொள்ளவில்லை.

இந்நிலையில், அவுஸ்திரேலியா மண்ணில் வைத்து அதனை வீழ்த்துவது என்பது எளிதான வகையில் இருக்குமா என்ற கேள்வி எழும் அதேவேளை, அதன்



தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலைக்கு சந்திரபோல் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி மேற்படி சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

எனவே, 17 ஆண்டு கால தோல்விக்கு வோகன் தலைமையிலான இங்கிலாந்து முற்றுப்புள்ளி வைத்ததைப் போன்று 13 ஆண்டு கால தோல்விக்கு சந்திரபோல் தலைமையிலான இளம் மேற்கிந்தியத்தீவுகள் அணி முற்றுப்புள்ளி வைக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

சுபானந்

## தோனியின் ஆட்டம் ஒரு விபத்து

-டொம் மூடி-



இலங்கை அணிக்கு 'தோனி புயல்' பற்றி அவ்வளவாக தெரியாது. அற்புதமாக ஆடினார். இவரது அதிரடியை மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றியது. ஒரு நாள் போட்டியின் மிகச் சிறந்த இன்னிங்சை பார்த்த அனுபவம் கிடைத்தது. அதற்காக இவரை அவுஸ்திரேலியாவின் கில் கிறிஸ்ரோடு ( செல்லமாக கில்லி) ஒப்பிடுவது சரியாகாது. கில்லி போல் பெயர் எடுக்க இங்கிலாந்து,அவுஸ்திரேலியா, நியூசிலாந்து,தென் ஆபிரிக்கா போன்ற அன்னிய மண்ணில் தனது திறமையை தோனி நிரூபித்தாக வேண்டும்.

இத் தொடரில் இன்னும் போட்டிகள் இருப்பதால் நம்பிக்கை இழக்கவில்லை. அணியில் அதிக அளவில் இளம் வீரர்கள் இடம்பெற்று இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்திய சூழ்நிலையைப் புரிந்து கொள்ளவே முதல் இரு போட்டிகள் தேவைப்பட்டன. ஜெய்ப்பூரில் நடந்த மூன்றாவது போட்டியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சங்ககரா, ஜெயவர்த்தன பிரதானமாக ஆடினர். தோனியின் விளாசலில் சங்ககரா சதம் உரிய அங்கீகாரம் பெறாமல் போனது. களத்தடுப்பு நன்றாக இருந்தது. 'தோனி ஆட்டம்'கிரிக்கெட்டில் எப்போதாவது தான் நிகழும். எனவே,இனி வரும் போட்டிகளில் தன்னம்பிக்கையுடன் களமிறங்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கையின் இலக்கு2007 உலகக் கோப்பையை வெல்வது தான். இப்படி நீண்ட கால இலக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது, இலங்கை அணியுடனான 'மூடியின் தேனிலவுக்காலம்' முடிந்து விட்டது என்கின்றனர். நாங்கள் மரதன் ஓட்டத்துக்கான முதல் அடியைத்தான் எடுத்து வைத்துள்ளோம். பயிற்சியாளராக இலங்கையில் நடந்த முத்தரப்புத் தொடரை வெற்றிகரமாகத்தான் துவங்கினேன். அந்த வெற்றிப் பாதையை மிக விரைவில் கண்டறிந்து விடுவேன்.



## லாரா சாதிப்பாரா?

ஆஸி, டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத்தீவு வீரர் பிரையன் லாரா அதிக ஓட்டம் குவித்து முதலிடம் பெற வாய்ப்புள்ளது. இந்த சாதனை நிகழ்த்த இவருக்கு இன்னும் 316 ஓட்டங்கள் தேவை. 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள லாரா 30 சதங்கள் உட்பட 10,859 ஓட்டங்களை குவித்துள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவின் ஆலன் போர்டர் 156 போட்டிகளில் 11,174 ஓட்டங்கள் குவித்து முதலிடத்திலுள்ளார்.

ஒரே இன்னிங்சில் அதிக ஓட்டம்(400) குவித்து சாதித்த லாரா, தற்போது சரியான முறையில் ஆடமுடியாது தவிக்கிறார். உலக லெவன் அணிக்காக விளையாடிய இவர் 3ஒருநாள் போட்டிகளில் வெறும் 46 ஓட்டங்களே எடுத்தார். இந்தச் சூழலில் அணியை காக்கவேண்டிய பெரும் பொறுப்பில் களமிறங்கும் லாரா அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இம்முறை சாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சனாதிபதித் தேர்தல் 2005.11.17

## வாக்குகளை அடையாளமிடும் ஒழுங்குமுறை

01. இது இலங்கையின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலாகும். இம்முறை வாக்குகளை அடையாளமிடும் முறையானது வேட்பாளர்கள் மூன்று பேருக்கு மேற்பட்ட தொகையினர் போட்டியிட்ட 1999 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலின் போது பின்பற்றப்பட்ட முறையை ஒத்திருக்கிறது. இத்தேர்தலின் போது மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்ட தொகையினர் காணப்படுகின்றமையால் ஒரு வாக்கொன்றையும் இரண்டாம் விருப்பொன்றையும், மூன்றாம் விருப்பொன்றையும் அடையாளமிடுவதற்கு அவகாசமுண்டு.

02. இரண்டாம், மூன்றாம் விருப்பொன்று காணப்படாதவிடத்தும் முறையாக அடையாளமிடப்பட்ட வாக்கொன்று செல்லுபடியான வாக்காக அங்கீகரிக்கப்படும். ஆயினும் வாக்கொன்று அடையாளமிடப்படாத இரண்டாம் மூன்றாம் விருப்புக்கள் மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டொன்று, வாக்கொன்று காணப்படாமை காரணமாக நிராகரிக்கப்படும்.

03. வாக்குச்சீட்டொன்று அடையாளமிடப்படவேண்டிய நடை முறைச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1 "1"என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்குத் தமது வாக்கினை அளிக்க முடியும்.

3.2 "2"என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதனூடாக வேட்பாளரொருவருக்குத் தமது இரண்டாம் விருப்பினை அளிக்க முடியும்.

3.3 ''3''என்ற இலக்கத்தை அடையாளமிடுவதனூடாக வேட்பாளரொருவருக்குத் தமது மூன்றாம் விருப்பினை அளிக்க முடியும்.

04. எது எவ்வாறாயினும் வாக்காளரின் எதிர்பார்ப்பு, அடையாளமிடப்பட்டுள்ள அடையாளங்களின் இயல்பினூடாக முறையாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின் அடையாளங்கள் வித்தியாசமான முறையில் குறிக்கப்பட்டிருந்த போதிலும் கூட அத்தகைய அடையாளங்களை ஏற்றுக்கொள்ள முடியும்.

4.1 *தாங்கள் அடையாளமிட எதிர்பார்ப்பது வாக்கொன்றை மாத்திரமாயின்.*

4.1.1 குறியீடிடப்பட்ட அடையாளத்தினால் வாக்காளரின் ஆளடையாளம் வெளிப்படுத்தப்படாமலும்,

4.1.2 அவ்வாறு குறியீடிடப்பட்ட அடையாளம் ''2'' என்ற இலக்கமோ "3" என்ற இலக்கமோ அல்லாததுமாகக் காணப்படுமாயின் அத்தகைய எவ்வடையாளத்தையும் வாக்காக ஏற்றுக்கொள்ள முடியாது.

4.2 *தாங்கள் வாக்கையும், இரண்டாம், மூன்றாம் விருப்புக் களை யும் அடையாளமிட விரும்புவீர்களாயின் தயவுசெய்து கீழ்வருமாறு அடையாளமிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.*

4.2.1 வாக்கை அடையாளமிட "1" என்ற இலக்கம்.

4.2.2 இரண்டாம் விருப்புக்காக "2" என்ற இலக்கம்

4.2.3 மூன்றாம் விருப்புக்காக "3" என்ற இலக்கம்.

வாக்காளினால் குறியீடிடப்பட்ட அடையாளங்களின் இயல்பு 1,2,3 ஆகியவற்றைவிட வேறுபட்டிருக்கின்ற போதிலும்,அடையாளங்கள் மூன்றிற்கும் இடையே ஒன்றிற்கொன்று காணப்படுகின்ற வித்தியாசங்களின் இயல்பை கவனத்திலெடுத்து இரண்டாம், மூன்றாம் விருப்புக்களை இனங்கண்டுகொள்ள முடியுமாயின் அடுத்த அடையாளம் வாக்கினை வெளிப்படுத்தும் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்படும்

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(13148)

# சனாதிபதித் தேர்தல் 2005.11.17

## அஞ்சல் வாக்களிப்பு தொடர்பான அறிவுறுத்தல்

01. மேற்குறித்த வாக்கெடுப்புச் சார்பாக அஞ்சல் மூல வாக்காளர்கள் தமது வாக்கினை அடையாளமிடுவதற்கு 2005.11.7 ஆம் திகதி அவர்கள் பணிபுரியும் இடங்களில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களினூடாக அனைத்து அத்தாட்சிப்படுத்தும்அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தவிர்க்க முடியாத காரணமொன்றினால் வாக்களிக்க முடியாது போகும் அஞ்சல் மூல வாக்காளரொருவருக்கு 2005.11.08 ஆம் திகதி வாக்களிப்பதற்குரிய வசதிகளைச் செய்துகொடுக்குமாறு என்னால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

02. இச்சந்தர்ப்பத்தில் வேட்பாளரொருவர் சார்பாக இரு முகவர்களை நியமிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு முடியும். மேலும், இப்பணியை கண்காணிப்பதற்காக "சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் தொடர்பான மக்கள் செயற்பாடு (PAFFEREL)" மற்றும் ''தேர்தல் வன்முறை நிலையம் (CMEV)'' ஆகிய நிறுவகங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்நிறுவகங்களிலிருந்து இரண்டு கண்காணிப்பாளர்களை அஞ்சல் மூல வாக்களிப்பு நிலையங்களுக்கு நியமிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதற்குமேலதிகமாக இந்த இடங்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு தமது அலுவலகத்தில் அலுவலகரொருவரையும் , சிற்றூழியர் ஒருவரையும் கொண்ட சிறு குழுவொன்றை இணைத்துக்கொள்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியை கண்காணிப்பது தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். மேற்குறிப்பிட்டவர்களும் அஞ்சல் மூல வாக்காளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவர்கள் மட்டுமே அஞ்சல் மூல வாக்களிப்பு நிலையங்களுக்குள் உட்பிரவேசிக்க அனுமதியுண்டு.

03. விசேடமாக பின்வரும் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை இவ்விடங்களில் எவரும் மேற்கொள்ளலாகாது.

01 வாக்களிப்பு நிலையமொன்றினுள் வேட்பாளரொருவருக்கு ஆதரவளிப்பதை ஊக்குவிக்கக் கூடிய அச்சிடப்பட்ட எந்தவொரு புகைப்படத்தையோ, துண்டுப்பிரசுரமொன்றையோ பார்வைக்கு வைத்தல் கூடாது. அது தொடர்பாக எந்தவொரு துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்படக்கூடாது.

02 அவ்வாறான இடங்களில் வாக்கொன்றை இரந்து கேட்டல், அல்லது வேட்பாளரொருவருக்கு வாக்களிக்க வேண்டாமென வாக்காளர் ஒருவரை தூண்டுதல் குற்றமொன்றாகும்.

03 அவ்வாறான இடங்களில் அல்லது அதற்கருகாமையில் சத்தமிடுதல் அல்லது வேறு ஏதேனும் குறையற்ற விதத்தில் நடந்துகொள்ளலாகாது.

04 வாக்கு அடையாளமிடப்பட்ட அல்லது அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டொன்றை அந்த இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்வது இடமளித்தலாகாது.

05 வாக்களிக்கப்பட்ட வாக்குச்சீட்டொன்றை எந்தவொரு நபருக்கும் காண்பிப்பது குற்றமாகும்.

06 வாக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டை காண்பிக்குமாறு எந்தவொரு அஞ்சல் வாக்காளரையும் வற்புறுத்துவதும் குற்றமாகும்.

04. அஞ்சல் மூல வாக்களிப்பினை சுமுகமானதொரு சூழ்நிலையில் மேற்கொள்வது தொடர்பாக பொலிசாரின் ஒத்துழைப்பை எவரேனும் ஒரு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் இப்பணிகளை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் கோருவாராயின், அவ்வாறான ஒத்துழைப்பை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் வேண்டப்பட்டுள்ளது.

05. மேற்படி விடயங்கள் அஞ்சல்வாக்காளர்கள் தொடர்பாக பணியாற்றுகின்ற அரச நிறுவகங்களின் தலைவர்கள், அஞ்சல் மூலம் வாக்களிக்கின்ற வர்கள், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஆகியோரின் ஆழ்ந்த கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(சீ.13149)

எம்மிடம் உள்ள கால்நடைகளில் மாடுகள் முக்கியமானவை. விவசாய நடவடிக்கைகளோடும் ஏனைய எமது நாளாந்தச் செயற்பாடுகளிலும் அவை முக்கிய பங்கினை வகிக்கின்றன.

மாடுகளின் பயன்பாடுகள் ஏராளமானவை. அவை ஒருவிதத்தில் எமது தனித்துவமான குறியீடான பனையினை ஒத்ததாகும். எமக்கான பயன்பாட்டில் இரண்டுக்கும் இடையே பல பொதுவான ஒற்றுமைகள் உண்டு.

இங்கு நாம் குறிப்பிடப்படுவது மாடுகளின் மூலம் நாம் பெற்றுக்



# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

கொள்ளும் எரு தொடர்பான விடயமாகும். ஒருமாடு வருடம் ஒன்றுக்கு சராசரியாக 3500 கிலோ எருவை தருவதாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இதில் 14 கிலோ நைதரசன், 7 கிலோ பொஸ்பரசு, 3.5 கிலோ பொட்டாசியம் என்பன அடங்கியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதுதவிர பயிருக்குத் தேவையான பல் நுண்ஊட்டச் சத்துக்களும் எருவில் உள்ளன. மேலும் மாட்டு எரு மண்ணில் நீண்டகாலம் தங்கி இருந்து பயிருக்கு பயன்படக் கூடியது. அத்துடன் பயிர் செழித்து வளருவதற்கு உரிய மக்கினையும் தருகின்றது.



எமது பகுதிகளில் ஏராளமான மாடுகள் உள்ளன. போர் நடவடிக்கைகளாலும் ஏனைய அதன் பக்கவிளைவுகளாலும் மாடுகளில் கணிசமான பகுதி அழிந்தாலும் இன்றும் எமது முக்கியமான வளமாக அவை உள்ளன.

எனவே அவை மூலம் கிடைக்கும் மாட்டெரு எமக்கு இயற்கை கொடுத்த வரப்பிரசாதம் ஆகும். எந்த விதமான செயற்கையான இரசாயன உரங்களின் மூலமும் கிடைக்காத நல்ல பயன்கள் மாட்டெருவால் கிடைக்கின்றது.

மண்ணை நாசமாக்காமல் எமது தாயக மண்ணை வளப்படுத்தும் மாட்டெருவின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டாலும் அதனை பொருத்தமான முறையில் பயன்படுத்துவதில்லை.

மாட்டெருவை எருவாகவே பயன் படுத்தலாம். கூட்டெரு தயாரித்தும் பயன்படுத்தலாம். மாடுகளை வயல், வெளிகளிலே பட்டி அடைத்தும் பயன் பெறலாம். அல்லது பச்சை சாணமாக பயிருக்கு கரைத்து விடலாம்.

இவ்வாறு பலவிதமாகப் பயன் பெற முடியும். விவசாயிகள் இது தொடர்பாக அக்கறை கொள்ளவேண்டும்.

# யாழ்ப்பாணத்தின் தங்கத் திரவம்

***யாழ்ப்பாண பூகற்ப அமைப்பு இந்நாட்டின் பிற்பகுதிகளைக் காட்டிலும் மாறுபட்டது. சூழவுள்ள கடலின் தாக்கமே இப்பிரதேசம் உருவாகக்காரணமாக உள்ளது. கடலிலிருந்து கரைக்கு ஒதுங்கிய சுண்ணப் பாறைகளே அடிப்படையாக அமைந்துள்ளன. இப்பாறைகளில் நுண்துளைகள் நீரைத் தம்முள் ஏந்தியபடி இருக்கும். யாழ்ப்பாண நிலத்தில் பெய்கின்ற மழைநீர் எல்லாம் நிலத்துக்குள் கசிந்து புகுந்து இப் பாறைகள் தம்முள் கொண்டுள்ள நுண்துளைகளில் நிரம்பியிருக்கும்.***

யாழ்ப்பாணத்தின் தங்கத் திரவமா? நீங்கள் சிந்திப்பது விளங்குகின்றது. தங்கத்திரவம் என்று குறிப்பிட்டது எமது நன்னீரைத் தான். நன்னீர் காலப்போக்கில் ஏன் விரைவில் தங்கத்தின் பெறுமதிக்கு நிகராக மாறப்போவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அண்மையில் வெளியான சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதற்கு எச்சரிக்கை மணி அடிக்கின்றது. இதே போன்ற நிலை யாழ் குடா நாட்டு மக்களும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நீர் வள வல்லோர் நன்கு அறிந்திருந்தனர். 1964 ஆம் ஆண்டு இலங்கை வந்த இஸ்ரேலிய நீரியல் நிபுணர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்ததை யாவரும் அறிந்ததே. இந்தக் காலப்பகுதியில் யாழ் நகர மண்டபத்தில் கூடிய பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இவர்களால் யாழ்ப்பாணம் விரைவில் ஒரு பாலைவனமாக மாறும் என்ற கருத்தும் பரிமாறப் பட்டது. இக்கருத்தானது அக்காலத்தில் வெளிவந்த செய்தித்தாள்கள் அனைத்திற்கும் ஒரு விருந்தாக அமைந்தது. மட்டுமல்லாமல் வாசித்த எல்லோர் நெஞ்சத் தையும் அதிர்ச்சியடையச் செய்ததில் தவறில்லை.

யாழ் குடாநாட்டு மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்த போதிலும் வேறு பல இன்னோரன்ன தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். இவர்கள் வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமானதொன்றாக அமைகின்றது என்றால் மிகையாகாது.

குடா நாட்டில் ஜீவநதிகள் இல்லை. நீரைத் தன்னகத்தே கொண்ட ஆறுகளும் இல்லை. குளங்களும் இல்லை. இவை இவ்வாறிருக்க தமது தேவைகளை பூர்த்தி செய்ய எதனை நம்பி வாழ்கிறார்கள்?

யாழ்ப்பாண பூகற்ப அமைப்பு இந் நாட்டின் பிற்பகுதிகளைக் காட்டிலும் மாறுபட்டது. சூழவுள்ள கடலின் தாக்கமே இப்பிரதேசம் உருவாகக் காரணமாக உள்ளது. கடலிலிருந்து கரைக்கு ஒதுங்கிய சுண்ணப் பாறைகளே அடிப்படையாக அமைந்துள்ளன. இப் பாறைகளில் நுண்துளைகள் நீரைத் தம்முள் ஏந்தியபடி இருக்கும். யாழ்ப்பாண நிலத்தில் பெய்கின்ற மழைநீர் எல்லாம் நிலத்துக்குள் கசிந்து புகுந்து இப் பாறைகள் தம்முள் கொண்டுள்ள நுண்துளைகளில் நிரம்பியிருக்கும்.

மழை வளியூடாகப் பெய்யும் போது தன்னகத்தே கொண்டுள்ள காபனீரொட்சைட்டுடன் தாக்கமுற்று காபோனிக் அமிலமாகிறது. இவ்வமிலம் சுண்ணப் பாறைகளின் கல்சியம் காபனேற்றைக் கரைத்து விடுகின்றது.

கரையாத கல்சியம் காபனேற் கரையும் கல்சியம் இரு காபனேற்றாக மாற்றம் அடைகிறது. சுண்ணப் பாறைகள் கரைந்து நிலநீரை வன்னீராக மாற்றுகின்றது. பாறையும் கரையப்பட்டு பெரும் பள்ளங்களை உருவாக்குகின்றது. புத்தூர் நிலாவரை குன்று, மானிப்பாய் இடிகுண்டுக் கிணறு, குரும்பசிட்டி பேய்க் கிணறு போன்றவற்றை இவற்றிற்கு உதாரணமாக கூறலாம்.



சுண்ணப் பாறைகளில் தேங்கி நிற்கும் நீர் நிலத்திற்கு அடியிலேயே இருக்கும். நில அடி நீர் அல்லது நில நீர் என்றே சுருக்கமாக அழைப்பர். நன்னீரின் அடர்த்தி உவர் நீரைக் காட்டிலும் குறைவாக இருப்பதால் மேல் மட்டத்தில் இருக்கின்றது. நாம் கிணறுகள் மூலம் இந் நில நீரை எமது தேவைகளுக்கு எடுக்கின்றோம். அந் நாட்களில் நாம் கிணறுகளிலிருந்து நீரைப் பெற துலாக்களையும், கப்பிகளையும் பயன்படுத்தி வந்தோம். எனினும் வளர்ந்துவரும் நவீன தொழில் நுட்பம் காரணமாக நீரைப் பெற நீர் இறைப்பு எந்திரங்களை பயன் படுத்துபவர்கள் ஆகிவிட்டோம். எந்திரங்கள் இரக்கமின்றி நீரை வெளிக்கொண்டு வந்ததால் நன்னீர் எடுபட உவர்நீர் வெளிவர ஆரம்பித்தது. நீரின் தன்மையே பாதிப்பிற்குள்ளாகி உவர் நீராக வெளிவர ஆரம்பித்தது. இம் மாற்றம் முதலில் தனது கொடூரத்தை யாழ்ப்பாண குடா நாட்டைச் சூழவுள்ள சிறிய தீவுகளின் மக்கள் மீதுகாட்டியதும் இதன் விளைவாக பெரும்பாலான மக்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர்.

குடாநாடு கடல் நீர் உட்புகுவதால் பாதிப்பிற் குள்ளாகும் எனக் கருதி நீர்ப்பாசனத் திணைக்களம் கடல் நீர் நிலத்திற்குள் உட்புகாவண்ணம் ஏற்பாடுகள் பலவற்றைச் செய்தது. இந்த வகையில் உருவாக்கப்பட்டது தான் "யாழ் கடல்நீரேரித் திட்டம்" அதாவது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடல்நீரேரிகளை நன்னீராக்குவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தின் தரைக்கீழ் நீர் வளத்தைப் பேணுதல். இத்திட்டம் முக்கியமாக இரண்டு கட்டமைப்புக்களை செயல்திட்டமாகக் கொண்டிருக்கிறது.

1. மேற்குறித்த கடல்நீரேரிகளினுள் கடல்நீர் பருவத்திற்கு பருவம் உட்புகுவதைத் தடுக்கும் அணைகளை அமைத்தல்.
2. அதன் பின் அக் கடல்நீரேரிகளினுள் நன்னீரைத் தேக்கல்.

இது ஒரு நல்ல திட்டமாக அமைந்த போதிலும் தொடர்ந்து செயற்படுத்த முடியவில்லை. காரணம் பல இன்னோரன்ன பிரச்சினைகள். கடல் நீர் எவ்வித தங்குதடையின்றி விளை நிலம் எங்கும் பரவத் தொடங்கியது. இதனால் கோப்பாய் தெற்கு உவர் நிலமாக மாறியது. விளைநிலங்கள் தரிசு நிலங்களாயின. நன்னீர் கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாகின்றன.

மனித சிறுநீரில் 1லீற்றரிற்கு 7 கிராம் உப்பு இருக்கிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு நாளொன்றிற்கு 1.5 லீற்றர் சிறுநீர் வெளிப்படுகிறது. ஆகவே ஒரு மனிதனால் ஒரு நாளுக்கு சுமார் 10 கிராம் உப்பு வெளிப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களின் சிறுநீர் கழிக்கும் பழக்கத்தை இங்கு குறிப்பிடவேண்டும். யாரும் கழிவிடத்தில் சிறுநீர் கழிப்பதில்லை. வெளியிடத்தில் வெறும் தரையில் மரக் கன்றுகளைச் சுற்றி சிறுநீர் கழிக்கின்றனர். ஆகவே சிறுநீர் அனைத்தும் நிலத்தில் படிகின்றது. யாழ்ப்பாணத்தில் ஆண்டில் 300 நாட்கள் மழை பெய்வதில்லை. ஆகவே அண்ணளவாக கோடை முழுவதும் 300 கிராம் உப்பு ஒருவரால் நிலத்தில் படிகிறது. சுமார் ஒரு லட்சம் மக்களைக் கொண்ட யாழ்ப்பாணநகரில் எத்தனை கிலோக்கிராம் உப்பு நிலத்தில் படியும். இவை அனைத்தும் மழை நீரினால் கழுவப்பட்டு நிலத்திற்கு அடியில் நன்னீரோடு சேர்ந்து செல்கின்றன. அல்லது வெள்ள நீரோடு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதன் காரணமாக மாரி காலத்தில் சில கிணறுகள் மட்டும் உவர்த்தன்மை அடைகின்றன.

ஆகவே நன்னீர்- மழைநீர் சேமிக்கும் முறையை ஒவ்வொரு வீட்டாரும் தத்தமது வீடுகளில் ஏற்படுத்தி நன்னீரை எமது கை எட்டும் தூரத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஓர் அவசியமானதும் அவசரமானதுமான நிர்ப்பந்தத்திற்கு உட்படுகின்றனர்.

ஒவ்வொரு வீட்டிலும் சமையல் அறையில் கூரை வழியாக பாயும் மழை நீரை சேகரிக்க நிலத்தடியில் நீர்த் தொட்டிகளை கட்டிவைத்துக் கொள்ளலாம். சமைக்கத் தேவைப்படும் நீரை நிலத்தடித் தொட்டிகளிலிருந்து அவ்வப்போது பெற்றுக்கொள்ளலாம். நீண்ட நாட்களுக்கு சேமித்துவைப்பதால் நுண்ணங்கிகளின் தாக்கம் இருக்கும். ஆனால் நீரை கொதிக்கவைக்கும் போது இவை இறந்துவிடும்.

இன்னுமொரு வளத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதுதான் நன்னீர் ஊற்றுக்கள். மழை பெய்தவுடன் நீர் நிலத்தினூடாகக் கசிந்து உட்புகுந்து சுண்ணாம்புப் பாறைகளில் உள்ள நுண்துளைகளில் நுழைகின்றது. இவையனைத்தும் நிறைந்தவுடன் மேலதிக நீர் நிலத்திற்கு வெளியே அனுப்பப்படுகின்றது. இப்படி வெளியேறும் நீரை ஊற்று என்கிறோம். இப்படி வெளியேறும் நன்னீரை பயனுள்ள விதத்தில் எடுத்து மக்களின் குடிநீர்த் தேவைகளை நிவர்த்தி செய்யலாம்.

நன்னீர் சேமிப்புத் திட்டத்தில் குளங்கள் பாதுகாக்கப்படல் என்பது முக்கிய விடயமாகும். இக் குளங்களில் தேங்கி நிற்கும் நீர் கால் நடைகளுக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கும் பயன்படும். அத்துடன் நீர் நிலவடியில் சென்று நன்னீர் நில மட்டம் உயர வழிவகுக்கும்.

நன்றி புதியபூமி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்
## ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான நேர்முகத்தேர்வு

**பயிற்சிக் காலக் கொடுப்பனவு:- 4000/=**
(பயிற்சிக் காலத்தில் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்)

தமிழீழப் போக்குவரவுக் கழக ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை 06.11.2005 ஆம் நாள் ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழகம் நடுவப் பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங் களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

○ *(பயிற்சி நிறைவடைந்ததும் தரத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்)*

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.13146)



## திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம்-கிளிநொச்சி
## பதவி வெற்றிடம் கோரல்

திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தினால் கீழ் வரும் பதவிகளிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பதவி:- களஞ்சிய முகாமையாளர்

சம்பளத் திட்ட இலக்கம் 208/14
சம்பள அளவுத்திட்டம் 5000–6450
70X10–75X10

### தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி நிலையில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் துறைசார்ந்த பதவி நிலையில் (04) நான்கு வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அல்லது க. பொ. த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அல்லது க. பொ. த சாதாரணதரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது எண்கனிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது தூய கணிதத்துடன் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

### 02. பதவி:-பாரஊர்திச் சாரதி

சம்பளத் திட்ட இலக்கம் 312/14
சம்பள அளவுத்திட்டம் 5000–6450
70X10–75X10

### தகைமைகள்:-

ஐந்தாம் வகுப்புக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து/பாரஊர்தி/ நான்குசக்கர உழவு இயந்திரச் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

### 03. பதவி:-இரு சில்லு உழவு இயந்திரச் சாரதி

சம்பளத் திட்ட இலக்கம் 312/15
சம்பள அளவுத்திட்டம் 4750–6100
65X10–70X10

### தகைமைகள்:-

ஐந்தாம் வகுப்புக் கல்விச் சான்றிதழுடன் கார்ச்சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஒருவருடத்துக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

### 04. பதவி-நடத்துனர் (பாரஊர்திக் கிளினர்)

சம்பளத் திட்ட இலக்கம் 314/16
சம்பள அளவுத்திட்டம் 4500–5750
60X10–65X10

### தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்துடன் ஒருவருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐந்தாம் வகுப்புக் கல்விச் சான்றிதழுடன் நல்ல தேக ஆரோக்கிய முள்ளவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: – (மேற்கோரப்பட்டுள்ள பதவிகளிற்கான சம்பளத்திட்டத்துடன் ஏனைய படிகளும் வழங்கப்படும்)

மேற்படி பதவிகளிற்கான விண்ணப்பங்கள் யாவும் 20.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடிய தாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

தலைவர்
திருவையாறு படித்த வாலிபர் திட்ட
விவசாய உற்பத்தி நுகர்சிக் கூட்டுறவுச் சங்கம்
திருவையாறு,
கிளிநொச்சி.

(சி.13145)


(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சத்து 60ஆயிரத்து 33 வாக்குகளைப் பெற்று 3 நடாளுமன்ற உறுப்பினர்களைத் தனதாக்கிக்கொண்டது. ஒற்றுமைக் குறைவுக்கும் ஊக்கமில்லாமைக்கும் திருகோணமலைத் தொகுதி ஓர் எடுத்துக்காட்டாய் தன்னை வெளிக்காட்டியது. 1952 ஆம் ஆண்டிலிருந்து பெற்று வந்த தமிழரசுக் கட்சிசார்புடைய பிரதிநிதித்துவத்தை திருகோணமலை இழந்தது. இம் மாவட்டத்தில் தமிழ்கள் 78 ஆயிரமாகவும் முஸ்லிம்கள் 66 ஆயிரமாகவும் சிங்களவர் 62 ஆயிரமாகவும் உள்ளனர். இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 14 ஆயிரத்து 88 வாக்குகளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸுக்கு 3748 வாக்குகளும் ரெலோ இயக்கத்திற்கு 498 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. தமிழர்கள் ஓரணியில் நின்று தமிழர் தமது அரசியல் பலத்தைக் காட்ட வேண்டிய உற்சாகத்தை இத் தேர்தல் அவர்களுக்கு வழங்கவில்லை. உற்சாகமாக வாக்குகள் பெற்ற அரசு தமிழர் பிரச்சினைக்கு முடிவைக் கண்டதா? இல்லையே.

சமாதானம் என்ற பெயரால் வாங்கப்பட்ட வாக்குகள் சமாதான வாழ்வே வேண்டுமென்று கோரி நின்ற தமிழ்மக்களின் வாக்குகள் செல்லாக் காசாக்கப்பட்டன.

வோட்டுப் பலத்தை விட ஆயுத பலத்தில் உறுதியாயிருந்த விடுதலைப்புலிகளின் ஆயுதப் போர் கட்டுநாயக்க விமானத்தளத்தை உலுக்கியெடுத்த சந்தர்ப்பத்தில் மீண்டும் 2001இல் மற்றுமொரு பொதுத்தேர்தல் வந்தது. 2001-டிசம்பர் மாதம் நடைபெற்ற இப் பொதுத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணி 8 இலட்சத்து 15 ஆயிரத்து 353 வாக்குகள் கிடைத்து 15 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. ஐக்கிய தேசிய கட்சி 40இலட்சத்து 86ஆயிரத்து 26 வாக்குகள் பெற்று ரணில்விக்கிரமசிங்க 14 ஆவது பிரதமமந்திரியாக பதவியேற்றார்.

புதிய பிரதமர் விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்து கொண்டார். சமாதானம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆறு சுற்றுக்களாக சுழன்று வந்ததன் பெறுபேறாய் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முக்கிய அமைச்சுப் பதவிகளை பறித்து அரசின் பலத்தை, தனது சனாதிபதி பலத்தால் குறைத்துக்கொண்டார் சந்திரிகா.

சமாதானம் வேண்டி நின்ற 8இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் வாக்குகளும், போர் ஓய்வு ஏற்பட காரணமான அரசியல் தலமையை உருவாக்கிய 40 இலட்சம் பெரும்பான்மை மக்களின் வாக்குகளும் சனாதிபதியால் செல்லாக்காசாக்கப்பட்டன. மக்களின் வரிப்பணத்திலிருந்து பல கோடி ரூபா செலவழிக்கப்பட்டு நடாத்தப்பட்ட தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகள் மதிப்பிழக்கச் செய்யப்பட்டன. மூன்று வருடங்களுக்கு ஆட்சியைக் கவிழ்க்க மாட்டேன் என்று உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவாதம் வழங்கிய சனாதிபதி அக்காலக் கெடுவுக்கு முன்னரேயே ரணிலின் ஆட்சி கவிழக் காரணமானார். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக தடையற்ற பயணங்கள் செய்ய மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. பொருளாதாரத் தடைநீக்கப்பட்டது. ஓரளவான சுமூக நிலை நிலவிய நேரத்தில் 2004 இல் இன்னொரு பொதுத்தேர்தல் வந்து சேர்ந்தது.

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்மக்களின் உற்சாகமான வாக்களிப்பு நடைபெற்றதன் பின்னர் போர் ஓய்வு ஏற்பட்டிருந்த சூழலில் இத்தேர்தல் வந்திருப்பதானது தமிழ் மக்களிடையே வாக்களிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. சர்வதேசிய ரீதியாக தமிழர் போராட்டத்துக்குத் தலைமை தாங்குகின்ற விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கமாக சித்தரிக்கப்பட்டிருக்கின்ற பின்னணியில் விடுதலை புலிகளின் அரசியல் கோரிக்கையை தமிழ்மக்கள் ஏகோபித்து பிரதிபலிக்கிறார்கள் என்பதை சர்வதேசத்துக்கு உணர்த்தவேண்டிய கடப்பாடு தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலையில் இத் தேர்தலில் வாக்குப்பலத்தை காட்ட வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாக்குச் சாவடிகள் அமைக்காத போதிலும் அதனை அண்டிய பகுதிகளில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளைப் பயன்படுத்துவது என்ற முடிவுடன் தமிழரின் வாக்குப் பலத்தை வழிப்படுத்தினர். தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆனந்த சங்கரி முரண்பட்டிருந்த காரணத்தினால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமிழரசுக்கட்சி என்ற பேரில் வடக்குக் கிழக்கில் போட்டியிட்டு 6 33 654 வாக்குகளைப்பெற்று இருபத்திரண்டு பிரதிநிதிகளைத் தமதாக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகமடுல்ல, (அம்பாறை) ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் அழிக்கப்பட்ட 10 இலட்சத்து 55 ஆயிரத்து 699 வாக்குகளில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு 1 இலட்சத்து 42 ஆயிரத்து 800 வாக்குகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 75742 வாக்குகளும் கிடைத்துள்ளன. கிடைத்த வாக்குகளில் இருபத்திரண்டு பிரதிநிதிகளும் அண்ணளவாய் அறுபது சதவீத வாக்குகளைப்பெற்றிருந்தனர்.

இந்த அறுபது சதவீதமான வாக்காளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் அரசியல் தலைமையினர் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்மக்களுக்கான தாயகக்கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி நிற்கின்றனர். உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்று கோருகின்றனர். குறைந்தபட்சம் சமஷ்டி முறையிலாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு தாருங்கள் என்று அழுத்தி நிற்கின்றனர். ஆனால் நடப்பது என்ன? சிங்களத்தலைமைகள் அதிகாரத்தைப் பங்குபோடுவதில் தமக்கிடையே மும்முரமாய்ச் செயற்படுகின்றனர். தமிழர் பிரச்சினைத்தீர்வுக்கு உருப்படியான திட்டம் எதுவும் கொண்டிருக்காத அவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இனவாதப் போக்கில் தமது பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளனர். பிரதான இரு வேட்பாளர்களும் தத்தம் வெற்றிக்காக பல்வேறு வகையான வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

ரணில் சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் நாடாளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அவருக்கு ஒத்துழைக்க மறுக்கும். ராஜபக்ஷ சனாதிபதியானால் நாடாளுமன்றத்தில் ஐ.தே.க ஒத்துழைப்பு வழங்க மறுக்கும். ஆனால் தெரிவுசெய்யப்படுபவர் சனாதிபதியாக அதிகாரம் செலுத்துவார். தமிழர் பிரச்சினை தீர்வெதுவும் காட்டாமல் இழுபட்டுச் செல்லும். அதாவது ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் வாக்காளரின் வாக்குகள் செல்லாக் காசாக்கப்பட்டுவிடும் என்பதே உண்மையாகும். இந்த நிலையில் தமிழ்மக்கள் யாருக்கு வாக்களிப்பது ஏன் வாக்களிக்க வேண்டும்? சரி, தமிழ் மக்கள் வாக்குகளைப் பெறாமல் ஒருவர் சனாதிபதியாகிவிட்டால் கூட அவர் அந்த மக்களின் மனித உரிமைக்கோட்பாடுகளை மறுக்க வேண்டும் என்று நியதியுண்டா?

வடக்குக் கிழக்குப் பகுதி தமிழ் பேசும் வாக்காளர்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் பதவிக்கு வருபவர் தம்மை இயக்குகின்ற அரசியல் பின்னணியிலேயே இனப்பிரச்சினையை கையாள்வர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பதே உண்மையாகும். .வாக்களித்து வாக்களித்து, ஒப்பந்தங்கள் எழுதி எழுதி பேச்சுவார்த்தை நடத்தி, நடத்தி சிங்களத்தலைமைகளிடமிருந்து தமிழ் மக்கள் அனுபவங்களை பெற்றுள்ளனர். கடந்த மூன்றரை வருடத்திற்கு மேற்பட்டபோர் ஓய்வுக்காலத்திலும் என்ன நடக்கிறது என்பதையும் கண்டுவிட்டனர். அவர்கள் தமக்கான பாதையை தெளிவாக்கிய நிலையில் சனாதிபதியாக யார் வந்தால்தான் என்ன?

தமிழ் மக்கள் வாக்களித்து அரசியலில் பங்கெடுத்தனர். ஆனால் அவர்களின் வாக்குகள் செல்லாக்காசாக்கப்பட்டன. அவர்கள் வாக்குகள் மீண்டும் மீண்டும் செல்லாக்காசாக்கப்பட வேண்டுமா?

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




பாவலனே!
வரும் கால அரசியல் நிலவரம் பற்றி உங்கள் கருத்து என்ன?

மு.றஜீற்,
வருவாய்ப்பகுதி,

கலவரமாக இருக்கும்!

பாவலா!
புலிகளை அரசு ஏன் பயங்கரவாதி எனக் கூறுது?

மு.றஜீற்,
புளியங்குளம்.

நியாயம் கேட்போர் அரசுக்கு பயத்தை ஏற்படுத்தவே செய்வர் அதனால் தான்...!

பாவலா!
கொன்றால் பாவம் தின்றால் போகும் எனச் சொல்வது ஏன்?

மு.கடலவன்,
வருவாய்ப்பகுதி.

அநியாயத் திற்கும் நியாயம் கற்பிக்க.., அவ்வளவுதான்.

பாவலா!
தப்புச் செய்பவரை தட்டிக் கேட்கும் போது தட்டிக் கேட்பவரை தப்பாக நினைக்கிறார்கள் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

கு.ரகு,
புளியங்குளம்.

தப்புச் செய்வோரை ஊக்குவிப்பவர்கள் என்று...!

பாவலா!
மனதுக்குள் ஒன்றை வைத்துக்கொண்டு அதனைப் பேசாது வெளியே வேறு ஒன்றையும் பேசுபவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?.

மு.றஜீற்,
வருவாய்ப்பகுதி,

உண்மையைச் சொல்வதால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்தவர்கள்.

பாவலா!
வரும் தேர்தலில் எம் நாட்டுப்பிரச்சினை எவ்வாறு முடியப் போகிறது என்று எமது தேசப்பற்று உள்ள உள்ளங்களிற்கு தெரியப்படுத்த முடியுமா?

சுகந்தி,
புளியங்குளம்.

வாக்காளரும் வேட்பாளரும் சேந்து எமது பிரச்சினையை நியாயமாகத் தீர்க்கும் பொறுப்பை போராளிகளை எடுத்துக்கொண்டு செய்யப் போகிறார்கள்.

பாவலரே!
என்ன A-9 வீதியில் என்னவோ ஒன்றை உற்றுப்பார்த்து இறுகிய முகத்துடன் நின்றீரே எ....தை?

அ.மதனகுமாரன்,
கிளிநொச்சி.

வெயிலில் இளகிய தார் மேடும் பள்ளமுமாக இருப்பதைப் பார்த்து.

பாவலா!
என்ன சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கு முன்னாலயே ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் ஒவ்வொன்றைப் பேசுகிறார்களே. ஆனால் தமிழர்கள் விடயத்தில் மட்டும் ஒருமித்து கோசம் போடுகிறார்களே. இவர்களை எவ்வாறு புரிந்து கொள்வது.?

சு.அ.மதன்,
கிளிநொச்சி,

தேசிய வாதம் பிரிக்கிறது. பேரினவாதம் இணைகின்றது.

பாவலா!
ஓர் மனிதன் தனது வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் தாக்கப்பட்டிருக்கும் போது அத்தாக்கத்தை மீண்டும் மெருகூட்டி தாக்குபவர்கள் பற்றி என்ன கூறுகிறீர்?

அகிலன்,
வவுனியா.

பனையால் விழுந்தவனை ஏறி மிதிக்கும் மாடுகள்...!

பாவலா!
A-9 பாதையில் செல்லும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டு பகுதிக்கு முன்பும் அல்லது சற்றுப் பின்பும் வாகனங்களின் மின்குமிழ்களை திடீர் என ஒளிரவிட்டு மறுவாகனத்திற்குக் காட்டும் சாரதிகள் பற்றி என்ன கூறுகிறீர்?

கு.அகிலன்,
புளியங்குளம்.

'பார்த்த' சாரதிகள் பார்க்காத சாரதிகளுக்குக் காட்டும் நல்லெண்ண சமிக்ஞை அது...!

பாவலா!
தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை அமைத்து அதற்கு சிங்களப் பெயரை அரசு வைக்கிறது. இதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

மு.றஜீற்,
வருவாய்ப்பகுதி,

ஆக்கிரமிப்பாளரின் நோக்கமே அது தானே...!




என்னடாப்பா ஓடுப்பட்டுத் திரியிறாய் ஒருடத்தில நில்லன்.

விளையாடாத பின்நேரம் சனம் வருதப்பா லண்டனால...

அ....ஆராக்கள்.

அக்கா முடிச்ச அத்தான்ர தமக்கையின்ர புருசன்ர தங்கைக்காறியும் பிள்ளையளும் வருகினம்.

பிறகென்ன வெளியில நிண்டு வருகின மெண்டா உன்னட்டயோ... இல்லப் போற வழியில பாக்க வருகினயோ. அவை கொக்குவிலுக்கு தாயட்ட நேர போயிற்று வன்னியப் பாக்க வருகினம். வந்தா எங்கட வீட்டதான் ரெண்டு நாளைக்கு நிப்பினம்.

அடட... அதுதான் கட்டில் மெத்தையெல்லாம் கொண்டு போறியே....

ம்..ம் மனிசி நெடுகச் சொன்னது ஒரு கட்டில் வேணுமெண்டு. ஒருமாரித் தாக்காட்டி வந்தன். இப்ப வெளியில இருந்து வாறதுகள் கீழ படுக்க விடுறது சரியில்ல. அவை வெளியில போய்க் கனகாலமே. பின்ன, பிள்ளை குட்டியளெல்லாம் அங்கயேதான் பிறந்தது. அதுகளுக்கு தமிழ் பேச வருமோ தெரியா. முழுக்க இங்கிலீசு தான்.

அப்ப உன்ர பாடு ஒரு மொழிபெயர்ப்பாளரும் தேவை போல... என்ன போனடிக்குது கேள்....

..........

என்னவாம்....ஆர்?

அவை லீவு முடிஞ்சுதாம். உடன போகப்போகினமாம். தேத்தண்ணி மட்டுங் காணுமாம். வருகினமாம்....

சரி...இந்தச் சாட்டில மனிசியின்ர ஆசையெண்டாலும் சரிவந்துதே.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 144



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் – 144**

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 143



**எஸ்.ஆர்.எஸ்,**
**கிளி/செந்தூரன் களஞ்சியம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*அமெரிக்கா பிரிட்டனிடம் அடிமையாகா*
*உன்நிலையை நீ நிறுவு-எம் சுயநிர்ணய*
*உரிமையை அங்கீகரி, யூனியனே!*
*தேச வீரர் மீதான தடையை எடு!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சிறுவனின் விரிந்த கண்களின் ஏக்கம்*
*யூனியன் செய்துவிட்ட தாக்கம்*
*பெல்ஜியப் பெருந்திரளில் இவனுமொரு ஆக்கம்*
*நாளை வெல்லும் இவன் நோக்கம்.*

மலரன்னை,
திருநெல்வேலி.

*ஐரோப்பிய யூனியனே! நீயுமா*
*புறூட்டஸ் ஆகிப் போனாய்*
*யூனியனின் மனிதமும்*
*சூனியமாகிப் போகுமா?*

சு.ராஜசெல்வி,
சென் திரேசா பெண்கள் கல்லூரி.

*பொங்கிடும் தமிழாய் ஈழ எழுச்சி -இன்று*
*எழுக 'தமிழாய் புலம்பெயர் உணர்வுகள்*
*எங்குமே விடுதலை தாகத்தின் குரல்*
*வியாபித்து நிற்பது ஈழத்தின் வெற்றிக்கே.*

சு.உதயா,
வள்ளிபுனம்.

*புலம் பெயர்ந்தாலும்*
*புகழ் பெற்ற தமிழினம்*
*புதுப்பரம்பரையிலும்-வீர*
*புத்தொளி தெரிகிறதே.*

செல்வி,
பரந்தன்.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு




இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி–18 | 04–11–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–260


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13213) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## இராணுவ முகாம் அகற்றப்படும் வரை மீள் குடியமரப் போவதில்லை

### புத்தூர் கிழக்கில் மக்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்படும் வரை அப்பகுதிகளில் தாம் மீளக்குடியமரப் போவதில்லை என்று அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். புத்தூர் கிழக்கிற்கு சென்ற தமிழ் தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈழவேந்தன், சிவ னேசன்,சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரிடமே அப்பகுதி மக்கள் இதனைத் தெரிவித் துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இராணுவத்தினரது அடாவடித்தனங்களால் புத்தூர் கிழக்கில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களை அங்குள்ள சனசமூக நிலையம் ஒன்றில்வைத்து நேற்று முன்தினம் சந்தித்த சமயமே அவர்கள் இதனைத் தெரி வித்தனர்.

புத்தூர் கிழக்கு இராணுவ முகாமில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிப்படைந்த பாடசாலைகளின் நிர்மாணப் பணிகளுக்கு படையினர் தடை!

### கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமில் கெடுபிடி

(திருமலை)

மூதூர்கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உப்பூறல், சீனன்வெளி ஆகிய கிராமங்களில் கடற்கோளினால் பாதிக் கப்பட்ட இரு பாடசாலைகளுக்குப் பதிலாக நெதர்லாந்து நொவிப்- ஒக்ஸ்பாக் அமைப்பின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருக்கும் புதிய பாடசாலைகளுக்கு அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கு பற்றச்சென்ற எடியு கேஷன் இன்ரநஷனல் இலங்கைப்பிரிவின் ஐந்து சிங்கள அதிகாரிகள் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் ஊடாகச் செல்வதற்கு படை யினர் தடைவிதித்தனர். சிங்களவர்கள் விடு தலைப்புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதியில்லை என்று முதலில் கூறிய படையினர் சிங்களஅதிகாரிகளின் வேண்டு கோளைத் தொடர்ந்து நிலவரத்தை கொழும்பு பாதுகாப்புபடைத் தலைமையகத்துக்கு அறி வித்தனர். அங்கிருந்து கிடைத்த தகவலை

(IV ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களவரின் நம்பிக்கைக்குரிய வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ!

### மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் கருத்துக் கணிப்பு

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் சிங்களவர்களின் நம்பிக்கைக்குரிய வேட்பாளராக சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ இருப்பதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.**

கொழும்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தினர் நடாத்திய தேர்தலுக்கு முன்னைய கருத்துக்கணிப்பிலேயே இது தெரியவந்துள்ளது. இக்கருத்துக் கணிப்பின் விபரம் வருமாறு;

நாட்டின் 32.3 வீதமான வாக்காளர், வாழ்க்கைச் செலவீனத் தைக் குறைக்கின்ற வேட்பாளரையே ஆதரிப்பதாகத் தெரிவித் துள்ளனர். 25.2 வீதமானோர் இனப்பிரச்சினைக்கான தீர்வை பிரதான பிரச்சினையாக முன்வைத்துள்ளனர்.

முஸ்லிம்களும் (41.9வீதம்) சிங்களவர்களும், (33.9 வீதம்) வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பை பிரதான பிரச்சினையாகக் கருதுகின்றனர்.

அதேநேரத்தில் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் இனப்பிரச்சினையையே பிரதான பிரச்சினையாக கருதுவதாகத் தெரிவித்துள்ளனர். வாக்காளர்களில் 15.9 வீதமானோர் கட்சி யின் அடிப்படையில் வேட்பாளரை(IV ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மற்றும் மன்னார் கடல் பகுதிகளில் கடற்படையின் நடவடிக்கைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படையினரின் பாதுகாப்பு படகு ரோந்துகள் அதிகரிக் கப்பட்டுள்ளதாக வடபகுதி சிறிலங்கா கடற்படைத்தலைமை யகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து படகு மூலம் ஹெரோயின் போதைப்பொருள் கொண்டுவருவது அதிகரித்திருப்பதனால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களில் கடற்படை,பொலிசார் மற்றும் கலால் திணைக்களத்தினால் பத்துக் (IV ஆம் பக்கம் பார்க்க)

## சின்ன ஊறணியில் தாக்குதல் 4பொலிசார் உட்பட6 பேர் படுகாயம்!

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசாரின்பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி.யினரின் தினமுரசு பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி மீது மட்டக்களப்பு - திருமலை வீதியில் வைத்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஈ.பி.டி.பி தேசவிரோதி ஒருவர், நான்கு சிறிலங்கா பொலிசார் மற்றும் முச்சக்கர வண்டியின் ஓட்டுநர் ஆகியோர் படுகாயமடைந் துள்ளனர்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரச்சாரங்களுக்கு பொதுச்சொத்துக்கள் ஐ.ம.சு. முன்னணியால் முற்றுமுழுதாகப் பயன்பாடு

### -"ட்ரான்பெரன்சி இன்டர் நஷனல்" பலத்த கண்டனம்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களுக் காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியால் பொதுச்சொத்துக்கள் துஷ்பிர யோகம் செய்யப்படும் சம்பவங்கள் குறித்து ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் ஊடக மாநாடு ஒன்று நடைபெற்றது.

ஏற்கனவே பொதுச்சொத்துக்கள் துஷ்பிர யோகம் தொடர்பில் அமைச்சுக்களின் செயலர் களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ட்ரான்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தலை வலியுறுத்தி சத்தியாக்கிரகம்

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் நீதியானதும், நியாயமானதாகவும் இடம்பெறவேண்டும் என வலியுறுத்தி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் சத்தியாக்கிரகப்போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளது. கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் பிற்பகல் 1-30 முதல் 3.30 வரை இந்தப்போராட்டம் இடம்பெற்றது. இதன்போது வெகுஜன அமைப்பு களின் பிரதிநிதிகள் பலர் உட்பட ஏராளமானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளைப்பாதுகாத்தலும், தேர்தல் ஆணையாளரின் சட்ட அதிகாரத்திற்கும் நீதிமன்றம் மீது அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும்,மற்றும் பிரஜைகளின் வாக்களிப்பு உரிமைகளை நீதி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் தேர்தல் குறித்து தே.ஆணையாளரின் பத்து யோசனைகள்

(கொழும்பு)

வடக்குகிழக்கில் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் பத்து யோசனைகளை தேர்தல் ஆணையாளர் முன்வைத்துள்ளார்.

கட்சித் தலைவர்களுடன் நேற்று நடை பெற்ற கலந்தாலோசனையின் போது இந்த யோசனைகளை அவர் முன்வைத்துள்ளார்.

இதனையடுத்து இதனை கட்சித் தலைவர் கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

வடக்குகிழக்கில் அமைக்கப்படும் கொத் தணி வாக்குச்சாவடிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லை யில் இருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதி யினுள் உள்ள 500 மீற்றர் தூரத்தில் அமைக் கப்படும்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்படிக்கையின் பின் இராணுவம் பலமடைந்துள்ளது

### பலாலியில் ரணில்விக்கிரமசிங்க

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இராணுவத்தின் ஒவ்வொரு துறைக்கும் பல உதவிகள் கிடைப்பதால் இராணுவம் பல மடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க யாழ். பலாலியில் இரா ணுவத்தினர் மத்தியில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜ யம் செய்த ரணில்விக்கிரமசிங்க பலாலி

(IV ஆம் பக்கம் பார்க்க)



# வரிவிளம்பரம்

## காணி விற்பனைக்கு

பரவிப்பாஞ்சான் 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சில்லரை ப.நோ.கூ.ச தில் இருந்து 50 யார் தொலைவில் அமைந்துள்ள 4 பரப்பு 3 பேச் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:- இராமசாமி புவனேந்திரன் J.P,கோபிகடை, கரடிப் போக்குச்சந்தி, கிளிநொச்சி. (6907)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி சார்ந்த
**Hardware Technology**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு:- வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி.


# திருமலையில் பிரச்சினைகளைக் கையாள பொது அமைப்புக்களின் ஒன்றியம் அமைப்பு

(திருமலை)

திருகோணமலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஆராய பொது அமைப்புக்களின் ஒன்றியம் என்றஅமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் துரைரட்ணசிங்கம் ஆகியோரும், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரும் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன் போது இந்த அமைப்பு உருவாக்கம் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் தளபதி கேணல் சொர்ணத்துடன் திருமலை மாவட்ட படைத்தளபதி வசந்தன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோரும், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுசார்பில் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் உட்பட 15 பேரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போதுபொங்கு தமிழ் நிகழ்வை சிறப்புற நடாத்தி முடித்தமைக்காக ஏற்பாட்டுக் குழுவினருக்கு தனது நன்றியையும், பாராட்டுக்களையும் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சந்திப்பில் திருமலையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஆராயும் முகமாக "பொது அமைப்புக்களின் ஒன்றியம்" என்ற அமைப்பும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 10 உறுப்பினர்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# மக்களின் அடிப்படை உரிமை மீறல் குறித்து புத்தூர் கிழக்கில் ம.உ.ஆணைக்குழு விசாரணை!

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற அசம்பாவிதங்களின்போது அப்பகுதி மக்கள் எதிர்கொண்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

அந்த அடிப்படையில் முதற் கட்டவிசாரணைகள் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளன.

அந்த வகையில் சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்- மாவட்ட அதிகாரி ரோகித பிரியதர்சன தலைமையிலான குழுவினர் முதற்கட்டவிசாரணைகளை நடத்தினர்.

குறிப்பாக சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களையும், இச் சம்பவத்தின் தொடர்ச்சியாக இராணுவம் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களால் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பவம் இடம் பெற்ற பிரதேசகிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை கோப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து சந்தித்துக்கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சிறிலங்காப்படையினரின் அராஜகங்கள் பொது மக்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும் பொது மக்களது இயல்பு வாழ்வை உறுதிப்படுத்தவும் குடியிருப்புக்கள் மத்தியிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்றும் அவர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (37)



கிளிநொச்சி பிரதேசசபை அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாக உள்ள கழிவு நீர் கால்வாயில் கழிவு நீர் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதனால் வியாபாரநிலையத்தினர் முதல் பொதுமக்கள் வரை பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்–சோதி)


## பொதுக்கூட்டம் பிற்போடல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின். 7.11.2005 அன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. அடுத்த கூட்ட திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அ.கேதீஸ்வரன்,
தலைவர், மாவட்ட
கூட்டுறவுச்சபை, கிளிநொச்சி.

(சி.13143)

## வட–கிழக்குக் கட்டுமான தொழில்நுட்ப நிறுவனம்
**NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION**

### சாரதிகள் தேவை

**01. கன்ரர் வாகனம்**

தகைமை:- கொழும்பு மற்றும் ஏனைய இடங்களிற்கு சென்று வரக்கூடியவராகவும், சிங்கள மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. லோபெட் ரெயிலர்.**
(கனரக வாகனங்களை ஏற்றிச் செல்லும் வாகனம்)

தகைமை:- 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நேர்முகத் தேர்வு:–**

(07.11.2005) திங்கட்கிழமை அன்று காலை 8.30 முதல் 1.00 மணி வரை தங்களுக்கான நேர்முகத் தேர்வு அலுவலகப் பணிமனையில் நடைபெறும். தகுந்த ஆவணங்கள், சான்றுகளுடன் நேரடியாக பணிமனைக்குச் சமுகம் தரவும்.

மனிதவள மேலாளர்,
வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
**(NECTEC)**
கண்டிவீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி,
தொலை பேசி இல:- 021228 85917  (சி.13150)

## Correction

There is a mistake in our news paper's Job advertisement of save the children dated 27th of october 2005. our correction is here.

***Job Description.***

| | |
|---|---|
| Job Title | Partnership Development Manager-Disaster preparedness |
| Reporting to | District Manager |
| Grade & salary | "E" Rs 61,581/ month |
| Location | kilinochchi |
| Job purpose | Working with save the children team and other stakeholders to ensure emergency preparedness in place at organizational and pogramme levels. |

We published the Application should be sent on or before 03rd November 2005to. Now the date is change as 07th November 2005. We apoligize the inconvenience.

## சாவு அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்

.சாவகச்சேரி கல்லடி லேனை பிறப்பிடமாகவும் தற்போது விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பாலசிங்கம் நேற்று 03.11.2005 (வியாழக்கிழமை) காலமானார். இவர் சாரதாதேவியின் அன்புக்கணவரும், பாலமுரளி, பாலதீபன், பாலஜீவன், பாலகஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு அன்னாரின் (சாவகச்சேரி) இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6908)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம் நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

**சம்பளத்திட்டம்:~**

$\frac{4430-5530}{10X110}$ +2700.00=7,130.00+சிறப்புக்கொடுப்பனவு 2,300.00= 9,430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 05.11.2005 ஆம் நாள் சனி காலை 9.00 மணி தொடக்கம் பகல் 1.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

*** (பணியில் சிறப்பாகச் செயற்படுபவர்களுக்கு இச்சம்பளத்தினை விட மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும்.)**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.13147)

மட்டு. மக்கள் வாழ்விடங்களில் இடம்பெற்ற

# இராணுவசோதனை நடவடிக்கைக்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கடுமையான சோதனை நடவடிக்கைகளுக்குத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

தமிழ்தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பில் கூறியுள்ளதாவது:

இராணுவம் மற்றும் பொலிசார் மேற்கொண்ட இந்தக் கடும்சோதனை நடவடிக்கையானது பாரிய யுத்தநிறுத்த மீறல், அடிப்படை மனித உரிமைமீறல் நடவடிக்கை. சனாதிபதித்தேர்தல் நடைபெற உள்ள சூழ்நிலையில் இது போன்ற நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொண்டு இருப்பதை ஏற்கமுடியாது.

எமதுவிசனத்தைத் தெரிவிக்கும் வகையில் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சுக்குகடிதம்ஒன்றை அனுப்புகிறோம். இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கையால் மட்டக்களப்பு மக்களிடத்தில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாமாங்கம், ஜயந்திரபுரம், இருதயபுரம் மற்றும் ஊறணி பிரதேசமக்களை பொதுமைதானத்தில் நிற்கவைத்து சிறிலங்கா இராணுவமும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவினரும் கடும் சோதனைக்குள்ளாக்கினர்.

இராணுவச் சீருடையுடன் முகமூடி அணிந்து சோதனை நடவடிக்கைகளைச் செய்தஆயுதக் குழுவினர் 20தமிழ் இளைஞர்களையும் இராணுவத்திடம் காட்டிக் கொடுத்தனர். அவர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் ஆயுதங்களைக் கைப்பற்றியதாக சிறிலங்கா இராணுவமும் பொலிசாரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டம்



(கிளிநொச்சி)

தமிழீழ சுகாதார சேவையினரால் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் "மழைக்கால தொற்று நோய்களிலிருந்து எவ்வாறு மக்களைக் காப்பற்றுவது" என்ற தலையங்கத்தில் கருத்தரங்குகளும், வாய்ப்புற்று நோயினை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்கான ஆய்வும், சலரோக நோயாளிகளை இனம் காண்பதற்கான பரிசோதனைகளும், குருதி அமுக்க நோயினை இனங்காணலும், பற்சிகிச்சை, பல்நோய் சம்பந்தமான கண்காட்சி, வீடியோக் காட்சி என்பனவும் நடைபெற்றது.

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இச்சேவை இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் மாணவர்கள், மக்கள் எனப் பெரும்பாலானோர் பயன்பெற்றனர்.

# மகிந்தவுக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டை எவ்வாறு ஒன்றிணைப்பது என்பது குறித்து தன்னுடன் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மகிந்த சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்,முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

# அம்பாறை தமிழ் தேசிய எழுச்சி மாநாடு ஒத்திவைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் மைதானத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவிருந்த தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு சனாதிபதித் தேர்தலுக்குப் பின்பு பிறிதொரு தினத்தில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் நவம்பர் பத்தாம் திகதி முதல் 17ஆம் திகதிவரை பொதுக் கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் இவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கூட்டம் நடத்துவது தொடர்பாக அம்பாறை மாவட்டத் தமிழ் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அனுமதி வழங்க முடியாதெனத் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பு மாநகர் பாதுகாப்பு வலயமைப்பிற்குள்; பிரதான வேட்பாளர்களின் பாதுகாப்பும் உயர்வு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலுக்காக கொழும்பு மாநகர் பாதுகாப்பு வலையமைப்புக்குள் கொண்டு வரப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார். முதன்மைக் கட்சிகளின் வேட்பாளர்களுடைய பாதுகாப்பினை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினதும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும், பாதுகாப்பு ஏற்பாடுகள் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மூத்த பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவர்களது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிசாருடன், சிறப்பு அதிரடிப் படையினரும். கடமையில் ஈடுபட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். இவ்விருவருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரித்து வருவதனால் இவர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டில் ஐந்து வீதம்!

## சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு

2005 ஆம் ஆண்டில் சிறிலங்கா பொருளாதார வளர்ச்சியின் வேகமானது ஐந்து வீதமாக இருக்கலாம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலைத் தாக்கத்தை எதிர்நோக்கிய சிறிலங்கா இவ்வாறான பெருளாதார வளர்ச்சியினை எட்டியிருப்பது வெற்றிகரமான விடயம் என பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் ஏற்றுமதி 12 வீதத்தால் அதிகரித்துள்ளதெனவும் இறக்குமதி ஆறு வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறிலங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் இதனால் கொழும்பில் இருந்து செல்லும் வானூர்திகளில் ஆசனங்களைப் பதிவு செய்வதில் நெருக்கடி நிலவுவதைக்காணக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# நீதியான சனாதிபதித் தேர்தல்; சர்வதேச சமூகம் அக்கறை!

## ஜப்பானும் வலியுறுத்து

சனாதிபதித்தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துவதற்கு சர்வதேச சமூகம் பெரியளவில் கண்காணிப்புச் செலுத்தி வருவதாக சிறிலங்காவிற்கான ஜப்பானியத் தூதுவர் ஐக்கியோ சூடா கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே ஐக்கியோ சூடா இவ்வாறு கூறினார்.சமாதானம் அபிவிருத்தி நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் நீதியான் முறையில் செயற்பட வேண்டியது அவசியம் எனவும் ஜப்பானியத் தூதுவர் மேலும் கூறியுள்ளார்.

## விண்ணப்பங்கள் ஏற்பு

2006ஆம் ஆண்டில் கல்வி பொதுத் தராதர உயாதரப் பரீட்சைக்கு தனிப்பட்ட ரீதியிலான விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மாதம் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என திணைக்களத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விண்ணப்பபடிவங்களில் நகர இலக்கத்தை சரியாகக் குறிப்பிடுமாறு பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பதாரிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

2006ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (32)

# மேற்கிந்தியத்தீவு அணியுடனான முதல் டெஸ்ட்; அவுஸ்திரேலிய அணி 340 ஓட்டங்கள்



மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 340 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று பிரிஸ்பேன் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் சந்திரபோல் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீமானித்தார்.

இதற்கமைய முதலில் ஆடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது ஏழு விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் அவுஸ் அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் 149 ஓட்டங்களையும், கில்கிறிட்ஸ் 44 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஷேன் வோர்ன், பிரெட்லீ ஆட்டமிழக்காது



முறையே 31, 19 ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் கொலிமோர் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# வீடியோகான் கிண்ணம் இந்தியா வசம்





சிறிலங்கா அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியிலும் வெற்றிபெற்ற இந்திய அணி வீடியோகான் கிண்ணத்தையும் கைப்பற்றியுள்ளது.

புனேயில் நேற்று நடைபெற்ற வீடியோகான் கிண்ணத்திற்கான நான்காவது போட்டியில் சிறிலங்கா அணியை நான்கு விக்கெட்டுக்களால் வீழ்த்திய இந்திய அணி மேற்படி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் தலைவர் ராகுல் ராவிட் முதலில் களத்தடுப்புச் செய்யத் தீமானித்தார். இதற்கமைய முதலில் ஆடிய சிறிலங்கா அணி 49.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அத்தப்பத்து 100 பந்துகளை எதிர்கொண்டு 87 ஓட்டங்களையும், டில்சான் 68 பந்துகளில் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மிகவும் சிறப்பாகப் பந்து வீசிய அகக்கர் 44 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 45.4 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில்









அணியின் தலைவர் ராகுல் ராவிட் 63 ஓட்டங்களையும், சேவாக் 48 ஓட்டங்களையும், டோனி, ரெயினா ஆட்டமிழக்காது முறையே 45, 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 35 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அகக்கர் தெரிவானார்.

ஏழு போட்டிகளைக் கொண்ட இந்த ஒரு நாள் போட்டித் தொடரில் 4-0 என்ற அடிப்படையில் இந்திய அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

# எமது பகுதிகளில் தேர்தல் கண்காணிப்புக்கு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வருகை தரலாம்

## - சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேக்கு அறிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியம் எம்மீது பயணத் தடையினை விதித்திருக்கின்றது. ஆயினும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் தமது கடமைகளைச் செய்வதற்கு நாம் ஒரு போதும் தடை விதிக்க மாட்டோம் என தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வே தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள இவர்களின் கடமைகளைச் செய்வதற்கு நாம் ஒரு போதும் தடையாக இருக்க மாட்டோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எவ்வாறு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களோ அதேபோன்று எமது ஆளுகையில் உள்ள பகுதிகளிலும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த சனாதிபதித்தேர்தலின் மூலம் அவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. ஆகவே, நாம் வாக்காளர்களை வாக்களிக்குமாறு வற்புறுத்தவும் மாட்டோம். அதேவேளை தடை விதிக்கவும் மாட்டோம். கடந்த பொதுத்தேர்தலின் போது கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் வாக்காளர்களின் நன்மை கருதி போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், இம்முறை சனாதிபதித் தேர்தலின் போது இவ்வாறான வசதிகளை வழங்க மாட்டோம். வாக்காளர்கள் விரும்பினால் தமது சொந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அத்தோடு வாக்களிப்பதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லும் போதும், வாக்களித்து விட்டு திரும்பும் போதும் வழமையான விதத்தில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள குறைகள் குறித்து நோர்வே தூதுவர்தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அறிக்கை ஒன்றினையும் கையளித்துள்ளார்.

# பெரும்பான்மைப் பலத்துடன் வரவு-செலவுத்திட்டம் நிறைவேறும்

## –அரசு தரப்பு நம்பிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அரசிற்கு தெளிவான பெரும்பான்மை உள்ளமையால் வரவு- செலவுத்திட்டம் நிறைவேற்றப்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 2006 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் கூட்டம் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற போது அதில் உரையாற்றிய அமைச்சர், வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பான வாக்கெடுப்பு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு இடம்பெறவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதேவேளை அது தொடர்பிலான வாக்கெடுப்பு டிசம்பர் 22 ஆம் திகதி 6 மணிக்கு நடத்தப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மை உள்ளமையால் இந்த வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (32)

# தபால் வாக்களிப்பு நாளில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள்!

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் ஏழாம், எட்டாம் திகதிகளில் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

வாக்களிப்பு நடைபெறும் அரச நிறுவனங்களைச் சுற்றி இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் விசேட பொலிஸ் சுற்றுக் காவல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தபால் மூல வாக்களிப்பு நாட்களில் இரவில் நாடு முழுவதும் பல இடங்களில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். தேர்தல் நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் குறித்து பொலிஸ் அதிகாரிகளுக்கு கைநூலும் வழங்கப்பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கள் நடைபெறும் அரச நிறுவனங்களில் தபால் மூல வாக்களிப்பினைக்கண்காணிக்க பவ்ரல் அமைப்பைச்சேர்ந்த இருவரையும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையத்தைச்சேர்ந்த இருவரையும் நிறுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தீமானித்துள்ளார்.

அத்துடன் வேட்பாளர்களின் அதிகாரம் பெற்ற அரச நிறுவனங்களில் இரு பிரதிநிதிகளும் நிறுத்தப்படுவார்கள். தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் இரு நாட்களிலும் வாக்களிபபு நடைபெறும் நிறுவனங்களுக்கு அருகே வேட்பாளர்களின் படங்களைக்காட்சிக்கு வைத்தல், வாக்களர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

### சுனாமியால்...

அடுத்தே, சிங்கள அதிகாரிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமை நேற்றுக் காலை 11 மணியளவில் சென்றடைந்த சிங்கள அதிகாரிகள் குழு, பிற்பகல் ஒரு மணியளவில்தான் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சீனன் வெளி,உப்பூறல் கிராமங்களைச் சென்றடையக் கூடியதாக இருந்தது.

சிங்கள அதிகாரிகளுடன் இலங்கை தமிழர்ஆசிரியர் சங்கத்தலைவர் என். இராமநாதன், செயலாளர் த. மகாசிவம், கல்வி-கலாசாரச் செயலாளர் சீ. மதியழகன் மற்றும் நெதர்லாந்து நாட்டு நொவிப் அமைப்பு அதிகாரிகளும் சென்றிருந்தனர். (25)

### இராணுவ...

நிலைகொண்டுள்ள படையினரது அடாவடித்தனங்களும் அச்சுறுத்தல்களும் இன்று நேற்றல்ல நெடுங்காலமாகவே தொடர்ந்து வருகின்றன. இதன் உச்சக்கட்ட வெளிப்பாடே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்கள்.

எனவே இத்தகைய குரோதப் போக்குடைய சிங்கள இராணுவம் நிலைகொண்டுள்ள இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் நாம் மீளக் குடியமர்ந்து இயல்பு வாழ்க்கை வாழ்தல் என்பது ஒருபோதும் சாத்தியப்படாது என்று குறிப்பிட்ட அப்பகுதி மக்கள் முகாம் உடனடியாக அகற்றப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் புத்தூர் கிழக்கு இராணுவ முகாமை அகற்றுவது சாத்தியப்படுமா? இல்லையா? என்ற முடிவை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக தமிழ்க்கூட்டமைப்பு தரும். இதற்காக கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் கூட்டமைப்பு பேச்சுக்களை நடாத்தும் என்றும் கூறினார்.(33)

### யாழ்....

கோடி ரூபாவிற்குமேல் பெறுமதி வாய்ந்த ஹெரோயின் வடபகுதி கடற்பரப்பில் வைத்துக்கைப்பற்றப்பட்டுள்ளது.

சிறிலங்காவுக்குக் கடத்தப்படும் போதைப்பொருளின் ஒரு சொற்ப அளவே கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்படாத பெருமளவு போதைப்பொருட்கள் சிறிலங்காவுக்கு கடத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

# இன்று இலவச சத்திர சிகிச்சை

கிளிநொச்சி மருத்துவர் பொன்னம்பலம் மருத்துவமனையில் இன்று காலை 8.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை விசேட சத்திரசிகிச்சை கிளினிக் நடத்தப்படவுள்ளது.

கேணியா,கழுத்து வீக்கம், மார்பகக் கட்டி ,வேறுகட்டிகள் என்பன சம்பந்தமான நோய்கள், சிறுநீர் கழிப்பதில் சிரமமுள்ளவர்கள் இந்தக் கிளினிக்கு வருகை தந்து பூரண சிகிச்சை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### நீதியான....

மன்றத்தீர்ப்புகளுக்கு கீழ்ப்படிய வைக்காமல். நீதி நியாயமானதான தேர்தலினை நடத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்பதற்கே இந்தச்சத்தியாக்கிரகம் நடைபெறுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போர்....

யிலும் காங்கேசன்துறையிலும் இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் கிடைக்காத பல உதவிகள் இராணுவத்திற்குக் கிடைத்துள்ளன. அமெரிக்காவில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் உதவிகள் கிடைக்கவில்லை. ஆனால், பல நாடுகளும், இராணுவங்களும் எமது இராணுவத்திற்கு உதவி வருகின்றன. ப்யிற்சிக்காகவும் அழைத்துச் செல்கின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை முப்படைகளையும் நாட்டின் இறைமையையும் பாதுகாக்கவே உள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையின் முதலாவது பிரிவின் மூன்றாவது உப பிரிவில் உள்ளதன் அடிப்படையில் தேசிய இறைமை ஆயுதப்படையினரால் பாதுகாக்கப்படும். விடுதலைப்புலிகளும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்கு அமைவாகவே நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்றார் ரணில் விக்கிரமசிங்க.

### சின்ன...

மட்டக்களப்பிலுள்ள ஈ.பி.டி.பி. குழுவின் முகாமிலிருந்து பத்திரிகை விநியோகத்திற்காக குறித்த முச்சக்கர வண்டியில் சின்ன ஊறணி பகுதி நோக்கி இவர்கள் அறுவரும் சென்று கொண்டிருந்த போது திருமலை வீதியில் வைத்து இவர்கள் மீது அடையாளம் தெரியாத இருநபர்கள் சரமாரியாக துப்பாக்கிச் சூடுகளை நடாத்தி விட்டு தப்பியோடியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த இவர்கள் அறுவரும் தற்போது மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### வடக்கு....

வாக்குச்சாவடிகள் கண்காணிப்புகளுக்காக கிராமசேவகர்களை நியமித்தல், இதன் மூலம் வாக்காளர்களை இலகுவில் அடையாளம் காணமுடியும். நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக கண்காணிப்பாளர்களை நியமிப்பது, வயதில் குறைந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டால் அவர்களை பொலிசார் விசாரணை செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, வாக்களிக்க வருபவர் தமது பெயர் மற்றும் முகவரியைத் தெரிவிக்கவேண்டும், வாக்குச்சாவடிகளில் உள்வருவோர் வெளிச்செல்வோருக்குப் போதுமான இடங்கள் ஒதுக்கப்படுதல், வாக்களிக்க வருவோருக்கு உரிய போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படும், வாக்களிக்க வருவோர்களை சோதனையிடும் போது படைத்தரப்பு அதிக நேரத்தை செலவழிக்காமல் தாமதமின்றி அவர்களை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்பனவே பத்து யோசனைகளாகும்.

இதேவேளை இந்த பத்து யோசனைகளையும்,நடைபெறும் சனாதிபதித் தேர்தல் தொடர்பான வழக்கில் சமர்ப்பிக்கப்போவதாகவும் தேர்தல் ஆணையாளர் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார். (32)

### சிங்களவரின்....

ஆதரிப்பதாகவும் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரிப்பதற்கு குறிப்பிடும்படியான காரணம் எதுவும் இல்லை என்போர் 7.9 வீதமாகவும் உள்ளனர்.

22 மாவட்டங்களில் 1,200 பேரின் கருத்துக்களின் அடிப்படையில் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை தமிழ் மக்கள் இந்தக் கருத்துக் கணிப்பில் இணைக்கப்படவில்லை.

பொதுவாக இனப்பிரச்சினையைக் கையாள்கிற தகுதி ரணிலுக்கு இருப்பதாகவும், வாழ்க்கைச் செலவீனத்தை அவர் குறிப்பிட்ட காலத்தில் குறைத்துவிடுவார் என்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குறுகிய காலத்தில் மீளமைப்புப் பணிகளையும் முழுமையடையச் செய்வார் என்றும் நம்புகின்றனர்.

சட்டம் ஒழுங்கு, சிறிலங்காவின் கலாச்சாரம், நாட்டின் பாதுகாப்பு, ஒரே மதக் கோட்பாடு ஆகியவற்றில் மகிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக மக்கள் உள்ளனர்.

வேலை வாய்ப்பின்மை ஒழிப்பு பிரச்சினையில் இரு வேட்பாளர் மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர். இருப்பினும் 17.2 வீதமானோர் எவராலும் வேலை வாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்று கருதுகின்றனர்.

அதேநேரத்தில் சிங்களவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ரணில் விக்கிரமசிங்கவை விட பாரிய நம்பிக்கை உள்ளது. அமைதி முயற்சிகள், ஆழிப்பேரலை மீளமைப்பு, வேலை வாய்ப்பின்மை, சட்டம், ஒழுங்கு, கலாச்சர பாதுகாப்பு, ஒரே மதக் கோட்பாடு ஆகியவற்றில் மகிந்த ராஜபக்ஷ மீது சிங்களவர் முழு அளவில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஆனால், இந்த விடயங்கள் அனைத்திலும் ரணில் விக்கிரமசிங்க மீது தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர்.

வேட்பாளர் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதை 48.7 வீதமானோர் எதிர்பார்க்கின்றனர். தலைமைத் தகுதி (46 வீதம்), அனுபவம் (39.9 வீதம்) கல்வி (39.1 வீதம்) என அவை இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். வேட்பாளரது மதம், இனம், குடும்பப் பின்புலம் ஆகியவற்றுக்கு குறைவான முக்கியத்துவமே அவர்கள் அளித்துள்ளனர். நகர்ப்புற வாக்காளர்கள் மத்தியிலேயே இந்த எண்ண ஓட்டம் இருக்கிறது.

15.2 வீதமானோர் யாரை ஆதரிப்பது என்பதில் முடிவுசெய்யவில்லை. பத்து வீதமானோர் யாரை ஆதரிப்போம் என்பதைத் தெரிவிக்க வில்லை என்றும் அந்த கருத்துக் கணிப்பு கூறுகிறது.

### தேர்தல்....

பேரன்சி இன்டர்நஷனல் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன்படி அரசாங்க ஊடக நிறுவனங்களின் தேர்தல் பிரச்சார பணிகளுக்காக பிணையோ உத்தரவாதமோ இன்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பாரிய கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இது வசூலிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பொது வளங்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும் என ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.

அரச கட்டடங்களும், அலரி மாளிகையும், உலங்கு வானூர்திகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரால் முற்றாக பயன்படுத்தப்படுகிறது.

எனினும் இதற்காக ஏற்படும் செலவுகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வித வழிகளும் காணப்படவில்லை.

அலரி மாளிகையில் அரசியல் கூட்டங்கள் நடத்தப்படுவதால் அதற்கு ஏற்படும் அனைத்து செலவீனங்களையும் வேட்பாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் இதுவரை அதற்கான செலவீனங்கள் நிவர்த்தி செய்யப்படவில்லை.

மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய தேர்தல் பிரச்சாரங்களுக்காக உலங்கு வர்னூர்திகளை பயன்படுத்தி வருவதால் அரசாங்கத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே அந்த செலவீனத்தை அவரே பொறுப்பேற்கவேண்டும் எனினும் வான்படை இந்த வசதியை இலவசமாகவே மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கி வருகிறது. அரசாங்கத்திற்கு பாரிய இழப்பு என்பதற்கு அப்பால் ஏனைய வேட்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் குறிப்பிட்டுள்ளது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.